June 2018

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

9ம் ஆண்டில்



# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

# iதமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

**June 2018**

சுவடி — 8
ஓலை — 4


## வணக்கம் பல

**வ**ரலாற்றில் நிகழ்ந்த பெரிய மாற்றங்கள் எல்லாம் ஒரு சிறிய பொறியின் தோற்றமாகவே வெளிப்படும். அந்தப் பொறியே பின்னர் காட்டுத் தீயெனப் பரவிப் பற்றி ஒரு பெரும் புரட்சியென மாறி வரலாற்றைப் புரட்டிப் போடும் நிகழ்வாக அமைந்துவிடும்!

அரசுக்கு எதிராக மக்கள் ஒரு போராட்டத்தில் இறங்கும்போது, அதை நீர்த்துப் போகச் செய்ய வேண்டுமானால், அரசாங்கத்துக்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. ஒரு நல்ல அரசு என்பது போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே அதன் சிக்கல்களைக் களைந்தெறிய வேண்டும்.

இந்தியா போன்ற நாடுகளில் போராட்டம் என்பது எவ்வளவு அறவழியில் நடந்தாலும் சரி, தீவிர வழியில் நடந்தாலும் சரி, அடக்குமுறை மட்டுமே அரசின் இறுதி நிலைப்பாடாகவே இருந்து வருவது மிகவும் வேதனைக்குரியது.

நூறு நாட்களாய் நடந்து வந்த ஒரு அமைதிப் போராட்டம் தமிழகத்தில் பெரும் உயிர்பலி வாங்கிய சோகத்துடன் முடிந்திருக்கிறது. யாரோ ஒரு தனிமனிதன் லாபாநோக்குக்கு ஒரு மாவட்டமே சீரழிகிறது.

22 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வந்த ஒரு மக்கள் போராட்டத்தைக்கொச்சைப்படுத்தும் விதமாக நடந்து முடிந்திருக்கும் ‘தூத்துக்குடி ஆலை மூடும் போராட்டம்’ தமிழக அரசின் ஆளுமை இல்லா தலைமையின் காலங்கடந்த ஞானோதயத்தால் மக்களின் உணர்வுப் போராட்டமாக மாறியிருக்கிறது. போராட்டத்தின் வெற்றியாக தற்போது ஆலைக்கு மூடுவிழா நடந்திருக்கிறது என்றாலும், இது பின்னாளில் நீதியின் பெயரால் மாற்றி எழுதப்படும் கண்துடைப்பு நாடகமாக இருந்துவிடக் கூடாது.


ஆட்சி வெறியால் மீண்டும் ஒரு முறை உயிர்நீத்த தமிழ் உறவுகளின் துன்பத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் முகத்தான் அஞ்சலியை முன்வைக்கிறது ‘அய் தமிழ்’.

போராட்டங்கள் குறித்த செய்திகளுடனும், கவிதைகளுடனும், கட்டுரைகளுடனும், காலத்தின் பதிவுகளைக் கண்ணாடிபோலக் காட்டிப் கல்வெட்டுப் பதிவுகளாக்கியபடி வெளிவரும் இதழை வரவேற்று வாசித்து வருக! கருத்துப் பகிர்வுகளைத் தருக!

நேசப்பகிர்தலுடன்

**ஆசிரியர் குழு**

## உள்ளே...




காலம் கடந்து வந்த ஞானம்

தொடரும் பேச்சு!

பிறப்பு சுதந்திரம்

தண்ணீரிலும் அரசியல்

தடுமாறும் சித்தாந்தம்

அறிவோம் தமிழர் பெருமை

மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

சிவகாமியின் சபதம்

கல்லாமை இல்லாமை

மருத்துவ தமிழ்

அனுபவம் முதுமை



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar
Vijayarajah

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*



*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# காலம்

## கடந்து

இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள மாநிலம் தூத்துக்குடி மாவட்டம் மீளவிட்டானில் அமைந்துள்ள ஒரு தொழிற்சாலைதான் ஸ்டெர்லைட் ஆலை.

இது சுரங்கத்தொழில் மற்றும் உலோகங்களில் உலகளவில் ஈடுபடும் வேதாந்தா ரிசோர்செசு நிறுவனத்தின் அமைப்பாகும். 1991 — 1996 வரையிலான, நரசிம்மராவ் தலைமையிலான இந்திய தேசிய காங்கிரஸ் ஆட்சி காலத்தில், செம்பு உருக்கும் தொழிற்சாலைக்காக 1993ல் அடிக்கல் நாட்டப்பட்டது. இங்கு செம்பு கம்பி மற்றும் கந்தக அமிலம் பாஸ்பரிக் அமிலம் ஆகியன உற்பத்தி செய்யப்படுகின்றது.




ஸ்டெர்லைட் ஆலை நிலத்தடி நீர், காற்று மண்டலம் ஆகியவற்றை மாசுபடுத்தி பெரும் கேடினை ஏற்படுத்தும் என்பதால் ஆலையை அகற்றக்கோரி சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் போராடி வந்தனர்.

ஆலையில் இருந்து விசவாயு கசிவு ஏற்பட்டதால் அதைச் சுற்றி இருந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருதி ஆலையை மூட மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் உத்தரவிட்டது.

இந்த நிறுவனத்திலிருந்து இதுவரை 82 முறை விஷவாயுக் கசிவு ஏற்பட்டுள்ளதாக தமிழக அரசு குற்றம் சாட்டியது.

அதன்படி, அப்போதைய தமிழக முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதாவின் ஆட்சிக்காலத்தில் , மார்ச் 30, 2013 அன்று ஸ்டெர்லைட் ஆலை இயக்கப்படுவது நிறுத்தப்பட்டு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் குழுவினர் ஆலைக்கு சென்று சீல் வைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அனுமதிக்கப்பட்டதற்கு அதிகமான கந்தக—டை—ஆக்சைடு எனும் நச்சு வாயு இவ்வாலையில் இருந்து வெளியானதால், ஆலையைச் சுற்றியுள்ள

## வந்த

# ஞானம்

பல கிலோமீட்டர் தூரத்திற்கு பொதுமக்களுக்கு மூச்சுத் திணறல், கண் எரிச்சல், தொண்டை வலி முதலான பாதிப்புகளும் ஆலைப் பகுதியில் இருந்த மரங்கள் கருகிப் போதலும் ஏற்பட்டன.


கூறி உச்ச நீதிமன்றம் ஸ்டெர்லைட் நிறுவனம் மீண்டும் இயங்க அனுமதி கொடுத்தது. பின்னர் இயங்கிவரும் இந்த ஆலை இந்திய தொழில் கூட்டமைப்பிடம் இருந்து மூன்று நட்சத்திர விருதைப் பெற்றது.




அதன் பின் மன்மோகன் சிங் தலைமையிலான இந்திய காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலான, 2013 ஆம் ஆண்டு தனது தீர்ப்பில், சுற்றுப்புறச் சூழல் மாசுகேட்டை இந்த நிறுவனம் ஏற்படுத்தி இருப்பதைக் கூறி, அக்குற்றங்களுக்காக மூடுவது என்பது பொதுநலனுக்கு உகந்தது அல்ல என்றும்

இந்நிலையில், தூத்துக்குடியில் வாழும் மக்கள் இத்தொழிற்சாலை தொடர்ந்து செயல்பட்டால் உயிர்வாழ தகுதியற்ற நிலை ஏற்படும் என்று, இத்தொழிற்சாலையை மூடக்கோரி பிப்ரவரி 05, 2018ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியரிடம்

கோரிக்கை மனுவைக் கொடுத்தனர். பின்பு 40 தினங்களாக குமரெட்டியார்புரம் மக்கள் மரத்தடியில் அமர்ந்து போராட்டம் செய்தனர். அதனைத் தொடர்ந்து மார்ச் 25, 2018 அன்று தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் கடையடைப்பு போராட்டம் மற்றும் சிதம்பர நகர் பேருந்து நிறுத்தம் அருகே ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என 20,000க்கும் அதிகமானோர் இத்தொழிற்சாலையை மூடக்கோரி போராட்டம் நடத்தினர்.




தூத்துக்குடி மாவட்ட மீளவிட்டான் கிராமத்தில் இயங்கி வரும் வேதாந்தா குழுமத்தைச் சேர்ந்த ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை அலகு —1 மார்ச்சு 31, 2018க்குப் பிறகு தொடர்ந்து நடத்துவதற்கு விண்ணப்பித்திருந்தது. அந்த விண்ணப்பத்தை பரிசீலித்த போது தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் நிபந்தனைகளை அந்தக் குழுமம் சரிவர நிறைவேற்றவில்லை என்ற காரணத்தினால் ஏப்ரல் 9, 2018 நாளிட்ட குறிப்பாணை மூலம் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வேதாந்தா குழுமத்தின் விண்ணப்பத்தினை நிராகரித்துள்ளது. இந்த முடிவை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் முகமது நசிமுத்தின் கூறியுள்ளதாகவும் அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

மே 22, 2018 அன்று நூறாவது நாளான போராட்டத்தில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை பொதுமக்கள் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் போலீஸ் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் 17 வயது பெண் உட்பட 11 பேர் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தால் ஆட்சியர் மீதும், முதலமைச்சர் மீதும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த துப்பாக்கிச் சூடு மக்கள் பாதுகாப்பிற்காக நடந்தது என்று தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி தரப்பில் கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து மே 23, 2018 அன்று தூத்துக்குடி அண்ணா நகரில் காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தியதில் மேலும் ஒருவர் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தால் காவல்துறையினர் 132 பேரை கைது செய்துள்ளனர்.

தமிழ்நாட்டையே பதைபதைக்க வைத்திருக்கிறது தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு. ராகுல் காந்தி குறிப்பிட்டிருப்பதுபோல அரச பயங்கரவாதமே இது. துப்பாக்கியுடன் ஒரு போலீஸ்காரர் வெள்ளை வேனில் குறிபார்த்தபடி படுத்திருக்கும் காணொலிக் காட்சி, மக்கள் மீதான தமிழக அரசின் கொடூர முகத்தை வெளிக்கொண்டு வந்திருக்கிறது. முதல் நாள் ஒன்பது உயிர்கள், மறு நாள் ஒருயிர் என்று பத்து உயிர்கள் இதுவரை பறிபோயிருக்கின்றன.

ம.தி.மு.க தலைவர் வைகோ உட்பட பலரும் “ஜாலியன் வாலாபாகில் பிரிட்டிஷ் ராணுவம்

உயிர்களை வேட்டையாடியதைப் போல தமிழகக் காவல் துறையும் மனித உயிர்களைப் பலிவாங்கியிருக்கிறது” என்று குமுறுகிறார்கள்.

ஜாலியன் வாலாபாகை நினைவுகூர்கையில், இந்த ஒப்பீட்டின் பின்னுள்ள நியாயத்தையும் நடந்திருப்பது எத்தனை பெரிய கொடூரம் என்பதையும் புரியவைக்கும். பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான புரட்சியை அடக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட ரவுலட் சட்டம், மக்களின் உரிமையை முற்றிலும் பறிப்பதாக அமைந்தது.

இச்சட்டத்துக்கு எதிராக அமைதியான முறையில் போராடிய மக்கள், 1919 ஏப்ரல் 13—ல் பஞ்சாபின் அமிர்தசரஸ் நகரில் பொற்கோயிலுக்கு அருகில் உள்ள ஜாலியன் வாலாபாக் திடலில் கூடியிருந்தனர். அப்போது 50 கூர்க்கா படையினருடன் அங்கு வந்தார் ஜெனரல் டயர். போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சுட்டுத்தள்ளுமாறு உத்தரவிட்டார். கொடூரமான அந்தப் படுகொலைச் சம்பவத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 376 என்று பிரிட்டிஷ் அரசு சொன்னாலும், 1,000—க்கும் மேற்பட்டோர் இறந்தனர் என்று காந்தி தலைமையிலான காங்கிரஸ் தலைவர்கள் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்தது.

மக்கள் மீது அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் கொந்தளித்தனர். பிரிட்டிஷ் அரசு வழங்கிய ‘நைட்’ பட்டத்தைத் துறந்தார் ரவீந்திரநாத் தாகூர். அதுவரை, பிரிட்டிஷ் அரசின் ஒரு குடிமகன் என்று தன்னைக் கருதிக்கொண்டு, அதனளவில் பிரிட்டிஷாரை எதிர்த்துவந்த காந்தி, முற்றிலும் பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க இந்தச் சம்பவம் காரணமாக அமைந்தது. ‘கைசர் — இ — ஹிந்து’ பதக்கத்தைத் திருப்பிக் கொடுத்தார் காந்தி. 1920—ல் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார். நேருவைத் தீவிர அரசியல் நோக்கிச் செலுத்தியதும் அதுவே. பகத் சிங்கைச் செலுத்தியதும் அதுவே. ஜெனரல் டயரை நோக்கி துப்பாக்கிச் சூடு குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது, அவர் சொன்ன பதில்தான் இங்கே நினைவுகூர வேண்டியதில் முக்கியமானது: “மக்களைச் சுடவில்லை என்றால், கடமையிலிருந்து தவறியவனாவேன் என்று நினைத்தேன்!”




ஆனால் இப்போதைய சம்பவத்துக்கு, வன்முறையை கட்டுப்படுத்துவதற்காக துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தூத்துக்குடி காவல்துறை தெரிவித்தது. “துப்பாக்கிச் சூடு திட்டமிட்டு நடக்கவில்லை என்றும் சமூக விரோதிகள் ஊடுருவி போராட்டத்தை தவறாக வழிநடத்தியதால் இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடந்தன” என்றும் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டினார்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்படும்போது, கூட்டத்தைக் கலைப்பது மட்டும்தான் நோக்கமாக இருக்க வேண்டும்; ஆட்களைக் கொல்வது அதன் நோக்கமல்ல. ஆகவே முடிந்த அளவுக்கு

இடுப்புக்குக் கீழே சுடும்படி வலியுறுத்தப்படுகிறது. இதற்கான அதிகாரத்தை இந்திய தண்டனைச் சட்டம் 100, 103 ஆகியவை அளிக்கின்றன.

பொதுவாக இம்மாதிரியான சூழலில் அவர்கள் பலமுறை சுட்டுவிடுவார்கள். ஆகவே அந்தத் தருணங்களில் ஆட்டோ துப்பாக்கிகள் பயன்படுத்தப்படும். ஆனால், கலவரக்காரர்களைப் பொறுத்தவரை பெட்ரோல் குண்டோ, கற்களோ, கட்டைகளோதான் பயன்படுத்துவார்கள். அவர்களுக்கு எதிராக இம்மாதிரி துப்பாக்கியை காவல்துறை ஏன் பயன்படுத்தியது என்பது தெரியவில்லை.




'பெல்லட்' எனப்படும் குண்டுகள்தான் முதலில் பயன்படுத்தப்படும். அவற்றைப் பயன்படுத்தி ஒரு முறை சுட்டால், அந்த குண்டு சிதறி, பலருக்கும் காயம் ஏற்படும். ஆனால், யாருக்கும் உயிர்ச் சேதம் ஏற்படாது. தூத்துக்குடி கலவரத்தைப் பொறுத்தவரை, அம்மாதிரி குண்டுகளை அதிகம் பயன்படுத்தியிருந்தால் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்காது எனத் தோன்றுகிறது. ஆனால், அங்கு நிலவரம் எப்படியிருந்தது என்பதை அங்கிருக்கும் அதிகாரிகள்தான் முடிவுசெய்ய முடியும்" என்கிறார் சித்தன்னன்.

தவிர, இம்மாதிரி கலவரங்களைக் கட்டுப்படுத்த சாதாரண துப்பாக்கிகளையே பயன்படுத்தும். செமி — ஆட்டோ துப்பாக்கிகளோ, தானாக குண்டு நிரப்பும் ஆட்டோமேடிக் துப்பாக்கிகளோ பயன்படுத்தப்படுவதில்லை.

ஊடகங்களில் வந்த வீடியோக்களைப் பார்த்தால், ஆட்டோ துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டிருப்பது தெரிகிறது. பொதுவாக தீவிரவாதிகளுடனான மோதலில்தான் இம்மாதிரி துப்பாக்கிகள் பயன்படுத்தப்படும். காரணம், நாம் சாதாரண துப்பாக்கி பயன்படுத்தினால், நாம் ஒவ்வொரு முறையும் குண்டு நிரப்புவதற்குள்ளாக

ஆனால், இதையெல்லாம் அங்கிருக்கும் நிலவரத்தை வைத்துத்தான் முடிவெடுப்பார்கள். அங்கே நிலவரம் எப்படி இருந்தது என்பது சரியாகத் தெரியவில்லை.

"போராட்டத்தில் ஈடுபட்டுவந்த மக்களின் முக்கியமான கோரிக்கையே, ஸ்டெர்லைட் ஆலையை மூட வேண்டும் என்பதுதான். தமிழக அரசின் முடிவும் அதுதான். அதன் ஒரு பகுதியாக ஸ்டெர்லைட் ஆலைக்கான மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. மேலும், சுற்றுச்சூழல் துறையின் தடையில்லாச் சான்றும் அந்த ஆலைக்கு வழங்கப்படவில்லை. இதனால், அந்த ஆலை மீண்டும் செயல்பட வாய்ப்பு இல்லை. ஸ்டெர்லைட் ஆலை இயங்கக் கூடாது என்பதுதான் தமிழக அரசின் முடிவு" என முதலமைச்சர் பழனிச்சாமி, செய்தியாளர் சந்திப்பிலேயே தெளிவாகக் கூறியிருந்தார்.

சொன்னதுபோலவே தற்போது ஆலையை இழுத்து மூடச் சொல்லி உத்தரவும் வந்துவிட்டது.




முதலமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்களின் உணர்வுகளுக்கும் கருத்துகளுக்கும் மதிப்பு அளித்து ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட முடிவெடுத்து அதற்கான அரசாணை வெளியிட்டுள்ளதாக முதலமைச்சர் கூறியுள்ளார்.

இதையடுத்து, 22 ஆண்டுகளாக இயங்கி வந்த ஸ்டெர்லைட் ஆலையின் கதவுகள் பூட்டப்பட்டு, மாவட்ட ஆட்சியர் சந்தீப் நந்தூரி முன்னிலையில் சீல் வைக்கப் பட்டது.

இவ்வளவுக்குப் பிறகும், ஆலையின் நிர்வாகம், "திட்டமிட்ட பராமரிப்பு பணிக்காக தூத்துக்குடி தொழிற்சாலையில் உருக்கு பணிகள் மார்ச் 25, 2018 முதல் நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் உருக்கு பணிகளை துவக்குவதற்காக ஒப்புதல் வேண்டி புதுப்பித்தலுக்கான விண்ணப்பத்தை உரிய நேரத்தில் வழங்கினோம். எங்களது விண்ணப்பமானது மேற்கொண்டு விளக்கங்கள் வேண்டி நிராகரிக்கப்பட்டதால் ஆலை மூடப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் இராண்டாவது காப்பர் உருக்காலை திறப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி புதிப்பித்தலுக்காக நாங்கள் விண்ணப்பித்திருந்தோம்.இது பொது விசாரணைக்கு பிறகு செயலாக்கப்படும் என நிறுவனத்துக்கு நேற்றைய தினம் தெரிவிக்கப்பட்டது. செப்டம்பர் 23, 2018 அன்று அல்லது அதற்கு முன்பாக இந்த விண்ணப்பம் மீது முடிவெடுக்கப்படும்." என்று கூறியுள்ளது.

தமிழக அரசு இந்நிறுவனத்தின் மீது தடை விதிக்கப்பட்ட நிலையில், வேதாந்தா நிர்வாகம் இந்தத் தடையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கவும் வாய்ப்புகள் உள்ளது.

உச்ச நீதிமன்றம் மக்களின் போராட்டம் மற்றும் தமிழக அரசின் முடிவை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் இந்நிறுவனத்தை நிரந்தரமாக மூடவும் முடியும்.

ஸ்டெர்லைட் ஆலை விஷயத்தில் ஆட்சியாளர்கள், நிர்வாகத்துறை, நீதித்துறை மூன்றுமே சுற்றுச்சூழலுக்கும், மக்களின் உயிருக்கும் முக்கியத்துவம் அளிக்காமல் ஆலையின் நலன் குறித்து மட்டுமே கவலைப்பட்டுள்ளன.

இந்த மூன்று தூண்களும் சனாநயாகத்தைத் தாங்கிப்பிடிப்பதற்கு மாறாக வேதாந்தா என்னும் கார்ப்பரேட் நிறுவனத்தைப் பாதுகாப்பதிலேயே ஆர்வமாக இருந்துள்ளன. ஒரு அமைப்பு செய்யும் தவறை இன்னொரு அமைப்பு தடுத்து நிறுத்தவோ திருத்தவோ முயற்சிக்கவில்லை.

ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டங்களும், இப்போது தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளும் ஒரு உண்மையைத் தெளிவுபடுத்தியுள்ளன: நவ தாராளமயக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படும் இந்தச் சூழலில் தமது நிலத்தையும் நீரையும் உயிரையும் காப்பாற்றிக்கொள்ள மக்கள் தமது போராட்டங்களைத் தவிர வேறு எதையும் நம்பமுடியாது என்பதே அது.


Stand
For
Thothukudi
BAN STERLITE
Sterlite
USA
BAN-STERLITE
மினசோட்டா


भारत भवन
INDIA KILLS TAMILS
FOR A CORPORATE VEDANTA
DELETE




KCM VEDANTA
POISONING ZAMBIA
VEDANTA'S
COPPER
LOOTED
RIVER
POLLUTED
VEDANTA
IN ZAMBIA
VEDANTA
$16.6 billion
TOXIC DEBT
Monster
POISONED
WATER
BIRTH
DEFORMITIES
Vedanta's
LEGACY in
ZAMBIA


பேரழிவு ஸ்டெர்லைட்டை தடை செ
நாசகார ஸ்டெர்லைட்டே வெ


SFI

# கருத்துப் ப(ா)டம்




# சொல்றாங்க... சொல்றாங்க...



"போராட்டங்கள் வன்முறையின்றி இருக்க வேண்டும். போலீசாரும் தனது வலிமையைப் பயன்படுத்த கூடாது. தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவத்துக்கு தீர்வு கிடைக்க வேண்டும். மக்களிடம் பேச வேண்டும்."

**– ஐ.நா. சபை சுற்றுச் சூழல் தலைவர் எரிக் சோல்ஹெய்ம்.**

*(சரியா சொன்னீங்க! ஆனா இங்கே உள்ள சில தலைவர்களுக்கு இது புரியவே இல்லேயே ஐயா!)*



"பா.ஜ.க.வை வீழ்த்துவதற்காக, ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான அரசியல் தலைவர்கள் அனைவரும் ஓரணி திரண்டுள்ளனர். தங்களைக் காத்துக்கொள்ள இன்றைக்கு கைக்கோர்க்க வேண்டிய நிர்பந்தம் உருவாகியுள்ளது"

**மோடி.**

*(ஆமா, உங்க ஆட்சியிலே மக்களும் தங்களைக் காத்துக் கொள்ள ஓரணியில்தான் நிற்கவேண்டியுள்ளது புண்ணியவானே!)*



"தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை மூடல் என்பது ஒரு கண்துடைப்பு நாடகம்!"

**மு.க.ஸ்டாலின்**

*(ஆலை வருகிறதுக்கு காரண கர்த்தாவே நீங்கதானே! உங்களுக்கு தெரியாதா எது கண்துடைப்பு என்று?)*



ஸ்டெர்லைட் ஆலை மூடல் தமிழகத்தின் எதிர்கால அரசியல் தூத்துக்குடி மக்களால் மாற்றப்பட்டுள்ளது."

**கமல்ஹாசன்**

*(மக்கள் இன்னும் நிறைய மாற்றங்களைச் செய்யத்தான் போகிறார்கள். பார்க்கத்தான் போறீங்க!)*




## அமெரிக்காவுக்கு கிம் யோங் சால் வருகை தருவதை உறுதிப்படுத்தினார் அதிபர் டிரம்ப்

அதிபர் டிரம்ப் மற்றும் கிம் ஜாங் உன் இடையேயான சமாதானத்தை முன்னெடுக்கும் உச்சிமாநாடு நடப்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளநிலையில் அதற்குத் தயாராவதற்காக வடகொரியாவின் மிகமூத்த உயர் அதிகாரிகளில் ஒருவர் அமெரிக்காவுக்கு பயணிக்கவுள்ளார்.

அமெரிக்காவுக்கு கிம் யோங் சால் வருகை தரவுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளார் அதிபர் டிரம்ப்.



''வடகொரியாவுக்கு நான் எழுதியுள்ள கடிதத்திற்கு வலுவான நல்ல பதில் கிடைத்திருக்கிறது. வடகொரியாவின் துணை தலைவர் கிம் யோங் சால் தற்போது நியூயார்க்குக்கு வந்துகொண்டிருக்கிறார். உச்சிமாநாட்டை கருத்தில்கொண்டு தற்போது கூட்டங்கள் நடைபெறுகின்றன.'' என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

ஜெனெரல் கிம் யோங் சால் அமெரிக்காவுக்கு பெய்ஜிங் வழியாக வரவுள்ளார் என தென் கொரியாவின் செய்தி நிறுவனமான யோன்ஹாப் தெரிவித்துள்ளது.

2000—த்திற்கு பிறகு அமெரிக்காவுக்குச் செல்லும் வடகொரியாவின் மிக மூத்த அதிகாரி என்ற பெயரை பெறுகிறார் யோங் சால்.

அதிபர் டிரம்ப் மற்றும் வட கொரிய தலைவர் கிம் சந்திக்கும் உச்சிமாநாட்டிற்கான தயாரிப்பின் ஒரு பகுதியாக இது இருக்கக்கூடும்.

கடந்த வாரம் பேச்சுவார்த்தை ரத்து செய்யப்படுவதாக டிரம்ப் அறிவித்ததிலிருந்து இம்மாநாடு திட்டமிட்டபடி நடக்குமா என சந்தேகம் எழுந்தது.

ஆனால் திட்டமிட்டபடி சிங்கப்பூரில் ஜுன் 12ஆம் தேதி மாநாட்டில் பங்கேற்க இரு நாடுகளும்




தயாரிப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

அமெரிக்க அதிபர் பதவியிலிருப்பவரை வடகொரிய தலைவர் சந்திப்பது இதுவே முதல்முறையாகும்.

புதன்கிழமையன்று ஜெனெரல் கிம் நியூயார்க்குக்கு விமானம் வாயிலாக பயணிக்க திட்டமிட்டுள்ளார் என பெய்ஜிங்கில் உள்ள சீன அதிகாரிகளிடம் பேசிய பிறகு செய்தி வெளியிட்டுள்ளது தென்



கொரிய செய்தி முகமையான யோன்ஹாப்.

முன்பே திட்டமிட்டபடி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வடகொரியா ஆர்வமுடன் இருப்பதை ஜெனரல் கிம் அமெரிக்காவுக்கு பயணிக்கவுள்ள நிகழ்வு காட்டுகிறது.

### யார் இந்த ஜெனெரல் கிம் யோங் சால்?

72 வயதாகும் கிம் யோங் சால் தென் கொரியாவில் ஒரு சர்ச்சைக்குரிய நபராக பார்க்கப்படுகிறார். மேலும் இதற்கு முன் இரு கொரிய நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தராக இருந்துள்ளார்.

ராணுவ உளவுப்பிரிவு தலைவராக இவர் பணியாற்றிய காலத்தில், 46 மாலுமிகளை கொன்ற தென் கொரிய போர்க்கப்பலை தாக்கி மூழ்கடித்தது மற்றும் சோனி பிக்சர்ஸை ஹேக்கிங் செய்தது உள்ளிட்ட தென் கொரிய இலக்குகள் மீது நடந்த தாக்குதல்களின் பின்னணியில் இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டார்.

இந்நிகழ்வுகள் காரணமாக அமெரிக்கா இவர்மீது 2010 மற்றும் 2015 ஆண்டுகளில் தனிநபர் மீதான தடையை விதித்தது.

2016—ல் ஆணவ நடத்தைக்காக

தண்டிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோதிலும் ராணுவத்திலும் கட்சியிலும் தலைமை பொறுப்புகளைத் தொடர்ந்தார்; மேலும், வடகொரியாவின் ஆட்சிப் பிரதிநிதி குழுவின் தலைவராக தென் கொரியாவில் நடந்த பியோங்சாங் குளிர்கால ஒலிம்பிக்கின் நிறைவு விழாவில் கலந்து கொண்டார்.

நடந்ததையடுத்து சிங்கப்பூரில் இந்தச் சந்திப்பு நிகழவுள்ளது. இரு அதிபர்களுக்கு இடையே நடந்த சந்திப்பில் அமெரிக்க — வடகொரிய உச்சிமாநாடு நடத்தப்படவேண்டுமென இருவரும் முடிவெடுத்தனர்.

அமெரிக்கா — தென் கொரியா இடையேயான உச்சிமாநாடு நடக்குமா என்பது இன்னமும்



தெளிவாக தெரியவில்லை ஆனால் இப்போது நடக்கும் பேச்சுவார்த்தையில் பியோங்கியாங்கின் அணு சக்தி திட்டம் குறித்து பேசப்படும் மேலும் கொரிய தீபகற்பத்தில் பதற்ற நிலையை குறைப்பதற்கான வழியாகவும் இருக்கும்.

வடகொரியாவின் தலைவர்கள் பக்கத்தில் மிகவும் செல்வாக்கான நபராக இருக்கிறார் சால். சீனா மற்றும் தென் கொரிய தலைவர்களுடன் சந்திப்புகளில் பங்கேற்றுள்ளார மற்றும் பியோகியாங்கில் அமெரிக்க அரசு செயலாளர் மைக் பாம்பியோவையும் சந்தித்துள்ளார்.

இவாங்கா டிரம்ப் அருகில் ஜெனெரல் கிம்

பியோங்சங்கில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் நிறைவு விழாவுக்கு இவர் அனுப்பப்பட்டிருந்தார். அங்கு டிரம்பின் மகளும் ஆலோசகருமான இவாங்கா டிரம்புக்கு அருகில் உட்கார்ந்திருந்தார்.

செவாய்க்கிழமையன்று சிங்கப்பூரில் வட கொரிய அதிகாரிகளை அமெரிக்காவில் இருந்து ஒரு குழு சந்திக்கவுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பன்முன்ஜோமில் அதிபர் கிம்மும், தென் கொரிய அதிபர் மூன் இடையே வியப்பூட்டும் ஒரு சந்திப்பு கடந்த வார இறுதியில்

இந்தச் சந்திப்பு உறுதிப்படுத்தப்பட்டால் கடந்த 2000—த்தில் வாஷிங்டனுக்கு வடகொரியாவின் உயர் ராணுவ அதிகாரியான ஜோ ம்யோங் ரோக் சென்ற பிறகு அமெரிக்காவுக்குச் செல்லும் வட கொரியாவின் உயர் அதிகாரியாக ஜெனெரல் கிம் இருப்பார்.

ஜோ ம்யோங் ரோக் அமெரிக்காவுக்குச் சென்றபோது அப்போதைய அதிபர் பில் கிளின்டனைச் சந்தித்தார் மேலும் பென்டகனில் நுழைந்த முதல் வடகொரியா அதிகாரியாகவும் இருந்தார்.

## டிரம்ப் – கிம் உச்சிமாநாடு: தென் கொரிய அதிபர் கலந்து கொள்ள வாய்ப்பு

டிரம்ப் — கிம் இடையிலான உச்சிமாநாடு

நடைபெற்றால், அதில் தென் கொரிய அதிபர் முன் ஜே—இன் கலந்து கொள்வார் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

அமெரிக்கா — வட கொரிய தலைவர்கள் சந்திக்கும் உச்சிமாநாட்டை திட்டமிட்டபடி நடத்த பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வரும் நிலையில்,



அதில் முன்னேற்றம் இருப்பதை பொறுத்தே முன் ஜே—இன் கலந்து கொள்வாரா இல்லையா என்பது தெரியும் என்று கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கா — வட கொரியா உச்சிமாநாடு ஜுன் 12ஆம் தேதி சிங்கப்பூரில் நடத்த திட்டமிடப்பட்டது.

“வெளிப்படையான விரோதத்தை” வட கொரியா வெளிபடுத்துவதாகக்கூறி அமெரிக்கா மற்றும் வட கொரியா இடையே நடைபெறவிருந்த பேச்சுவார்த்தையை ரத்து செய்தார் அதிபர் டிரம்ப்.

டிரம்ப்—கிம் பேச்சுவார்த்தைக்கான தயாரிப்பில் அமெரிக்கா — வட கொரியா. உச்சிமாநாடு நடைபெற வட கொரியாவுடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை நடைபெற்றது — டிரம்ப்

சிங்கப்பூரில் நடைபெறுவதாக திட்டமிடப்பட்ட அந்த பேச்சுவார்த்தை நடைபெற்றால் அமெரிக்க அதிபர் வட கொரிய அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக அதுவே முதல்முறையாக இருக்கும்.

இருநாட்டு தலைவர்களும் கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை குறைப்பது குறித்தும், அணு ஆயுதங்கள் அற்ற கொரிய தீபகற்பம் உருவாக்குவது குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, அமெரிக்க துணை அதிபர் மைக் பென்ஸை “அரசியல் போலி” என வட கொரிய வெளியுறவுத்துறை துணை அமைச்சர் சோ சன் ஹுய் கூறியிருந்தார்.

எனினும், இந்த பேச்சுவார்த்தை சீர்குலைவதன் தொடக்கமாக இருந்தது அதிபர் டிரம்பின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜான் போல்டன். வட கொரியா என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்ற அமெரிக்க எதிர்பார்ப்பை விண்ணளவுக்கு உயர்த்தியவர் அவரே.

இந்நிலையில், திட்டமிட்டபடி இந்த பேச்சுவார்த்தையை நடத்த இரு தரப்பினரும் முயற்சிகள் எடுத்து வருகின்றன.

அதன்படி உச்சிமாநாட்டிற்கு ஏற்பாடுகள் செய்ய, அமெரிக்காவில் இருந்து வட கொரியாவிற்கு அதிகாரிகள் குழு சென்றுள்ளதாக ஞாயிற்றுக்கிழமையன்று டிரம்ப் தெரிவித்தார்.

வட கொரியா — அமெரிக்கா இடையே உச்சிமாநாடு நடைபெறும் என்றால், சிங்கப்பூரில் கிம் மற்றும் டிரம்புடன் முன் கலந்து கொள்வார் என தென் கொரியாவின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனமான யோனப் தெரிவித்துள்ளது



# பிறப்பு

## அயர்லாந்து கருக்கலைப்பு தடை சட்டத்தில் மாற்றம் கொண்டுவர பெருவாரியான ஆதரவு

அயர்லாந்து குடியரசில் கருக்கலைப்பு தடைச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவது தொடர்பான வாக்கெடுப்பில் 66.4 சதவீத வாக்குகள் ஆதரவாகவும், எதிராக 33.6 சதவீத வாக்குகளும் பெறப்பட்டுள்ளன.




தற்போதைய சட்டப்படி தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் மட்டுமே கருக்கலைப்பு செய்யப்படும்.

முன்னதாக கருக்கலைப்பு தடைச் சட்டதில் மாற்றம் கொண்டுவருவதற்கு ஆதரவாக பெருவாரியான வாக்குகள் பெற்றுள்ளதை சுட்டிக்காட்டிய அயர்லாந்து பிரதமர் லியோ வரத்கர் தனது நாட்டின் “அமைதியான புரட்சி” இது என்று பாராட்டியுள்ளார்.

கருக்கலைப்பு சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதற்கு ஆதரவாக பெருவாரியான வாக்குகள் பெறப்பட்டுள்ளன என்று கருத்தறியும் வாக்கெடுப்புக்கு பிந்தைய கருத்து கணிப்பில் தெரிய வந்தவுடன் அவர் இதனை தெரிவித்தார்.

தாராளமயமாக்கலுக்கு ஆதரவாக பிரசாரம் மேற்கொண்ட அயர்லாந்து பிரதமர், கடந்த 20 வருடங்களாக அயர்லாந்தில் நடைபெற்று வந்த அமைதி புரட்சியின் உச்சக்கட்டத்தைதான் நாம் பார்க்கிறோம் என தெரிவித்தார்.

தங்களது சுகாதாரம் குறித்து பெண்கள் தங்களது முடிவுகளையும், தகுந்த வாய்ப்புகளையும் தேர்ந்தெடுப்பார்கள் என அயர்லாந்து வாக்காளர்கள் நம்புகிறார்கள் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

# சுதந்திரம்

கருவில் உள்ள குழந்தைக்கும், கருவை சுமக்கும் பெண்களுக்கு உள்ளது போன்றே வாழ்வுரிமை உண்டு என்பதை கூறும் எட்டாவது சட்ட வரைவை நீக்க வேண்டுமா அல்லது தக்க வைக்க வேண்டுமா என மக்கள் தங்களது வாக்குகளை அளித்தனர்.

தற்போதைய சட்டப்படி தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் மட்டுமே கருக்கலைப்பு செய்ய முடியும். பாலியல் வன்புணர்வு, ஆபத்தான கருச்சிதைவு ஆகிய சூழல்களில் கருக்கலைப்பு செய்ய இயலாது.




இந்த வருடத்தின் இறுதியில் புதிய கருக்கலைப்பு சட்டம் இயற்றப்படும் என வரத்கர் தெரிவித்தார்.

கருத்தறியும் வாக்கெடுப்பு: என்ன சொல்கிறது சட்டம்?

மே மாதம் 25ஆம் தேதியன்று அயர்லாந்து நாட்டு மக்கள் நாட்டின் கடுமையான கருக்கலைப்பு சட்டங்களில் மாற்றம் கொண்டுவருவது குறித்த வாக்கெடுப்பில் தங்கள் வாக்குகளை அளித்தனர்.

2013ஆம் ஆண்டிலிருந்து, அயர்லாந்தில் தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் மட்டுமே கருக்கலைப்புகள் அனுமதிக்கப்பட்டன.

சட்ட விரோதமாக கருக்கலைப்பு செய்யப்பட்டால் அதிகபட்சமாக 14ஆண்டுகள் வரை சிறைதண்டனை வழங்கப்படும்.

2016ஆம் ஆண்டு அயர்லாந்தின் சுகாதாரத்துறை 25 சட்ட விரோத கருக்கலைப்புகள் நடந்துள்ளதாக தெரிவித்தது.

அதே வருடம் சுமார் 3265 பெண்கள் கருக்கலைப்பு செய்து கொள்வதற்காக அயர்லாந்திலிருந்து பிரிட்டனிற்கு பயணம் செய்துள்ளனர்.

அயர்லாந்து சுதந்திரம் பெற்ற பிறகு பிரிட்டனின் பல சட்டங்களை தக்க வைத்து கொண்டது; அதில் ஒன்று கருக்கலைப்பை குற்றமாக கருதும்




சட்டமாகும்.

1983ஆம் ஆண்டில் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்றிற்கு பிறகு நாட்டின் அரசியல் அமைப்பில் 8ஆவது சட்ட திருத்தம் சேர்க்கப்பட்டது.

தாய்க்கும், கருவில் உள்ள குழந்தைக்கும் உயிர் வாழ சம உரிமை உண்டு என்பது அதில் அங்கீகரிக்கப்பட்டது.

## கருக்கலைப்புக்காக மேற்கொள்ளப்படும் பயணம்

1992ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கருத்தறியும் வாக்கெடுப்பில் அரசியல் அமைப்பில் இரண்டு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.

13ஆவது சட்ட திருத்தத்தின்படி கருக்கலைப்பு செய்துகொள்ள பிற நாடுகளுக்கு பயணம் செய்யலாம் என்பதே அந்த மாற்றமாகும்.

பிற நாடுகளில் சட்டப்படி இருக்கும் கருக்கலைப்பு சேவைகள் குறித்த தகவல்களை பெறுவதை தடுக்க முடியாது என்று கூறும் 14ஆவது சட்ட திருத்தமும் இயற்றப்பட்டது.

2013ஆம் ஆண்டு அயர்லாந்து நாடாளுமன்றம் சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் கருக்கலைப்பு செய்து கொள்ளலாம் என்ற சட்ட திருத்தத்தை கொண்டு வந்தது.

தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் கருக்கலைப்பு செய்து கொள்வதை கர்ப்பகாலத்தில் வாழ்நாள் பாதுகாப்பு சட்டம் அனுமதிக்கிறது.

கர்ப்பமாக இருக்கும் தாய் தனது உயிரை மாய்த்து கொள்ளும் நிலையில் இருந்தாலும் கருக்கலைப்பு செய்து கொள்ளலாம்.

புதிய கருக்கலைப்பு சட்டம் இயற்றப்பட்டால் கருத்தரித்து 12 வாரங்களுக்குள்ளாக கருக்கலைப்பு செய்து கொள்ளலாம். 12 வாரங்களுக்கு பிறகு 24 மாதங்கள் வரை தாயின் உயிருக்கோ மன நலத்துக்கோ ஆபத்து நேரிட்டால் கருக்கலைப்பு செய்து கொள்ளலாம்.

கருக்கலைப்பு தடைசட்ட மாற்றத்துக்கு வித்திட்ட இந்திய பெண்

இந்தியாவைச் சேர்ந்த பல் மருத்துவர் சவீதா ஹாலப்பனவர் அயர்லாந்தில் கருக்கலைப்பு மறுக்கப்பட்டதால் உயிரிழந்தார்.

31 வயதான சவீதா 17 வார கர்ப்பிணியாக இருந்தபோது அயர்லாந்து மருத்துவமனையில் கருச்சிதைவு ஏற்பட்டதால் கருக்கலைப்பு செய்ய அனுமதி கோரினார் ஆனால் அயர்லாந்தின் சட்டப்படி அவருக்கு கருக்கலைப்பு செய்ய மறுக்கப்பட்டது. பின் அவர் தொற்று ஏற்பட்டு உயிரிழந்தார்.

முன்னதாகவே கருக்கலைப்பு செய்துகொள்ள அவர் பலமுறை கேட்டிருந்தும், அதற்கு அயர்லாந்து சட்டத்தில் இடமில்லை என்ற காரணத்தினால் அது மறுக்கப்பட்டதாக சவீதாவின் உறவினர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

அயர்லாந்து ஒரு கத்தோலிக்க நாடு என்பதால் அவர்கள் கருக்கலைப்புக்கு அனுமதி தரவில்லை என சவிதாவின் கணவர் பிபிசியிடம் தெரிவித்திருந்தார்.

சவீதாவின் உயிரிழப்பு, அயர்லாந்தின் கருக்கலைப்புக்கு எதிரான கடுமையான சட்டத்தை எதிர்த்து பெரும் போராட்டங்களுக்கு வித்திட்டது. மேலும் கருத்தறியும் வாக்கெடுப்பில் `ஆம்` என்று வாக்களிக்க வேண்டும் என்ற பிரசாரத்துக்கு சவீதாவின் மரணம் வித்திட்டது.

கருத்தறியும் வாக்கெடுப்பின் முடிவுக்கு பின் பிபிசியிடம் பேசிய சவீதாவின் தாய் அக்கமாஹாதேவி, "கருக்கலைப்புக்கு ஆதரவாக பொதுமக்கள் வாக்களித்து இருப்பது என் மகளுக்கு கிடைத்த வெற்றி. நாங்கள் இது குறித்து மகிழ்வாக இருக்கிறோம். என் மகளின் மரணத்திற்கு பின் ஆறு ஆண்டுகளாக போராட்டம் நடந்தது. இப்போது

இந்த போராட்டத்தில் வெற்றி கிட்டி இருக்கிறது. அவளது ஆன்மா இப்போது சாந்தி அடையும். என் மகளுக்காக இந்த போராட்டத்தை மேற்கொண்டவர்களுக்கு எங்கள் நன்றி"



### அயர்லாந்தின் மனசாட்சியை உலுக்கிய சவிதா !

அயர்லாந்தில் கருக் கலைப்பு தடைச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவருவது தொடர்பான வாக்கெடுப்பில் 66.4% மக்கள் ஆதரவாக வாக்களித்திருப்பது உலகமெங்கும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. 'இது ஒரு அமைதிப் புரட்சி' என்று பெருமிதப்படுகிறார் அயர்லாந்து பிரதமர் லியோ வரத்கர். பல பெண்கள் எதிர்கொண்ட மனப்போராட்டத்துக்குக் கிடைத்திருக்கும் மாபெரும் வெற்றி இது. மிக முக்கியமான விஷயம், தனி மனிதருக்கு நேர்ந்த கொடுமையை ஒட்டுமொத்த சமூகமும் தன்னுடையதாகப் பார்த்ததுதான்.

அயர்லாந்தில் 1861—லிருந்து கருக்கலைப்புக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. கருக்கலைப்புக்கு எதிரான அயர்லாந்து சட்டங்கள் வெறுமனே நீதிமன்றம் சார்ந்தது மட்டுமல்ல; மிக முக்கியமாக இது மத நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதும்கூட. 1992—ல் 14 வயது பள்ளிச் சிறுமி பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டாள். அதன் மூலம் கருத்தரித்தாள். அவள் பெயரை வெளியிடாமல் ஊடகங்களும், நீதிமன்றமும் 'எக்ஸ் வழக்கு' என்று அழைத்தன. அச்சிறுமியை பிரிட்டன் அழைத்துச்செல்லத் திட்டமிட்டது அவள் குடும்பம். ஆனால், அந்தப் பயணத்துக்குத் தடைவிதிக்கப்பட்டது. இறுதியில், அச்சிறுமியின் தற்கொலையில் முடிந்தது அவ்வழக்கு. 1997—லும் 13 வயதுச் சிறுமிக்கு இதே கதி நேர்ந்தது. அவளும் தன் உயிரை மாய்த்துக்கொண்டாள்.

இவ்விரு சம்பவங்களைத் தொடர்ந்து கருக்கலைப்புத் தடைச் சட்டத்தை எதிர்த்துப் போராட்டங்கள் நடந்தன. வழக்குகள் தொடுக்கப்பட்டன. ஆனால், பலனில்லை. இந்நிலையில், அயர்லாந்தில் வசித்துவந்த இந்திய மருத்துவரான சவிதா, தனது 17—வது வார கர்ப்பகாலத்தில் கருச்சிதைவை உணர்ந்து மருத்துவர்களை அணுகினார். மருத்துவர் கள் செவிசாய்க்கவில்லை. அயர்லாந்தின் கருக்கலைப்புக்கு எதிரான கடுமையான சட்டத்தாலும், அலட்சியமான மருத்துவப் பரிசோதனையாலும் 2012—ல், தனது 31—வது வயதில் இறந்துபோனார் சவிதா. சவிதா வின் இறப்பு தேசிய அளவிலும் உலக அளவிலும் பெரும் அதிர் வலையை ஏற்படுத்தியது.

மே 25 அன்று நடந்த வாக்கெடுப்பில், கருக்கலைப்புக்கு ஆதரவான தங்கள் நிலைப்பாட்டை அயர்லாந்தின் பெரும்பாலான மக்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். வாக்கெடுப்புக்கான பிரச்சாரம் சில வாரங்கள் முன்பே தொடங்கியது. சவிதாவின் புகைப்படங்கள் அடங்கிய பதாகைகளும் சுவரோவியங்களும், 'கருவுக்குத் தரும் அதே முக்கியத்துவத்தை அக்கருவைச் சுமக்கும் பெண்ணுக்கும் தர வேண்டும்', 'என் உடல் என் உரிமை' என்றன. பெண்கள் தாங்கள் அனுபவித்த மருத்துவமனை நடைமுறைகளைப் பொதுவெளியில் பகிர்ந்துகொண்டார்கள். இந்த வாக்கெடுப்பு வெற்றி பெற்றதற்கு இது மிக முக்கியக் காரணம்.

வாக்களிப்பதற்காக வெவ்வேறு நகரங்களிலிருந்து டப்ளினுக்குப் பலரும் பயணித்திருக்கிறார்கள். "இந்த நாடு விழிப்பதற்கு முன்பாக இப்படி உனக்கு நேர்ந்ததற்கு மிகவும் வருந்துகிறோம். எனது வாக்கு உனக்காகத்தான். உன்னை இறக்கவிட்டுவிட்டோம் சவிதா. எங்களை மன்னித்துவிடு. உனது மரணம் வீணாகிவிடாது" என்று சவிதாவின் நினைவுச்சின்னம் முன்பாக நின்றபடி கண்ணீர் மல்கியிருக்கிறார்கள்.

சமூகத்தில் மாற்றம் வேண்டுமெனில் முதல்கட்டமாக அது தனிமனிதனுக்குள் நிகழ வேண்டும் என்பதை இந்தப் போராட்டங்கள் உணர்த்துகின்றன. தங்கள் இனத்தைச் சேராத, தங்கள் தேசத்தைச் சேராத ஒரு பெண்ணின் மரணத்தை ஒருமித்த உணர்வோடு அயர்லாந்து மக்கள் எதிர்கொண்டிருக்கிறார்கள். அயர்லாந்து சட்டத்தால் நிகழ்ந்துவந்த கொடுமைகளுக்கு ஏதோ ஒருவகையில் தாங்களும் காரணம் என அவர்கள் உணர்ந்ததைத்தான் அவர்களின் கண்ணீர் உணர்த்துகிறது.

# தண்ணீரிலும்

## எல்லைகள் கடந்த தண்ணீர் அரசியல்

'பூவர் சோலை மயிலாட

புரிந்து குயில்கள் இசைபாட

காமர் மாலை அருகசைய

நடந்தாய் வாழி காவேரி!'

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகளால் பாடப்பட்ட காவிரி ஆறு தமிழகத்தில் இன்று நீரின்றி வறண்டு போய்விட்டது. அதனால் டெல்டா மாவட்டங்களில் விவசாயம் இல்லாமல் போய்விட்டது. மரம், செடி கொடிகள் பட்டுப்போய்விட்டன. கால்நடைகள் மெலிந்து போய்விட்டன. பறவைகள் நீர் தேடி நெடுந்தொலைவிற்குச் சென்றுவிட்டன. விவசாயிகளில் சிலர் தற்கொலை செய்து கொண்டார்கள். பலர் கூலித் தொழிலாளர்களாகப் புலம் பெயர்ந்து சென்றுவிட்டார்கள். நிலவுடைமையாளர்களாக இருந்த மிராசுதாரர்கள், விளை நிலத்தை வீட்டு மனைகளாகப் பிரித்து விற்றுவிட்டு, நகரங்களுக்குச் சென்றுவிட்டார்கள். காசு கொடுத்து தண்ணீர் வாங்கிக் குடிக்கிறார்கள். குளிக்கிறார்கள். பாரம்பரிய கலாசார, இலக்கிய சுகஜீவனம் இல்லாமல் போய்விட்டது.




அதற்கு அடிப்படையான காரணம், தமிழ்நாடு, கர்நாடகம் இடையே காவிரி நீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாமல் போனதுதான்.

காவிரி ஆறு கர்நாடகத்தின் குடகு மலையில் தலைக்காவிரியில் உற்பத்தியாகிறது. மாண்டியா, ஸ்ரீரங்கப்பட்டணம் வழியாகத் தவழ்ந்து, தமிழ்நாட்டில் ஓடி வந்து, காவிரிப்பூம்பட்டினத்தில் கடலோடு கலக்கிறது. காவிரி நதியின் மொத்த 736 கி.மீ. பயணத்தில் தமிழகத்தில் மட்டும் 416 கி.மீ. பயணித்து, தமிழ்நாட்டைப் பொன் விளையும் பூமியாக்கி வந்தது.

காவேரி ஆற்றின் நீர்ப்பங்கீடு பற்றி 1924—ஆம் ஆண்டில் மைசூர் சமஸ்தானத்தோடு, மதராஸ் ராஜதானி ஒப்பந்தம் செய்துகொண்டது. அது ஐம்பதாண்டு காலம் நடைமுறையில் இருக்கும் என்று கூறியது.

ஒப்பந்தக் காலம் முடிவடைந்து பழைய ஒப்பந்தம் புதுப்பிப்பது பற்றி ஆலோசிக்கும்போது, காவிரி ஒப்பந்தம் காலாவதியானதாக கர்நாடகம் கைவிரித்தது. இதற்கு இடையே மொழிவாரி மாநிலம் பிரிந்தபோது ஏற்பட்ட நதிநீர் ஒப்பந்தம்

# அரசியல்

மீறப்பட்டது. பழைய ஒப்பந்தமும் மீறப்பட்டது. அப்போது முதல் பிரச்சினை தொடங்கியது. அதோடு இல்லாமல், காவிரி ஆற்றுக்கு நீர் கொண்டு சேர்க்கும் துணை நதிகளான ஹாரங்கி, ஹேமாவதி, கபினி, சுவர்ணவதி ஆறுகளில் கர்நாடக மாநிலம் புதிய அணைகள் கட்டி நீரைத் தேக்கி வைத்துக் கொண்டது. அதனால் காவிரி தமிழ்நாட்டில் வறண்டு போனது.

**சா. கந்தசாமி**

சவால் விடுகிறார்கள். அது சட்டப்படியும், தர்ம நியாயத்தின்படியும் முறையற்றது.

ஆற்றின் மேல் பகுதியில் இருக்கிறவர்கள் அரசியல் லாபத்திற்காக, தேர்தல் வெற்றிக்காக, மக்களிடையே



தண்ணீர் என்பது சகல ஜீவராசிகளின் அடிப்படைத் தேவை. நீரின்றி எந்த ஜீவனும் உயிர் வாழ முடியாது. மழையாகக் கிடைக்கும் தண்ணீர் வானமுது. ஆறுகளில் ஓடும் தண்ணீர் உருகி ஓடும் தங்கம். தண்ணீரின் தேவை, மகிமை பற்றி அறிந்த திருவள்ளுவர், 'நீரின்றி அமையாது உலகு' என்றார்.

நீரோடும் ஆறு என்பது அது தோன்றும் நாட்டிற்கோ மாநிலத்திற்கோ மட்டும் சொந்தமானது இல்லை. அது ஓடி கடலில் கலக்கும் பகுதிக்கெல்லாம் உரியது. நதி தோன்றும் இடத்தில் இருக்கிறவர்கள் ஆறு எங்களுக்கே சொந்தம், மற்றவர்களுக்கு ஒரு சொட்டுத் தண்ணீர் கூட கொடுக்க மாட்டோம் என்று அணையின் முன்னே நின்று கொண்டு

வெறுப்புணர்ச்சியைத் தூண்டிவிடுகிறார்கள். அது சில நேரங்களில் வெற்றியைத் தந்துவிடுகிறது. எனவே, எல்லா அரசியல் கட்சிகளும் அதனையே பின்பற்றுகிறார்கள்.

தமிழ்நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் இடையில் உள்ள காவிரி நதி நீர்ப் பிரச்சினையைப் பல முறை நடைபெற்ற முதலமைச்சர்கள் சந்திப்பாலும், நீதிமன்றம் அளித்த எந்தவொரு தீர்ப்பாலும் தீர்க்க முடியவில்லை. காரணம், நதி நீர்ப் பங்கீடு இல்லை. கர்நாடகத்திற்கு தண்ணீர் கொடுக்க மனமில்லை என்பதுதான்.

மழையை மட்டுமே நம்பியிருக்கும் ஆறு காவிரி.

மேற்குத் தொடர்ச்சி மலையிலும், குடகிலும் பொழியும் மழை நீர்தான் காவிரி நீருக்கு ஆதாரம். கர்நாடகம் என்றொரு புதிய மாநிலம் தோற்றுவிக்கப்பட்டதும், அது தன் வேளாண்மை பரப்பைக் கூட்டிவிட்டது. மைசூரு, பெங்குளூரு நகரங்கள் பெருநகரங்களாக வளர்ந்துவிட்டன. தொழிற்சாலைகள், குடியிருப்புகள் பெருகிவிட்டன.

என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆனால் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யப் புதிய வழியொன்றும் தெரியவில்லை.

பூமி என்பது நீரின் நடுவில்தான் இருக்கிறது. ஆனால் அந்த நீர் முழுவதும் குடிக்க, விவசாயம் செய்ய உகந்ததில்லை. உலகத்தில் சகல



ஏரி, குளங்கள், நீரோடைகள் தூர்க்கப்பட்டுப் பெரிய வணிக வளாகங்கள், கிரிக்கெட், கோல்ஃப் போன்ற விளையாட்டுகளுக்கான மைதானங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றைப் பராமரிக்க லட்சக்கணக்கான லிட்டர் தண்ணீர் தினமும் தேவைப்படுகிறது. மழை நீர் சேமிக்கப்படவில்லை. சாலைகள் சிமென்ட் சாலைகளாக அமைக்கப்பட்டன. மழை நீர் பூமியில் இறங்குவது சாத்தியமற்றுப் போயிற்று.

தமிழகத்தில் காவிரி ஆறு வறண்டு போய்விட்டது. அதனோடு பருவ காலத்தில் பொழிய வேண்டிய மழையும் பொய்த்துப் போய்விட்டது. விவசாயிகளும், மிராசுதாரர்களும் அல்லல்பட, மணல் மாபியாக்களுக்கும் தண்ணீர் மாபியாக்களுக்கும் கொண்டாட்டமாகிவிட்டது. அரசியல்வாதிகள், அமைச்சர்கள், அதிகாரிகள் கூட்டணி அமைத்துக் கொண்டு கொள்ளையடிக்கத் தொடங்கினார்கள்.

உலகத்தில் உள்ள பல நாடுகளிலும் தண்ணீர் பஞ்சம் வந்துவிட்டது. இந்த நூற்றாண்டின் இறுதிக்குள், மக்கள் பயன்பாட்டுக்கு கூடுதலாக ஐம்பத்தைந்து சதவீதம் தண்ணீர் தேவைப்படும்

ஜீவன்களும் ஜீவித்திருக்க நன்னீர் வேண்டும். எல்லா நாடுகளிலும் போதுமான அளவு தண்ணீர் இல்லை. உலகத்தில் இருக்கும் நன்னீரில் பாதிக்கும் மேல் அமெரிக்காவிலும் கனடாவிலும் இருக்கிறது. எனவே அவை தண்ணீர் தேசங்கள் என்று பெயரெடுத்திருக்கின்றன.

பல நாடுகளில் தண்ணீர் பிரச்னை என்பது உள்நாட்டுப் பிரச்னையாகவும் வெளிநாட்டுப் பிரச்னையாகவும் இருக்கிறது. இந்தியாவில் இரண்டு பிரச்னைகளும் இருக்கின்றன.

ஆறு என்பது விவசாயத்திற்கும், மீன் பிடிப்பதற்கும், படகுப் பயணத்திற்குமானது என்பது பழங்கதையாகிவிட்டது. தண்ணீர் ஓர் சக்தி. வலிமை கொண்டது. ஒரு சக்தியைப் பயன்படுத்தி இன்னொரு சக்தியை உண்டாக்கிவிடலாம் என்பது இயற்பியல் தத்துவம்.

மின்சார உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவர்களில் சிலர் புனல் சக்தியால் இயந்திரங்களை இயக்கி மின்சாரம் தயாரிக்கலாம் என்பதைக் கண்டறிந்தார்கள். ஆறுகளில் பெரிய அணைகள் கட்டி நீரைத் தேக்கி மின்சாரம் உற்பத்தி செய்தார்கள். இதனை ஹைட்ரோ பவர்

## Types of Conflicts

| Functional Conflict | Dysfunctional Conflict |
|---|---|
| Social conflict | Emotional conflict |
| Economic conflict | Intrapersonal conflict |
| Religious based conflict | Interpersonal conflict |
| Intrasocietal conflict | Value conflict |
| Intersocietal conflict | Interest conflict |
| Intra state conflict | Work place conflict |
| Inter state conflict | Organisational conflict |
| Armed conflict | Group conflict |
| Global conflict | Data conflict |

என்கிறோம். பல நாடுகளில் அணைகள் கட்டி தண்ணீரைத் தேக்கி மின்சாரம் தயாரிக்கிறார்கள். ஆற்றின் கீழ்ப்பகுதிகள் தண்ணீர் இன்றி வறண்டு போகும் நிலை எழுந்தது. பிரச்னைகள் தொடங்கின. அரசியல் தொடங்கியது. இதனை ஹைட்ரோ பாலிடிக்ஸ் — தண்ணீர் அரசியல் — என்று அழைக்கிறார்கள். இது கடந்த ஒரு நூற்றாண்டில் ஏற்பட்டது.

பதினோரு நாடுகள் வழியாக 6,800 கிலோமீட்டர் நீளத்துக்குப் பல்லாயிரம் ஆண்டுகளாக நைல் நதி ஓடிக்கொண்டிருந்தாலும், அந்த நதி எகிப்துடன்தான் எப்போதுமே அடையாளப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் நைல் நீருக்கு இன்று எத்தியோப்பியா சொந்தம் கொண்டாடுகிறது. நைல் நதிக்கு மிக அதிக அளவில் நீரைக் கொண்டு சேர்க்கும் கிளை நதியான நீல நைல் குறுக்கே மின்சார உற்பத்திக்காக மிகப் பெரிய அணை கட்டுகிறது எத்தியோப்பியா. போர் மூளும் என்றே அஞ்சுகிற அளவுக்கு மோதல் முற்றி வருகிறது.

சீனா, பாகிஸ்தான், வங்கதேசம் ஆகியவை இந்தியாவின் வடக்கு, மேற்கு, கிழக்கு பகுதிகளில் அமைந்திருக்கும் நாடுகள். பல ஆறுகள் அண்டை நாடுகளில் தோன்றி இந்தியாவிற்குள் ஓடுகின்றன.

பிரம்மபுத்ரா ஆறு திபெத்தில் உற்பத்தியாகி, சீனப் பெருநாட்டின் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்து, வங்க தேசம் வழியாக ஓடி கடலில் கலக்கிறது.

பிரம்மபுத்ரா ஆற்றிலும், அதற்குத் நீரைக் கொண்டு சேர்க்கும் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட கிளை ஆறுகளிலும் அணைகள் கட்டி, நீரைத் தேக்கி மின்சாரம் உற்பத்தியில் ஈடுபட்டது சீனா. அதனை இந்தியா கடுமையாக எதிர்த்தது. 'எங்கள் நாட்டிற்குள் வரும் நீர் குறைந்து போகும்; விவசாயம் பாதிக்கப்படும்' என்று ஆட்சேபித்தது. இந்தப் பிரச்னை அப்படியே இருக்கிறது.

சிக்கிமில் தீஸ்தா என்றொரு ஆறு உற்பத்தியாகி, மேற்கு வங்கத்தில் நுழைந்து, வங்கதேசத்தின் வழியாக பிரம்மபுத்ரா ஆற்றில் கலந்து விடுகிறது. தீஸ்தா ஆற்றில் மேற்கு வங்க அரசு அணைகள் கட்டிவிட்டது. அதனால் வங்கதேசத்தில் தீஸ்தா ஆற்றில் தண்ணீர் குறைந்துபோய்விட்டது. விவசாயம், மீன்பிடிப்பு எல்லாம் பாதிக்கப்படுகிறது என்று வங்கதேசம் இந்தியாவிடம் புகார் செய்துகொண்டேயிருந்தது.

2011—ஆம் ஆண்டில் இந்திய பிரதமராக இருந்த மன்மோகன் சிங் வங்கதேசம் செல்ல ஏற்பாடுகள் நடைபெற்றன. மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியையும் உடன் அழைத்துச் சென்று, வங்கதேசத்திற்கு கூடுதல் நீர் கொடுப்பது பற்றிய பேச்சில் கலந்து கொள்ளக் கூறினார். கடைசி நிமிடத்தில் மம்தா பானர்ஜி மனதை மாற்றிக் கொண்டார். வரைவு ஒப்பந்தத்தை திடீரென எதிர்த்தார். பிரதமருடன் அவர் வங்க தேசம் செல்ல இருந்த அரசு முறைப் பயணம் ரத்து செய்யப்பட்டது.

இந்தியா — வங்கதேசம் இடையே ஐம்பத்துமூன்று நதிகள் குறித்த ஒப்பந்தம் உறுதியானால், அது சீனாவில் உற்பத்தியாகி இந்தியாவுக்குள் வரும் நதிகள் தொடர்பாக சீனாவுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்மாதிரியாகும். ஆனால் ஒப்பந்தங்கள் ஏற்படாதபடி, வெவ்வேறு நிலைகளில் எதிர்ப்புகள் இருந்து வருகின்றன.

இந்தியா பல மாநிலங்களிலும், சில வெளிநாடுகளுடனும் தொடர்ந்து நதி நீர்ப் பிரச்னைகளைச் சந்தித்து வருகிறது. ஆனால் அதிலிருந்து சரியான பாடம் எதையும் கற்றுக் கொள்ளவில்லை என்பதைத்தான் கடந்த ஐம்பதாண்டு காலமாக காவிரி நதி நீர் பிரச்னை இழுத்தடிக்கப்பட்டு வருவது சொல்கிறது.

விவேகமற்ற அரசியல் தலைவர்கள், தேர்தல் வெற்றி என்பதையே கவனத்தில் கொண்டு செயல்படும் கட்சிகள், பொறுப்பற்ற அதிகாரிகள், தீர்ப்புகளுக்கு விளக்கம் கேட்க வேண்டிய நிலை ஆகியவற்றால், நேசமிகு எளிய மக்கள் எதிரிகளாகவும் வன்முறையாளர்களாகவும் மாற்றப்படுகிறார்கள்.

# தமிழே

## மறந்தார்களா? மறுக்கிறார்களா?

கன்னித் தமிழ்க் காவிரி என தமிழுடன் காவிரியை இணைத்து சங்கப் புலவர்கள் பாடினார்கள். தமிழோடும், தமிழர்களோடும் பிரிக்க முடியாத அங்கமாக காவிரி வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து விளங்கி வருகிறது. ஆனால் விடுதலை பெற்ற இந்தியாவில் ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலமாக காவிரி மீதுள்ள நமது நியாயமான உரிமையை நிலைநாட்டப் போராட வேண்டிய நிலை நீடித்தது.

பன்னாட்டு நதியின் மேல் பகுதியில் உள்ள நாட்டிற்கு என்னென்ன உரிமைகள், கீழ்ப்பகுதியில் உள்ள நாட்டிற்கு என்னென்ன உரிமைகள் என்பதை ஹெல்சிங்கி உடன்பாட்டின் மூலம் 1956—ஆம் ஆண்டில் உலக நாடுகள் ஒன்றுகூடி வரையறுத்துள்ளன. இதன் அடிப்படையில் 1956—ஆம் ஆண்டில் பன்மாநில நதிநீர் தாவாச் சட்டம், நதிநீர் மேலாண்மை வாரியச் சட்டம் ஆகியவை இந்திய அரசியல் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு உருவாக்கப்பட்டன. ஆனால், 50 ஆண்டு காலமாக இந்த உலக நீதியையும், இந்திய அரசியல் சட்டத்தின்படியும் அமைக்கப்பட்ட சட்டங்களின் விதிமுறைகளையும் நடுவர் மன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவை அளித்தத் தீர்ப்புகளையும் கர்நாடகம் மதிக்க மறுத்தது. அதைத் தட்டிக்கேட்க வேண்டிய இந்திய அரசும் அதற்குத் துணை நின்றது.

1968—ஆம் ஆண்டு முதல் 22ஆண்டுகள் காவிரிப் பிரச்சனை தொடர்பாக ஒன்றிய அரசின் முயற்சியின் பேரில் இரு மாநிலங்களுக்கிடையேயும் பேச்சுவார்த்தை என்ற பேரால் திட்டமிட்டுக் காலம் கடத்தப்பட்டது. இந்த காலகட்டத்தில் காவிரியின் துணை நதிகளில் கர்நாடகம் தமிழகத்தின் எதிர்ப்பையும் மீறி அணைகளைக் கட்டி முடித்தது. அப்போதும் இந்திய அரசு அணைகள் கட்டுவதைத் தடுக்கச் செயலற்று இருந்தது.

பேச்சுவார்த்தையால் பயனில்லை என்பதை உணர்ந்த தமிழக அரசு, நடுவர் மன்றம் அமைக்கவேண்டும் என ஒன்றிய அரசை வற்புறுத்தியது. ஆனால், சட்டப்படி அவ்வாறு செயல்பட ஒன்றிய அரசு தவறியபோது தமிழகம் முறையிட்டதன் விளைவாக உச்ச நீதிமன்றம் நடுவர் மன்றத்தை அமைத்தது.

21—06—1991—இல் நடுவர் மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பினையும், 5—02—2007—இல் அளித்த இறுதித் தீர்ப்பினையும் அரசிதழில் வெளியிடாமல் ஒன்றிய அரசு காலம் கடத்தியது. மீண்டும் உச்ச நீதிமன்றம் தலையிட்டு ஆணை பிறப்பித்ததன் விளைவாக 6 ஆண்டுகள் கழித்து 19—2—2013—இல் அரசிதழில் இத்தீர்ப்பு வெளியிடப்பட்டது. இதன்படி காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். தமிழகத்திற்கு மாத வாரியாக 192 டி.எம்.சி. நீர் வழங்கப்பட்டிருக்க வேண்டும். சட்டப்படி நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பு உச்சநீதிமன்றத்திற்குச் சமமானதாகும். ஆனாலும், கர்நாடகம் இதை மதிக்க மறுத்தது. தமிழகம் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது.

கடந்த 10 ஆண்டு காலமாக உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கின் விசாரணை நீடித்தது. தமிழக மக்களின் கொந்தளிப்பின் விளைவாக உச்ச நீதிமன்றம் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையில், கடந்த 2017—ஆம் ஆண்டு முதல் காவிரி வழக்கை வாரத்தில் 3 நாட்கள் விசாரிக்கத் தொடங்கியது. இதன் விளைவாக கடந்த 16—2—2018 அன்று உச்ச நீதிமன்ற அமர்வு இறுதித் தீர்ப்பை அளித்தது. தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவேண்டிய நீர் அளவு 192 டி.எம்.சி.யிலிருந்து 177.25 டி.எம்.சி.யாக குறைக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பை செயல்படுத்தும் வகையில் 6 வாரங்களுக்குள் ஒரு வரைவுத் திட்டத்தை ஒன்றிய அரசு உருவாக்கவேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், கர்நாடகத் தேர்தலைக் காரணம் காட்டி வரைவுத் திட்டத்தை அளிக்க ஒன்றிய அரசு தவறியது. இதற்கு உச்சநீதிமன்றம் கடுமையான கண்டனம் தெரிவித்த பின்னர் 14—5—2018 அன்று வரைவுத் திட்ட அறிக்கையை ஒன்றிய அரசு உச்ச நீதிமன்றத்தில் அளித்தது. இந்த அறிக்கையில் பல்வேறு திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென தமிழகம், கர்நாடகம், கேரளம், புதுச்சேரி ஆகிய

# தமிழே

பழ. நெடுமாறன்

மாநிலங்கள் வற்புறுத்தின. அதை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம், வரைவுத் திட்டத்தைத் திருத்தி அளிக்குமாறு கூறியது.

பல கட்ட கால தாமதத்திற்குப் பிறகு மத்திய நீர்வளத்துறைச் செயலாளர் 17—5—2018 அன்று திருத்தப்பட்ட வரைவு அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில் அளித்தார். அதை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம் கீழ்வரும் ஆணையை 18—05—2018 அன்று பிறப்பிக்கும்போது திருத்தப்பட்ட இந்த வரைவுத் திட்டம், நடுவர் மன்றம் அளித்த ஆணை மற்றும் வழிகாட்டுதல் ஆகியவற்றோடு ஒத்திசைவு கொண்டதாகவும், உச்ச நீதிமன்றத்தினால் திருத்தியமைக்கப்பட்டதாகவும், 1956—ஆம் ஆண்டு நதிநீர் தாவாச் சட்டத்தின் 6ஏ பிரிவின்படி அமைந்ததாகவும் திகழ்கிறது எனக்கூறி வெளியிட்ட ஆணையின் முதன்மையான கூறுகள் வருமாறு:

1. காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கே அனைத்து அதிகாரங்களும் உண்டு. ஒன்றிய அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை.

2. அணைகளிலிருந்து நீர் திறப்பு, நீர் இருப்பு மேலாண்மை ஆகியவற்றை ஆணையமே மேற்கொள்ளும்.

3. காவிரி மேலாண்மை ஆணையத்தின் அனுமதியின்றி காவிரியின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் எத்தகைய அணைகளையோ, தடுப்பு அணைகளையோ கர்நாடக, தமிழக அரசுகள் அமைக்கக் கூடாது.

4. இறுதித் தீர்ப்பின்படி காவிரி நதிநீர்ப் பகிர்வைச் செயல்படுத்தும் அதிகாரம் பெற்ற அமைப்பு

| | |
|---|---|
| CAVERI RIVER WATER DISPUTE | Between Tamil nadu, Karnataka &KerelaDispute settled by Cauvery water dispute Tribunal (1990) |
| kRISHNA RIVER DISPUTE | Between Andhra Pradesh & Haryana Dispute settled by Krishna water dispute Tribunal (19690 |
| RAVI-BEAS DISPUTE | Between Punjab &Haryana & Rajasthan as an additional Dispute settled by Ravi-Beas water dispute (1986) |
| GODAVARI WATER DISPUTE | Dispute between Maharashtra, Orissa, M.P., Karnataka &Andhra Pradesh, Godavari water Dispute Tribunal (1969) |
| NARMADA WATER DISPUTE | Dispute between Gujrat, Maharashtra, Madhya Pradesh, Rajasthan, Narmada water Dispute Tribunal (1969) |

மேலாண்மை ஆணையம் மட்டுமே.

5. ஆணையத்தின் தலைமை அலுவலகம் தில்லியில் அமைக்கப்படும். நிர்வாக ரீதியான அலுவலகம் பெங்களூரில் செயல்படும்.

6. ஆணையத்தின் தலைவராக செயல்திறன் கொண்ட தலைமைப் பொறியாளர் ஒருவரோ அல்லது மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரியோ நியமிக்கப்படுவார். இரண்டு முழுநேர உறுப்பினர்களும், இரண்டு பகுதி நேர உறுப்பினர்களும் நான்கு மாநிலங்களின் பிரதிநிதிகள் உட்பட 9 பேர் இடம் பெறுவார்கள்.

7. காவிரி மற்றும் கிளை ஆறுகளின் அணைகள் யாவும் அந்தந்த மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

8. மேற்கண்ட மாநிலங்களில் உள்ள காவிரி தொடர்பான அணைகள், காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகள் ஆகியவற்றில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ஆணையம் ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

9. மேற்கண்ட மாநிலங்களில் உள்ள காவிரி அணைகளில் உள்ள நீர் இருப்பைக் கண்காணித்தல், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் மாநிலங்களுக்கு உரிய நீரைப் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை ஆணையம் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும். அணைகளில் உள்ள நீரைக் கண்காணித்து நீர் திறந்துவிடுவது உள்ளிட்டவற்றை ஆணையம் மேற்கொள்ளும். இதற்காக கர்நாடக—தமிழக எல்லையில் உள்ள பிலி குண்டுலுவில் அளவை நிலையம் அமைத்துக் கண்காணிக்கும்.

10. மழைப் பருவ காலமான சூன் 1—ஆம் தேதிக்கு முன் காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்படவேண்டும். அரசிதழிலும் அது உடனடியாக வெளியிடப்படவேண்டும். இந்தத் தீர்ப்பின்படி நமக்கு நியாயமாக வழங்கப்படவேண்டிய நீரின் அளவு ஓரளவு குறைக்கப்பட்டிருந்தாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இந்தத் தீர்ப்பு நீதியை நிலைநிறுத்தும் தீர்ப்பாகும். 50ஆண்டு காலமாக காவிரிப் பாசன உழவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். கடன் தொல்லையால் நூற்றுக்கணக்கானவர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

50 ஆண்டு காலமாக ஏற்பட்டுள்ள இந்தப் பேரழிவுக்கு ஒன்றிய அரசின் கட்சி அரசியல் ஆதாய நோக்கமே முதன்மை காரணமாகும். 1968—ஆம் ஆண்டு முதல் 2014—ஆம் ஆண்டு வரை இந்திய தலைமையமைச்சர்களாக 10 பேர் பதவி வகித்திருக்கிறார்கள். 2014 முதல் இன்றுவரை மோடி தலைமையமைச்சராக இருக்கிறார். இந்த 11 தலைமையமைச்சர்களும் தமிழகத்திற்கு நீதி வழங்க மறுத்துள்ளனர். இவர்கள் அனைவரும் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் கொள்கையைக் கொண்ட அகில இந்தியக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்தான்.

ஆனாலும்கூட, பேச்சுவார்த்தைகளின் போது ஒப்புக்கொள்ளப்பட்டவற்றை கர்நாடகம் மீறியபோதும், நடுவர் மன்றத்தின் தீர்ப்புகளை மதிக்க மறுத்தபோதும், உச்ச நீதிமன்றத்தின் ஆணையை செயல்படுத்தத் தவறியபோதும் தலையிட்டு சட்டத்தின் மாண்பையும், நீதியின் மேன்மையையும் நிலை நிறுத்தவேண்டிய அதிகாரம் படைத்த தலைமையமைச்சர்கள் அனைவருமே பாராமுகமாக இருந்தது ஏன்?

நடுவர் மன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்பை ஏற்று தமிழகத்திற்கு உரிமையான நீரை அளிப்பதற்கு கர்நாடகம் பிடிவாதமாக மறுத்தபோது, அகில இந்தியக் கட்சித் தலைவர்கள் முன்வந்து கர்நாடகத்தின் போக்கைக் கண்டிக்காதது ஏன்? கர்நாடகத்தில் மாறிமாறி அகில இந்தியக் கட்சிகளே ஆட்சியில் அமர்ந்திருக்கின்றன. தமிழகத்திற்கு அநீதி இழைக்க முற்பட்டபோது அக்கட்சிகளின் அகில இந்தியத் தலைவர்கள் தலையிட்டு தடுக்காதது ஏன்?

இடைக்கால ஏற்பாடாக 4 டி.எம்.சி. நீரை உடனடியாகத் தமிழகத்திற்கு திறந்துவிடுமாறு உச்ச நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை நிறைவேற்ற கர்நாடகத்தின் முதலமைச்சராக இருந்த சித்தராமையா பிடிவாதமாக மறுத்தபோது அவர் சார்ந்த காங்கிரசுக் கட்சியின் மூத்த தலைவரான சோனியா காந்தியோ அல்லது தலைவரான ராகுல் காந்தியோ தலையிட்டு அவரைக் கண்டித்து உச்ச நீதிமன்றத்தின் ஆணையை நிறைவேற்றும்படி கூறாதது ஏன்?

ஆனால், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் 23—ஆவது மாநாடு 2018 ஏப்ரல் 26 முதல் 29 வரை கேரள மாநிலம் கொல்லம் நகரில் நடைபெற்றபோது காவிரிப் பிரச்சனையில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை காலதாமதமின்றி நிறைவேற்றவேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. வேறு எந்த அகில இந்தியக் கட்சிகளின் தலைவர்களும் இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்ற முன்வராதது ஏன்?

இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாடும் அங்கம் வகிக்கிறது என்பதை இவர்கள் மறந்து போனார்களா? அல்லது மறுக்கிறார்களா?


மேலும் செய்திகளை உடனுக்குடன் படிக்க, தினமணி மொபைல் ஆப்—ஐ இங்கே கிளிக் செய்து தரவிறக்கம் செய்துகொள்ளுங்கள்!


தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37

# தடுமாறும்

## 21–ம் நூற்றாண்டுக்கு மார்க்ஸ் என்ன சொல்கிறார் ?

ஒரு அரசியல் அறிக்கை வெற்றிபெற வேண்டுமென்றால் அது ஒரு கவிதையைப் போல நம் இதயத்துடன் பேச வேண்டும். அதே நேரத்தில் நம் மனதில் அசாதாரணமான புதிய படிமங்களையும் கருத்துக்களையும் விதைக்க வேண்டும். நம்மைச் சுற்றி நிகழும் குழப்பம் நிறைந்த, வருத்தமளிக்கக்கூடிய, பரவசமான மாற்றங்களின் உண்மைக் காரணங்கள் என்னவென்று தெரிந்துகொள்ளும் வகையில் நம் கண்களை அது திறக்க வேண்டும்.




கூடவே, நம் தற்போதைய சூழல் தன்னுள் கருக்கொண்டிருக்கும் சாத்தியங்களையும் அது வெளிக்காட்ட வேண்டும். இந்த உண்மைகளை நாமே அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போய்விட்டதே என்று நம் இயலாமையை நினைத்து நம்மை வருத்தப்பட வைக்க வேண்டும். மிகவும் பிற்போக்கான கடந்த காலத்தையே திரும்பத் திரும்ப உற்பத்திசெய்வதில் நாமும் கொஞ்சம் உடந்தையாகத்தான் இருந்திருக்கிறோம் என்ற சங்கடமான உண்மையை நாம் உணர்வதற்குத் தடையாக இருக்கும் திரையை அது அகற்ற வேண்டும்.

இறுதியாக, அது பீத்தோவனின் சிம்பனியைப் போல சக்தி கொண்டிருக்க வேண்டும்: அதாவது பெரும் மக்கள் திரள் அனுபவித்துக்கொண்டிருக்கும் தேவையில்லாத துயரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் எதிர்காலம் ஒன்றின் முகவர்களாக மாற அது நம்மைத் தூண்ட வேண்டும்; தான் கொண்டிருக்கும் அசலான விடுதலைக்கான சாத்தியத்தை மனிதகுலம் உணர்வதற்கான உந்துதலை அது தர வேண்டும்.

46 லிவர்பூல் தெரு, லண்டன் என்ற முகவரியில் 1848 பிப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையின் அளவுக்கு வேறு எந்த அறிக்கையும் மேற்குறிப்பிட்டவற்றை ஒருங்கே இதுவரை சாதித்ததில்லை. இரண்டு இளம் ஜெர்மானியர்கள் சேர்ந்து எழுதிய அறிக்கை அது. ஒருவர் கார்ல் மார்க்ஸ், 29 வயது தத்துவவாதி. இன்னொருவர் ஃப்ரெடெரிக் எங்கெல்ஸ், வயது 28, மான்செஸ்டர்




# சித்தாந்தம்

## யானிஸ் வரூஃபக்கீஸ்

ஆலைக்கு வாரிசுதாரர்.

எழுத்து வன்மை

அரசியல் சித்தாந்தப் படைப்பு என்ற வகையில் இந்த அறிக்கைக்கு நிகராக வேறெதையும் சொல்ல முடியாது. இதன் பிரசித்திபெற்ற தொடக்க வரிகளுக்கு ஷேக்ஸ்பியரின் எழுத்துவன்மை உண்டு. (ஐரோப்பாவை ஒரு பேய் பீடித்திருக்கிறது, கம்யூனிஸம் எனும் பேய்). கொல்லப்பட்ட தன்




அப்பாவின் ஆவியைச் சந்திக்கும் ஹாம்லெட்டின் நிலைக்கு வாசகரும் தள்ளப்படுகிறார்: ‘ஏற்கெனவே இருக்கும் சமூக அமைப்போடு நான் ஒத்துப்போகவா? அல்லது, தற்போதைய சூழலுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி, அப்படி அதை எதிர்ப்பதன் மூலம், முற்றிலும் புதிதான, துணிவு மிகுந்த ஒரு உலகத்துக்கு வழிகாட்டவா?’ என்ற கேள்விகள் வாசகருக்கு எழும்.

மார்க்ஸ், எங்கெல்ஸின் காலகட்டத்தைச் சேர்ந்த வாசகர்களுக்கு இது ஒன்றும் ஐரோப்பாவின் அறிவுஜீவி வட்டங்களில் மட்டும் விவாதிக்கப்படும் பிரச்சினையாக இல்லை. அவர்களின் அறிக்கையானது செயலில் இறங்குவதற்கான ஓர் அறைகூவல், இந்தப் பேயின் மந்திரத்துக்குச் செவிசாய்ப்பதால் பெரும்பாலும் தண்டனைக்குள்ளாக வேண்டிவரும், சில சமயங்களில், நீண்ட சிறைவாசத்துக்கும் ஆளாக வேண்டிவரும். இன்றும் இதைப் போன்ற பிரச்சினை இளைஞர்களை எதிர்கொண்டிருக்கிறது: தன்னைத் தானே பிரதியெடுத்துக்கொள்ள முடியாததும் சிதைவுற்றுக்கொண்டிருப்பதுமான சமூக அமைப்பு; நிலைபெற்றுவிட்ட அந்த அமைப்பை ஏற்றுக்கொண்டு வாழ்க்கை நடத்துவதா, அல்லது ஒன்றாகச் சேர்ந்து வேலைபார்ப்பதற்கு, விளையாடுவதற்கு, வாழ்வதற்குப் புதிய வழிமுறைகளைத் தேடி, தனிப்பட்ட இழப்புகளுக்கு ஆளாகும்படி,

இந்தச் சமூக அமைப்பை எதிர்ப்பதா? அரசியல் அரங்கிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சிகள் கிட்டத்தட்ட காணாமல் போய்விட்டன. என்றாலும், கம்யூனிஸ அறிக்கையின் ஆதார சக்தியாக இருக்கும் கம்யூனிஸத்தின் உத்வேகத்துக்கு முட்டுக்கட்டை போடுவது கடினம் என்பது திரும்பத் திரும்ப நிரூபிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

கண்ணுக்குத் தெரியும் எல்லையைத் தாண்டி சிந்திப்பதுதான் எந்தவொரு அறிக்கையின் இலக்காக இருக்கும். ஆனால், தங்கள் காலத்துக்கு 150 ஆண்டுகள் தாண்டி வரக்கூடிய யுகத்தைப் பற்றித் தெளிவாகச் சித்தரிப்பதிலும், தற்போது நாம் எதிர்கொண்டிருக்கும் முரண்பாடுகளையும் தெரிவுகளையும் ஆய்வுசெய்வதிலும் மார்க்ஸும் எங்கெல்ஸும் அடைந்திருக்கும் வெற்றி நமக்கு வியப்பூட்டுவது. 1840—களின் பிற்பகுதியில் முதலாளித்துவமானது தட்டுத்தடுமாறிக்கொண்டிருந்தது; மேலும், அந்தந்த பிராந்தியங்களை மட்டும் சார்ந்ததாகவும், சிதறுண்டதாகவும், துணிவற்றதாகவும் இருந்தது. எனினும், மார்க்ஸும் எங்கெல்ஸும் தங்கள் பார்வையைத் தூரமாக வீசினார்கள்; உலகளாவியதாகவும் நிதிச்சந்தை சார்ந்ததாகவும் இரும்புப்பிடி கொண்டதாகவும் பல்வேறு வகைகள் கொண்டதாகவும் இருக்கும் நம் காலத்திய முதலாளித்துவத்தை அவர்கள் முன்பே கண்டு சொன்னார்கள். அவர்கள் கண்டு சொன்ன மிருகம் 1991—க்குப் பிறகுதான் உயிர்பெற்று உலவ ஆரம்பித்தது. அதே தருணத்தில்தான் அமைப்பானது மார்க்ஸிஸத்தின் மரணத்தையும் வரலாற்றின் முடிவையும் அறிவித்துக்கொண்டிருந்தது.

### கணிப்பு தவறாகவில்லை


கம்யூனிஸ்ட் அறிக்கையின் கணிப்பு தோற்றுப்போய்விட்டது என்று வெகுகாலமாக மிகைப்படுத்தப்பட்டுவந்தது. "முதலீடானது எங்கெங்கும் தஞ்சம் புகும், எங்கெங்கும் நிலைகொள்ளும், எங்கெங்கும் தொடர்புகளை நிறுவும்" என்ற கம்யூனிஸ்ட் அறிக்கையின் பிரதானமான கணிப்பை இடதுசாரி பொருளாதார அறிஞர்கள்கூட விமர்சித்தார்கள். மூன்றாம் உலக நாடுகளின் துயர நிலையை உதாரணமாகக் காட்டி ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய தனது கேந்திரங்களைத் தாண்டி கிளைபரப்பும் முன்பே முதலீடு தனது துடிப்பை இழந்துவிட்டது என்று அவர்கள் விவாதித்தார்கள்.

நடைமுறையில் அவர்கள் கூறியது சரிதான்: ஆப்பிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் இயங்கும் ஐரோப்பிய, அமெரிக்க ஜப்பானிய பெருநிறுவனங்கள் அங்கே முதலாளித்துவத்தைப் பரப்புவதற்குப் பதிலாக அங்குள்ள வளங்களை உறிஞ்சிக்கொள்ளும் காலனிய பாத்திரத்தையே ஏற்றுக்கொண்டு செயல்படுகின்றன. இந்த நாடுகளில் முதலாளித்துவரீதியலான முன்னேற்றத்தை அந்த நிறுவனங்கள் ஏற்படுத்தவில்லை ('எல்லா நாடுகளையும், சிறிதும் நாகரிக வளர்ச்சி அடையாத நாடுகளையும் உட்பட உள்ளடக்கும்' என்ற அறிக்கையின் வரிகளை இதற்கு உதாரணம் காட்டுகிறார்கள்.) மாறாக, வளர்ச்சியின்மையின் வளர்ச்சியையே மூன்றாம் உலக நாடுகளில் அந்நிய முதலீடு உற்பத்திசெய்துகொண்டிருக்கிறது என்று அவர்கள் வாதிட்டார்கள். முதல் என்பது மூலைமுடுக்கெல்லாம் பரவக்கூடிய திறன் கொண்டது என்று அதன் மீது கம்யூனிஸ்ட் அறிக்கை அதீத நம்பிக்கை வைத்தது என்று அவர்கள் கருதினார்கள். "உலகச் சந்தையின் சுரண்டல்" என்பது "பொருள் உற்பத்திக்கும் நுகர்வுக்கும் ஒவ்வொரு நாட்டிலும் பல்கலாச்சாரத் தன்மையை (காஸ்மோபாலிட்டன்) வழங்கும்" என்று கம்யூனிஸ்ட் அறிக்கை முன்வைத்த கணிப்பை மார்க்ஸிய சிந்தனை கொண்டவர்கள் உட்பட பெரும்பாலான பொருளாதார அறிஞர்கள் கேள்விக்கு உட்படுத்தினார்கள்.

தாமதமாக என்றாலும் இறுதியில் கம்யூனிஸ்ட் அறிக்கை முன்வைத்த கணிப்பு சரியானது என்றே நிரூபணமானது. அதன் கணிப்பு சரிதான் என்று நிரூபணமாவதற்கு சோவியத் யூனியனின் சிதைவும், இந்திய, சீனத் தொழிலாளர்கள் 200 கோடி பேர் முதலாளித்துவத்தின் தொழிலாளர் சந்தைக்குக் கொண்டுவரப்பட்டதும் நிகழ வேண்டிவந்தது. உண்மையில், முதலீடு முழுமையாக உலகமயமாவதற்கு கம்யூனிஸ்ட் அறிக்கையை ஏற்றுக்கொண்டிருந்த அரசுகள் சுக்குநூறாக உடைக்கப்பட வேண்டும். வரலாற்றுக்கு இதைவிட சுவையான முரண் வேறேதும் கிடைக்குமா என்ன?

### அச்சுறுத்தும் தொழில்நுட்பம்

இன்று, கம்யூனிஸ்ட் அறிக்கையைப் படிக்கும் எவரும் நம்முடையதைப் போன்ற ஒரு உலகத்தின் சித்தரிப்பையே கண்டு வியப்படைவார்கள்; அதாவது தொழில்நுட்பப் புதுமை யுகத்தின் விளிம்பில் அச்சத்துடன் தட்டுத்தடுமாறி நடந்துகொண்டிருக்கும் உலகம். இந்த அறிக்கையின் காலத்தில் நிலப்பிரபுத்துவ வாழ்க்கைக்குப் பெரும் சவாலை ஏற்படுத்தியது நீராவி இயந்திரம்தான். இந்த இயந்திரகதியின் சக்கரத்துக்குள் குடியானவர்கள் சட்டென்று சிக்கிக்கொண்டார்கள்; சமூகத்தின் மீது நிலவுடைமையாளர்கள் கொண்டிருந்த அதிகாரத்தைப் புதுவிதமான எஜமானர்கள், தொழிற்சாலை முதலாளிகள், வணிகர்கள் அபகரித்துக்கொண்டார்கள். நம் காலத்திலோ செயற்கை அறிவு தொழில்நுட்பமும் தானியங்கித் தொழில்நுட்பமும் பெரும் அச்சுறுத்தல்களாக




நமக்குத் தென்படுகின்றன; "மாறாமல் இருப்பதும், துரிதமாக உறைந்துபோவதுமான உறவுகளை" துடைத்தழித்துவிடுவதாக இந்தத் தொழில்நுட்பங்கள் நமக்கு வாக்குறுதி தருகின்றன.

"உற்பத்தி சாதனங்களில் தொடர்ந்து நிகழ்ந்துவரும் புரட்சிகர மாற்றங்கள்… ஒட்டுமொத்த சமூக உறவுகளையும்" மாற்றியமைக்கின்றன என்று அறிக்கை கூறுகிறது. இதனால், "உற்பத்தி முறையில் தொடர்ந்து புதுப்புது மாற்றங்கள், எல்லா சமூகத் தரப்புகளிலும் தொடர்ச்சியான பிரச்சினைகள், நீடித்த குழப்பநிலை, பதற்றநிலை" ஏற்படும் என்கிறது அறிக்கை.


மார்க்ஸையும் எங்கெல்ஸையும் பொறுத்தவரை இந்த இடையூறு என்பது கொண்டாடப்பட வேண்டியது. இயந்திரங்களுக்கு உரிமையாளர்களாக இருப்பவர்களுக்கும் அவற்றை வடிவமைத்து, இயக்கி, அவற்றோடு பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் இடையிலான பெரும் பிளவுக்கு ஆதாரமாக இருக்கும் நம் மிச்சசொச்ச மனச்சாய்வுகளைக் கடாசியெறிவதற்கு மனிதகுலத்துக்குத் தேவைப்படும் இறுதி உந்துதலுக்கான வினையூக்கியாக இந்த இடையூறுதான் செயல்படுகிறது. "எதுவெல்லாம் திடமாக இருக்கிறதோ அதுவெல்லாம் உருகி ஆவியாகும், எதுவெல்லாம் புனிதமோ அதுவெல்லாம் அவமதிப்புக்குள்ளாக்கப்படும்" என்று தொழில்நுட்பத்தின் விளைவை அவர்கள் கம்யூனிஸ அறிக்கையில் எழுதினார்கள்; "மேலும், மனிதன் இறுதியில் தீவிரமான மனநிலையுடன் தன் வாழ்க்கையின் உண்மையான நிலைமைகளையும், தன் இனத்தவருடனான உறவுகளையும் எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகிறான்" என்று எழுதினார்கள். தொழில்நுட்ப மாற்றமானது நாம் கொண்டிருக்கும் முன்தீர்மானங்களையும் தவறான உறுதிப்பாடுகளையும் கலைத்துவிடுகிறது. அப்படிச் செய்வதன் மூலம், நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் உறவுகள் எவ்வளவு பரிதாபகரமானவை என்ற உண்மையைக் காண வேண்டும் என்று நம்மை வலியுறுத்தி, அதை நோக்கி நம்மை உதைத்துத் தள்ளி, உரக்கச் சொல்கிறது.

விரும்பத்தகாத விளைவுகள்

இன்று, இதே விதமான கருத்தை அச்சிலும் இணையத்திலும் உலகமயமாதலின் எதிர்ப்பாளர்கள் கோடிக் கணக்கான சொற்களில் வெளிப்படுத்துவதை நாம் காண்கிறோம். மிகமிக மோசமான வறுமையிலிருந்து ஓரளவு மோசமான வறுமை என்ற நிலைக்கு பல நூறு கோடிக் கணக்கானோரைக் கொண்டுவந்ததற்காக உலகமயமாதலைக் கொண்டாடும் அதே வேளையில் மதிப்புக்குரிய மேற்கத்திய செய்தித்தாள்கள், ஹாலிவுட் நட்சத்திரங்கள், சிலிக்கான் பள்ளத்தாக்கு தொழில்முனைவோர், பேராயர்கள் ஏன் பெரும் பணக்கார நிதிநிறுவன முதலாளிகள்கூட, உலகமயமாதலின் விரும்பத்தகாத பின்விளைவுகளைப் பற்றி முறையீடுசெய்கின்றனர்: சகித்துக்கொள்ளவே முடியாத சமத்துவமின்மை, வெட்கக்கேடான பேராசை, பருவநிலை மாற்றம், நாடாளுமன்ற ஜனநாயகங்களை வங்கி நிறுவனங்களும் அதீதப் பணக்காரர்களும் கடத்திவைத்திருப்பது போன்றவைதான் இந்த விரும்பத்தகாத பின்விளைவுகள்.

கம்யூனிஸ்ட் அறிக்கையின் வாசகருக்கு இது எதுவுமே வியப்பளிக்காது. "சமூகம் என்பதை ஒரு முழுமையாக வைத்துப் பார்க்கும்போது இரண்டு எதிரி முகாம்களாக, ஒன்றுக்கொன்று நேருக்கு நேர் நிற்கும் இருபெரும் வர்க்கங்களாக அது மேலும் மேலும் பிளவுபட்டுக்கொண்டே இருக்கிறது" என்று அந்த அறிக்கை வாதிடுகிறது.

உற்பத்தி இயந்திரமயமாக்கப்பட்டதால் இயந்திர உரிமையாளர்களின் லாப





விகிதம்தான் ஒரே நோக்கமாக மாறுகிறது; இதனால், சமூகமானது உழைப்பில் ஈடுபடாத பங்குதாரர்கள், உரிமையாளர்களாக இல்லாத கூலித்தொழிலாளர்கள் என்று இரு தரப்புகளாகப் பிளவுபடுகிறது.நடுத்தர வர்க்கத்தைப்பொறுத்தவரை அறைக்குள் இருக்கும் டைனசோர்தான், அது அழிந்துபோயே தீரும். அதே வேளையில், மற்ற அனைவரது வாழ்க்கையும் பாதுகாப்பற்ற கூலி—அடிமை முறை எனும் ஆபத்தான நிலைக்குள் தள்ளப்படும்போது அதீதப் பணக்காரர்கள் மேலும் மேலும் குற்றவுணர்வு கொண்டவர்களாகவும் மன அழுத்தம் கொண்டவர்களாகவும் மாறுகிறார்கள். உச்சபட்ச அதிகாரத்தைக் கொண்ட இந்தச் சிறுபான்மையினர் இந்த அளவுக்குப் பிளவுபட்டிருக்கும் சமூகங்களை ஆள்வதற்குத் தகுதியற்றவர்களாக ஆகிவிடுவார்கள் என்று மார்க்ஸும் எங்கெல்ஸும் அப்போதே கணித்தார்கள். பாதுகாப்பு மிகுந்த உயர்தரக் குடியிருப்புப் பகுதிகளுக்குள் தங்களை அடைத்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல் பதற்றத்தால் தாங்கள் பீடிக்கப்படுவதையும் தங்கள் செல்வச் செழிப்பைத் தங்களால் அனுபவிக்க முடியவில்லை என்பதையும் அவர்கள் கண்டுணர்வார்கள். அவர்களில் சிலர், அதாவது தங்களின் நீண்ட கால சுயநலன் அடிப்படையில் சிந்திக்கும் புத்திசாலிகள், மக்கள்நல அரசுதான் இருப்பதிலேயே சிறந்த ஆயுள்காப்பீட்டுத் திட்டம் என்பதைக் கண்டுகொள்வார்கள். எனினும், அவசியமான வரிகளைச் செலுத்துவதைத் தவிர்ப்பதற்காக ஓய்வின்றி உழைப்பது அவர்களது இயல்பு என்று அறிக்கை விளக்குகிறது.

தற்காலத்தில் நாம் கண்கூடாகக் காண்பது இதைத்தானே! பாதுகாப்புணர்வு அற்றவர்களாக, எப்போதும் அதிருப்தியுடன் இருக்கும் குழுவான அதீதப் பணக்காரர்கள் தொடர்ந்து போதை மறுவாழ்வு மையங்களுக்குச் செல்கிறார்கள், சாமியார்களையும் மனநல மருத்துவர்களையும் விடாமல் சந்தித்து ஆறுதலையும் ஆலோசனைகளையும் பெறுகிறார்கள். இதற்கிடையில், மற்றவர்களெல்லாம் ஒரு வேளை உணவைப் பெறுவதற்காகவும், பள்ளி, கல்லூரிக் கட்டணம் செலுத்துவதற்கும், ஒரு கடன் அட்டையிலிருந்து இன்னொரு கடன் அட்டைக்குத் தாவுவதற்கும் பொருளாதார மந்தநிலையை எதிர்கொள்வதற்கும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். நாமோ கவலையின்றி வாழ்பவர்கள்போலக் காட்டிக்கொள்கிறோம்; நமக்குப் பிடித்ததையே நாம் செய்துகொண்டிருக்கிறோம், செய்துகொண்டிருப்பது நமக்குப் பிடிக்கும் என்றும் கூறிக்கொள்கிறோம். எனினும் யதார்த்தத்தில், நாம் அழுது அழுது கண்கள் வீங்கித் தூங்கிப்போகிறோம். கொடைவள்ளல்களும் அமைப்புசார்பான அரசியல்வாதிகளும் பொருளாதார அறிஞர்களும் இந்த சூழலுக்கு ஒரே மாதிரியாக எதிர்வினை புரிகிறார்கள். அறிகுறிகளைப் பற்றி மட்டும் (அதாவது ஊதிய ஏற்றத்தாழ்வு) கடுமையாக விமர்சிக்கிறார்கள்; காரணங்களைக் காணத் தவறிவிடுகிறார்கள் (அதாவது இயந்திரங்கள், நிலம், ஆதாரவளங்கள் போன்ற உடைமைகள் குறிப்பிட்ட சிலரிடம் மட்டும் குவிந்தததன் விளைவான சுரண்டலை). இன்று செயலற்றுப்போய் நிற்கிறோம் என்பதில் ஆச்சரியம் ஏதும் இருக்கிறதா என்ன?

நம்பிக்கையின் ஆதாரம்

மேம்பட்ட தொழில்நுட்பங்கள் அதிவேகத்தில் வளர்ச்சியடைந்துகொண்டிருக்கும் இந்த வேளையில் நாம் ஒருவருக்கொருவர் அறிவார்த்தமான, நாகரிகமான முறையில் நமக்குள் எப்படி உறவாட வேண்டும் என்பதை முடிவெடுத்தாக வேண்டிய தருணத்தை நெருங்கியிருக்கிறோம். வேலைசெய்தே ஆக வேண்டும் என்ற கட்டாயத்துக்குப் பின்னாலும் அதன் காரணமாக ஏற்படும் ஒடுக்குமுறை நிறைந்த சமூகக் கட்டுப்பாடுகளுக்குப் பின்னாலும் இனியும் நாம் ஒளிந்துகொள்ள




முடியாது. இந்த அலங்கோலத்துக்கு ஊடாகப் பார்க்கவும் அதிருப்தியிலிருந்து தப்பித்து, 'ஒவ்வொருவருக்கும் சுதந்திரமான வளர்ச்சி என்பது எல்லோருக்குமான சுதந்திரமான வளர்ச்சி என்பதன் அடிப்படை'யாக இருக்கும் புதுவித சமூக ஏற்பாடுகளைச் சென்றடைவதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதைக் கண்டுகொள்ளவும் கம்யூனிஸ்ட் அறிக்கை 21—ம் நூற்றாண்டு வாசகர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது. இந்த இலக்கை எப்படி அடைவது என்பதற்கான வரைபடத்தை இந்த அறிக்கை கொண்டிருக்கவில்லை எனினும், நிராகரிக்கவே முடியாத வகையில் நம்பிக்கையின் ஆதாரமாக இந்த அறிக்கை விளங்குகிறது.

நம்மைப் பரவசப்படுத்தும், ஊக்கப்படுத்தும், வெட்கித் தலைகுனிய வைக்கும் ஆற்றலை இந்த அறிக்கை 1848—ல் வெளியானபோது கொண்டிருந்ததைப் போலவே தற்போதும் கொண்டிருப்பதற்கு முக்கியமான காரணம், காலத்தின் வரலாறு அளவுக்கு வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டங்களும் பழமையானவை என்பதால்தான். மார்க்ஸும் எங்கெல்ஸும் இதை துணிச்சலான ஒருசில வார்த்தைகளில் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்: "இதுவரையிலான சமூகத்தின் வரலாறு என்பது வர்க்கப் போராட்டங்களின் வரலாறே."

சரி, இந்த அறிக்கையின் அடிப்படைதான் என்ன? நாம் ஒவ்வொருவரும், குறிப்பாக இன்றைய இளைஞர்கள் அனைவரும், வரலாறு அரசியல் போன்றவற்றின்மீது ஏன் அக்கறை செலுத்த வேண்டும்?

மகிழ்ச்சியும் சுதந்திரமும்

மார்க்ஸும் எங்கெல்ஸும் மிகவும் எளிமையான இந்தப் பதிலையே தங்கள் அறிக்கையின் அடிப்படையாகக் கொண்டு எழுதியிருக்கிறார்கள்: அசலான மனித மகிழ்ச்சியும் அதற்குத் துணையாக இருக்கும் நியாயமான சுதந்திரமும். அவர்களைப் பொறுத்தவரை இவைதான் மிகவும் முக்கியமானவை. உற்பத்திசெய்பவர்களுக்கும் உற்பத்திச் சாதனங்களின் உரிமையாளர்களுக்கும் இடையிலான பெரும் பிளவுதான் அவர்களின் அலசலுக்கு மிகவும் முக்கியமான மையம். முதலுக்கும் கூலி அடைப்படையிலான உடலுழைப்புக்கும் இடையிலான பிரச்சினைக்குரிய உறவு என்பது நமது வேலையை நாம் அனுபவித்துச் செய்வதிலிருந்தும், உற்பத்திசெய்யும் பொருட்களை அனுபவித்து உற்பத்திசெய்வதிலிருந்தும் நம்மைத் தடுக்கிறது. முதலாளிகளையும் தொழிலாளர்களையும், பணக்காரர்களையும் ஏழைகளையும் சிந்தனையற்ற பகடைக்காய்களாக மாற்றுகிறது. நமது சக்திக்கு அப்பாற்பட்ட சக்திகளால் இந்தப் பகடைக்காய்கள் அர்த்தமேயற்ற ஒரு இயந்திர வாழ்க்கையை நோக்கித் தள்ளப்படுகின்றன.

சரி, இவற்றையெல்லாம் எதிர்கொள்ள நமக்கு அரசியல் ஏன் தேவைப்படுகிறது? இதற்கு மார்க்ஸ், எங்கெல்ஸின் பதில் இதுதான்: இந்த முட்டாள்தனத்தை நாம் தனிநபர்களாக முடிவுக்குக் கொண்டுவர முடியாது; ஏனெனில், இந்த முட்டாள்தனத்துக்கு மாற்று மருந்தை உற்பத்திசெய்யும் எந்தச் சந்தையும் ஒருபோதும் உருவாகப்போவதில்லை. கூட்டான, ஜனநாயக அரசியல் செயல்பாடுதான் சுதந்திரத்துக்கும் மகிழ்ச்சிக்கும் நமக்கு இருக்கும் ஒரே ஒரு வாய்ப்பு. இதற்காக நாம் எத்தனை இரவுகள் வேண்டுமானாலும் கண்விழித்து உழைக்கலாம்.

கவிதை

# ஸ்டெர்லைட் துயரம்

நஞ்ச வீசுறான்னு
காற்ற நாசம் பன்னுறான்னு
உடலை உருக்குறான்னு
கருவ அழிக்கிறான்னு
உரிமைய கேட்டோமையா
ஒற்றுமையா நின்னோமையா.

ஓட்டு கேட்டு வந்தீங்களே
உறுதி மொழி தந்தீங்களே,
கோட்டையிலே ஏத்தி விட்டோம்
கோவணம் தான் மிச்சமையா

நெஞ்சி வலிக்குதைய்யா
நினைச்சு பார்த்தாலே
உள்ளம் உருகுதைய்யா
உசுரு போகுதைய்யா
ஊர்பய சம்பாதிக்க
உழைக்கும் மக்களை
கொன்னுட்டையே
கொக்கும் இல்லை
குருவியும் இல்லை
குப்பையில தூக்கி போட

வேலியே பயிர மேஞ்சதைய்யா
பலி பாவம் சேர்த்ததைய்யா

கங்கைக்கு போனாலும்
காசில மூழ்கினாலும்
உங்க பாவம் போகதைய்யா
ஆனாலும்.....
வெட்ட வெட்ட துளிர்வோமைய்யா
வீறு கொண்டு எழுவோமைய்யா

தியாகிகளே....
நிம்மதியா தூங்குங்களேன்
நாங்க இன்னும் சாகலயே...

**சாமுவேல் ராஜா**

எங்கள் கேள்விகள் எளிமையானவை
யார் சுடச் சொன்னார்கள்
நீங்கள் ஒரு பிணம் சாவதற்கு முன் தின்றதைப் பற்றி
சொல்கிறீர்கள்
எங்கள் கேள்விகள் நேரடியானவை
அந்த சிறுவன் தீவிரவாதியா
நீங்கள் அந்தப் பிணம் எப்படிச் செத்தது?
என்று காதைக்கடிக்கிறீர்கள்
எங்கள் கேள்விகள் குழப்பம் இல்லாதவை
எத்தனை பேரைக் கொன்றீர்கள்
நீங்கள் அந்தப் பிணம் ஒரு காலத்தில் மூச்சுவிட்டுக்
கொண்டிருந்தது என நிறுவத் துடிக்கிறீர்கள்
யாருக்கு வேண்டும்
உங்கள் பிணங்களின் புராணம்?
யாருக்கு வேண்டும்
உங்கள் அழுகிய உண்மைகள்?
வாய் கிழிந்து செத்த எம் தங்கை
அவளை ஏன் கொன்றீர்கள்?
வாழவே தொடங்காத எம் தம்பிகள்
அவர்களை ஏன் கொன்றீர்கள்?
நாங்கள் இதைக் கேட்போம்
இதை மட்டுமே கேட்போம்
இதை மட்டுமே கேட்டுக்கொண்டிருப்போம்
உங்கள் காதுகள் செவிடாகும் வரை
உங்கள் அதிகாரம் பிணமாகும் வரை

உங்கள் கருணைக்கு நன்றி
அதற்குள்ளாக ஆலையை மூட முன்வந்ததிற்கு
இருபத்து ஐந்து பேர் என்கிறார்கள்
பதின்மூன்று என்கிறார்கள்
எண்ணிக்கையில் என்ன இருக்கிறது
பசுக்கள் பாதுகாப்பாய் வாழும் நாட்டில்
அற்ப மானுடர்கள் எங்களுக்கு
இத்துடனாவது விட்டீர்களே பண்ணாடிகளே தெண்டம்
ஆண்டைகளே தெண்டம்
மொதலாளிகளே தெண்டம்
ஏமான்களே துரைமார்களே
ராசாக்களே தெண்டம் தெண்டம்
வணங்குகிறோம் சாமீ
எம் விரைகளில் இருந்து பூட்ஸை எடுப்பீர்களாக
எம் குரல்வளையிலிருந்து கத்தியை அகற்றுவீர்களாக
ஆடுகள் அறுப்புக்கு எப்போது வர வேண்டும் எனச்
சொல்லும்
வணங்கி வேண்டுகிறோம்
கொஞ்சம் வலி இல்லாமல்
சாகடிப்பீராக எம் அரசாங்கமே!

# சில கேள்விகள்

போராட்டங்களுக்கு எல்லாம்
ஏன் போகிறீர்கள்?
உங்களுக்காகத்தானே
ஐ.பி.எல் இருக்கிறது

உங்களுக்காகத்தானே
சினிமா இருக்கிறது
உங்களுக்காகத்தானே
டாஸ்மாக் இருக்கிறது
உங்களுக்காகத்தானே
பேஸ்புக் இருக்கிறது
உங்களுக்காகத்தானே
யூடியூப் இருக்கிறது

அப்புறம்

இந்தப் பூங்காக்களை எல்லாம் பூட்டியா
வைத்தோம்
உங்களை யார் போராட்டங்களுக்கு
போகச்சொன்னது?
கடற்கரையைப் போராட்டகளமாக்கியது யார்
காற்று மாசுபடுகிறது
நீர் மாசுபடுகிறது
நிலம் மாசுபடுகிறது
புற்றுநோய் வருகிறது
துயரம்தான்
அதற்குத்தானே
கோயில்கள் இருக்கின்றன

—உங்களுக்காக கடவுளிடம் பேச—
பூசாரிகள் இருக்கிறார்கள்
ஆயுதங்கள் ஏந்திய கடவுள் இருக்கிறார்கள்
பிராத்தனை செய்யுங்கள்
மொட்டை அடிக்கலாம்
அலகு குத்தலாம்
பால் குடம் சுமக்கலாம்
காவடி தூக்கலாம்
கிரி வலம் செய்யலாம்
எத்தனை இல்லை
நீங்கள் செய்ய (ஒரு நல்ல பக்தராக)
மனு கொடுக்கலாம்
மன்றாடலாம்

பேஸ்புக்கில் வந்து ஸ்டேடஸ் போடலாம்
கெஞ்சிக் கதறலாம்
இருமிக்கொண்டே வாழ்க்கையை ஓட்டலாம்
ரத்த வாந்தி எடுத்து செத்தும்போகலாம்
எத்தனை இல்லை

ஒரு நல்ல தேச பக்தராக
போராட்டங்களுக்கு எல்லாம்
ஏன் போகிறீர்கள்
நாங்களா உங்களைச் சுட்டோம்
நீங்கள்தான் சுடவைத்தீர்கள்
போராடினீர்கள் சுட்டோம்?

இளங்கோ கிருஷ்ணன்

தற்போது, 'அசுரகுரு', 'துப்பாக்கி முனை' படங்களில் நடித்து வரும் விக்ரம் பிரபு, இப்படம் முடிந்த பிறகு நிர்மல் குமார் இயக்கத்தில் நடிக்க இருக்கிறார். இப்படம் அவரது திரையுலக வாழ்வில், தாத்தா மற்றும் அப்பாவின் பெயரைக் காப்பாற்றும்படி நடிப்புக்கு விருந்தாகும் படம் என்கிறார். "அடிதடி மற்றும் காமெடி நிறைந்த கதாபாத்திரங்களைவிட இதுபோன்று பெயர் சொல்லும்படியான பாத்திரங்களை ஏற்கவேண்டும்!" என்றும் புகழ்கிறார். அப்படியென்ன கதாப்பாத்திரம்?





## நயன்தாரா.... நயன தாரா!

## அடுத்தபடம் எப்படி?

## கோபுரத்தில் கோகிலா!

## அசத்த வேண்டும் அப்படி!


நெல்சன் இயக்கத்தில் உருவாகிவரும் 'கோலமாவு கோகிலா' படத்துக்காகப் போதை மருந்து விற்கும் பெண்ணாக நடிக்கிறார் நயன்தாரா. லைகா புரொடக்ஷன்ஸ் நிறுவனம் இந்தப் படத்தைத் தயாரிக்கிறது. அனிருத் இசையில், 'கல்யாண வயசு' பாடலை எழுதி, பாடலாசிரியராக அறிமுகமாகிறார் நடிகர் சிவகார்த்திகேயன். தற்போது அஜித் ஜோடியாக 'விசுவாசம்', 'இமைக்கா நொடிகள்', 'கொலையுதிர் காலம்', 'சைரா நரசிம்ம ரெட்டி', சிவகார்த்திகேயன் ஜோடியாக ஒரு படம் என அரை டஜன் படங்களைக் கையில் வைத்திருக்கிறார் நயன்தாரா.



## தமிழுக்கு முதலிடம்!

## தமிழ் ரசகுல்லா!

சமீபகாலமாக தமிழில் நடிக்க ஆர்வம் காட்டும் ரகுல் ப்ரீத்சிங், ஒரே நேரத்தில் சூர்யா, கார்த்தி, சிவகார்த்திகேயன் என்று தமிழின் மூன்று முன்னணி கதாநாயகர்களுடனும் நடித்து வருகிறார். “இந்தி படத்தில் நடித்து வருவதால், எனக்கு தென்னிந்திய மொழிப் படங்கள் குறைந்துவிட்டதாக கூறுகிறார்கள். தமிழ் ரசிகர்கள் என்னைத் தமிழ்ப் பெண்ணாகப் பார்க்கிறார்கள். முன்பெல்லாம் கதைகளில் நான் ஈடுபாடு காட்டுவதில்லை. இப்போது கதைத் தேர்வில் அக்கறையோடு இருக்கிறேன். தமிழில் நடிக்கவும் தமிழ் கற்கவும் ஆர்வமாக இருக்கிறேன்.” என்கிறார்.



## ‘காலா’ கலக்கலா...

## ‘காலா’ புரட்சி!

நடிகர் ரஜினிகாந்த் நடித்துள்ள ‘காலா’ படத்தின் டிரெய்லர் யூ—டியூப் டிரெண்டிங் ஆகியுள்ளது. வந்த இரண்டு நாட்களிலேயே சுமார் *50* லட்சம் பேர் பார்த்துள்ளனர். வெளியான *24* மணி நேரத்துக்குள் இதுவரை சுமார் *26* லட்சத்துக்கும் மேற்பட்டோர் இந்த டிரெய்லரை பார்த்துள்ளனர். தவிர, இந்த எண்ணிக்கை நேரத்துக்கு நேரம் உயர்ந்து கொண்டே உள்ளதால், யூ—டியூப் டிரெண்டிங்கில் ‘நம்பர்—*1*’ இடத்தில் உள்ளது.




# மங்காத தமிழென்று

**தமிழ்நாட்டின் உரிமைகளை எப்போது மீட்க முடியும்?'**

தமிழகத்தின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்ற குரல்கள் அதிகரிக்கும் போதெல்லாம், தமிழ் தேசியம் என்ற கோஷமும் ஓங்கி ஒலிப்பது பல்வேறு காலகட்டங்களில் நடந்துகொண்டிருக்கிறது.

சமீபத்தில், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி நடைபெற்ற போராட்டங்களின் தொடர்ச்சியாகவும் அத்தகைய கோஷங்கள் ஒலிக்கத் துவங்கின.




மனித குல வரலாற்றில் தேசியம் பற்றிய கருத்தியல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உருவாகிவிட்டது. ஆனால் தேச அரசுகள் 18ஆம் நூற்றாண்டு வாக்கில்தான் உருவாகத் தொடங்கின.

சேர, சோழ, பாண்டியர்கள் தனித்தனியே அரசுரிமையுடன் ஆண்ட காலத்திலேயே "தமிழ்நாடு", "தமிழகம்" என்ற சொற்கோவைகளும் அவற்றிற்கான கருத்தியல்களும் தோன்றிவிட்டன. "தண்டமிழ் வேலித் தமிழ்நாடு" என்று சங்ககால இலக்கியமான பரிபாடல் கூறுகிறது.

"வையக வரைப்பில் தமிழகம் கேட்ப" (புறநானூறு 168), "தமிழகப் படுத்த விமிழிசை முரசின்" (அகநானூறு 227), "இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய" (சிலப்பதிகாரம் காட்சிக்காதை) என இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் தாயகம் பற்றிய வரையறைகள் தமிழ் இலக்கியங்களில் உள்ளன.

தமிழ்நாட்டிற்கான எல்லையைத் தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாரனார் "வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்றார்.

நவீனத் தொழில் உற்பத்தி முறை வளர்ச்சி

## சங்கே

# முழங்கு!


பெ.மணியரசன்

பெற்ற காலத்தில்தான் ஐரோப்பாவில் மறுமலர்ச்சிச் சிந்தனைகள் வளரத் தொடங்கின. மறுமலர்ச்சிச் சிந்தனைகள் என்பவை அவற்றின் சாரத்தின் அடிப்படையில் பார்த்தால் சனநாயகச் சிந்தனைகள்தான். மறுமலர்ச்சிச் சிந்தனையின் தொடர்ச்சியாக 18 — 19ஆம் நூற்றாண்டுகளில் உருவானதுதான் தேச அரசு பற்றிய கருத்தியல்!

ஆனால், அதே காலகட்டத்தில் ஐரோப்பியக் காலனியவாதிகள் ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களில் பீரங்கி முனையில், தேச வரையறைக்குப் பொருந்தாத புதிய புதிய காலனி நாடுகளைக் கட்டமைத்தார்கள்.

தங்களின் காலனிய வேட்டையின் நிர்வாகக் கட்டமைப்பாக பல தேசிய இனங்களைக் கொண்ட செயற்கை நாடுகளை உருவாக்கினார்கள். அப்படி வெள்ளையரால் உருவாக்கப்பட்டதுதான் இந்தியா!

இந்தியா என்ற புதிய கட்டமைப்புக்காக 1771—இல் முதல் முதலாக வெள்ளையர்கள் இந்தியா ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றினார்கள். இதுதான் இன்றைய இந்தியாவின் தாய்ச்சட்டம்!





விடுதலை பெற்ற இந்தியாவில் உருவாக்கப்பட்டு 1950 சனவரி 26இல் அறிவிக்கப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டம் இந்தியாவை “ஒரு தேசம்“ என்று கூறவில்லை. அரசுகளின் ஒன்றியம் என்றுதான் கூறுகிறது “இந்தியன்” என்று ஒரு தேசிய இனம் இந்தியாவில் இருப்பதாக அச்சட்டம் கூறவில்லை. மாறாக இந்தியாவின் குடியுரிமை பற்றி மட்டுமே அது பேசுகிறது.

தனித்தனித் தேசங்களாக இறையாண்மையோடு விளங்கத்தக்க தேசிய இனங்கள் — தேசங்கள் இந்தியாவில் இருக்கின்றன. இவை அனைத்தும் காலனிய வேட்டைக்காக வெள்ளையரால் பீரங்கி

முனையில் ஒரே நாடாக இணைக்கப்பட்டன.

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் இந்த உண்மையை உணர்ந்து கொண்ட காந்தியடிகள், ஆங்கிலேய ஏகாதிபத்தியம் தனது நிர்வாக வசதிக்காக உருவாக்கிக் கொண்ட மாநிலங்களை




ஏற்க வேண்டியதில்லை; மொழி, இன அடிப்படையில் காங்கிரசு மாநிலக் கமிட்டிகள் அமைய வேண்டும் என்றார். நாகபுரியில் 1920ஆம் ஆண்டு நடந்த காங்கிரசு மாநாட்டில் மொழிவழி மாநிலக் காங்கிரசுக் கமிட்டிகள் அமைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அப்போது ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இன்றையத் தமிழ்நாடு — ஆந்திரப் பிரதேசம், கேரளத்தின் மலபார் பகுதி, கர்நாடகப் பகுதிகள் சில ஆகியவற்றை உள்ளடக்கி சென்னை மாநிலம் அமைத்திருந்தனர்.

ஆனால் 1947 — ஆகத்து 15ல் இந்தியாவின் ஆட்சி காங்கிரசுக் கட்சியின் கையில் வந்த பின் மொழியின மாநிலம் அமைக்க அக்கட்சி ஆட்சி மறுத்தது. தெலுங்கர், மராத்தியர், தமிழர், கன்னடர், மலையாளிகள் எனப் பல்வேறு தேசிய இன மக்கள் தங்களுக்கான மொழி இனத் தாயகமாக புதிய மாநில அமைப்புகள் கோரிப் போராடினர்.

உயிர்ப்பலிகள் நடந்தன. நிர்பந்தம் காரணமாகத்தான் காங்கிரசு ஆட்சி, மொழி வழி மாநிலங்கள் என்ற பெயரில் மொழி இன வழியில் மாநிலங்களை உருவாக்கியது. அவ்வாறு 1956 நவம்பர் 1ல் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டன. அப்போது ஆந்திர, கர்நாடக, கேரள மாநிலங்களிடம் தமிழர் தாயகப் பகுதிகள் பல ஒப்படைக்கப்பட்டன.

இந்தியாவில் அரசியல் ஒருமைப்பாடு ஏற்பட பிரிட்டிஷ் காரணமா?

திராவிட இயக்கம் — நாடு முழுமைக்கும் பங்களிக்க வேண்டிய சித்தாந்தம்

இந்திய அரசமைப்புச் சட்டம் — இந்தியாவில் உள்ள தேசிய இனங்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை. இந்தியா முழுமைக்குமான “ஒரே ஆட்சி மொழி இந்தி” என்று குறிப்பிடுகிறது (343). இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்களின் காரணமாக ஆங்கிலமும் துணை ஆட்சி மொழியாக நீடிக்கிறது. உண்மையான கூட்டாட்சியாக இருந்தால், எட்டாவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளையும் இந்தியாவின் ஆட்சி மொழிகளாக அறிவித்திருக்க வேண்டும்.

இந்தித் திணிப்பு அன்றாடம் அதிகமாகிக் கொண்டே போகிறது. தமிழ்நாட்டில் செயல்படும் இந்திய அரசின் திட்டங்கள் அனைத்தும் இந்தியில்தான் இருக்க வேண்டும் என்கிறது இந்திய அரசு! அவை தமிழில் இருக்கக் கூடாது. இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் தமிழ்நாட்டில் செயல்படும் தமிழ்நாடு அரசின் திட்டங்கள்கூட இந்திப் பெயரில்தான் இருக்க வேண்டும் என்கிறது தில்லி!


`பறிக்கப்பட்ட உரிமைகள்'

இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியிருந்த கொஞ்ச நஞ்ச மாநில உரிமைகளையும் இந்திய ஆட்சியாளர்கள் பறித்துவிட்டார்கள். மாநில

அதிகாரப் பட்டியலில் இருந்த கல்வியை — நடுவண் அரசுக்கும் — மாநில அரசுக்கும் பொது அதிகாரமுள்ள பொதுப் பட்டியலுக்கு மாற்றிவிட்டார்கள். பொதுப் பட்டியலில் உள்ள ஒரு பொருள் குறித்து இந்திய அரசு சட்டமியற்றினால் அது மட்டுமே அதிகாரம் பெறும். அது குறித்து மாநில அரசு நிறைவேற்றும் சட்டம் செல்லாது!

அனைத்திந்தியா முழுவதுமிருந்தும் தேர்வெழுதி தமிழ்நாட்டுப் பணிகளுக்கு வரப் போகிறார்கள். மற்ற மாநிலங்களுக்கும் இதே போல் உரிமைப் பறிப்பு உண்டு!

ஆனால் இந்தி மாநிலங்கள் மொத்தம் பத்து இருப்பதால் அவற்றிற்கு மேற்படித் திட்டங்களால்




ஆதாயம்தானே தவிர, பாதிப்பில்லை! வெளி மாநிலத்திற்கு வாய்ப்பு என்ற போர்வையில் இந்தி மாநிலங்களுக்கிடையே அப்பரிமாற்றம் நடைபெறும்.

தமிழ்நாட்டு அரசுக்குச் சொந்தமான மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையைத் தமிழ்நாடு அரசு செய்ய முடியாமல், "நீட்" என்ற அனைத்திந்திய நுழைவுத் தேர்வை இந்திய அரசு கொண்டு வந்துவிட்டது. இதனால், அனைத்திந்தியாவிலும் உள்ள மாணவர்கள் — மதிப்பெண் அடிப்படையில் தமிழ்நாட்டு மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கப்படும் அபாயம் எழுந்துள்ளது. தமிழ்நாட்டு மாணவர் புறக்கணிக்கப்படுவர்.

"நமது நாடு தமிழ்நாடா?, இந்தியாவா?"

சென்னைக்கு வயது எவ்வளவு?

தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளுக்கான மருத்துவர் பணி அமர்த்தலுக்கும் அனைத்திந்தியத் தேர்வு முறை வரப்போகிறது. இதனால் தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் வட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் உட்பட வெளி மாநிலத்தவர் பணியில் சேர்வர். தமிழ்நாட்டு மருத்துவர்கள் தமிழ்நாட்டிலேயே ஒதுக்கப்படுவர். அதேபோல் மாவட்ட அளவிலான நீதிபதிகள் வரையில்

தமிழ்நாட்டில் செயல்படும் இந்திய அரசின் அலுவலகங்கள், தொழிலகங்கள் அனைத்திலும் 90 விழுக்காட்டினரும் அதற்கு மேலும் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களையே அதிலும் வட மாநிலங்களைச் சேர்ந்தவர்களையே வேலையில் சேர்க்கிறார்கள். சொந்த மண்ணிலேயே தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

விற்பனை வரி போன்ற சில வரி விதிப்பு மற்றும் வசூல் அதிகாரங்கள் மாநில அரசுகளிடம் இருந்தன. அவற்றையெல்லாம் பறித்து விட்டது இந்திய அரசு! இந்திய அரசின் ஜி.எஸ்.டி. வரி மட்டுமே இப்போது வசூலிக்கப்படுகிறது. இதனால் தமிழ்நாட்டிற்கு நிதி வருவாயில் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. ஜி.எஸ்.டி. வரி வசூலில் தர வேண்டிய பங்குத் தொகையையும் இந்திய அரசு சரியாகத் தருவதில்லை.




தமிழ்நாட்டில் இந்திய அரசு 1 ரூபாய் வசூலித்தால், அதில் 40 காசு அளவில்தான் திரும்பி வருகிறது! அதேவேளை, உத்திரப்பிரதசம் போன்ற இந்தி மாநிலங்களில் நடுவண் அரசு 1 ரூபாய் வசூலித்தால் 1.79 ரூபாய் அம் மாநிலங்களுக்குத் திரும்பி வருகிறது என்று கர்நாடக முதல்வர் சித்தராமையா கூறுவது கவனிக்கத்தக்கது.

அரசமைப்புச் சட்டப்படி அமைக்கப்பட்ட தீர்ப்பாயம் மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றை காவிரித் தண்ணீர்ப் பங்கீட்டில் இந்திய அரசு செயல்படுத்த மறுக்கிறது. தமிழர்களுக்கெதிராக இனப்பாகுபாடு காட்டி, கர்நாடகத்தின் சட்ட விரோதச் செயல்களை நடுவண் அரசு ஆதரிக்கிறது. அதனால்தான் இப்போது காவிரி உரிமை மீட்புப் போராட்டங்கள் தமிழ்நாட்டில் உச்சத்தில் இருக்கின்றன.

எங்கும் உரிமைப் போராட்டம்

மிகத் தொன்மையான, மிக வளமான காவிரிப் பாசன விளை நிலங்களில் பெட்ரோலியம், எரிவளி எடுத்ததால் நிலத்தடி நீர் நஞ்சாகி விட்டது. வயல் வெளிகள் சாகுபடிக்கு இலாயக்கில்லாமல் தரிசாகி விட்டன. மேலும் காவிரிச் சமவெளியை பன்னாட்டு நிறுவனங்களின் வேட்டைக் காடாக்கிட நிலக்கரி, மீத்தேன் முதலியவற்றை எடுக்கப் பன்னாட்டு ஏலம் விட்டிருக்கிறது இந்திய அரசு.

இதனை எதிர்த்து காவிரிச் சமவெளியில் போராட்டங்கள் — தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் செம்பு உருக்காலையின் நச்சுக் கழிவால் பாதிக்கப்பட்ட மக்களின் தொடர் போராட்டங்கள் — கொங்கு மண்டலத்தில் விளை நிலங்களில் கெயில் எரிவளிக் குழாய்கள் இந்திய அரசு புதைப்பதை எதிர்த்துப் போராட்டங்கள் — தேனி மாவட்டம் அம்பரப்பர் மலையில் அணு வெடிப்பு அழிவை உண்டாக்கும் நியூட்ரினோ ஆய்வக எதிர்ப்புப் போராட்டம் என எங்கும் போராட்டம்!

வெள்ளையராட்சி உட்பட காலங்காலமாகத் தமிழ்நாட்டின் தாயாக விளங்கிய காவிரி உரிமையை — கச்சத்தீவை விடுதலை பெற்ற இந்தியா தமிழ்நாட்டிடம் இருந்து பறித்து, அடுத்த இனத்தார்க்குக் கொடுத்து விட்டது.

கடலில் மீன்பிடிக்கப் போகும் தமிழர்களை சிங்களப் படை அன்றாடம் தாக்குகிறது. இந்திய அரசு தட்டிக் கேட்பதில்லை; தடுப்பதில்லை. பாலாறு, தென்பெண்ணை, பவானி ஆறுகளின் குறுக்கே அண்டை மாநிலங்கள் அணை கட்டித் தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய தண்ணீரைத் தடுத்து விட்டன. இந்திய அரசு இந்த அநீதியைத் தடுக்கவில்லை.

தமிழ்நாட்டின் இன்றைய மக்கள் தொகை எட்டுக்கோடி! பிரான்சு, பிரித்தானிய நாடுகளின் மக்கள் தொகையைவிட அதிகம்!

உலக சமூகத்தால் — ஐ.நா. மன்றத்தால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள தேசிய இன இறையாண்மை தமிழர்களுக்குக் கிடைத்தால்தான் தமிழ்நாட்டு உரிமைகளைக் காக்க முடியும்; மீட்க முடியும்! எப்பொழுதும் தேசியம் என்பது தேச இறையாண்மையுடன் இணைந்தது. தமிழ்த்தேச இறையாண்மையைத் தமிழ்த்தேசியம் கோருகிறது!

# புத்தக விமர்சனம்

## தமிழகத் தொல்லியல் ஆய்வுகள் – கீழடி வரை

**ஆசிரியர் : சி.இளங்கோ**

*(கட்டுரை தொகுப்பு)*

**விலை : ரூ. 80**




**வெளியீடு:**

**அலைகள் வெளியீட்டகம்,**

**5/1 ஏ, இரண்டாவது தெரு, நடேசன் நகர், இராமாபுரம், சென்னை – 600 089.**

முனைவர் சி. இளங்கோ எழுதி அலைகள் வெளியீட்டகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ள "தமிழகத் தொல்லியல் ஆய்வுகள் ௫ கீழடி வரைஞ்" எனும் நூல் தற்போதைய சூழலில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த நூல் எனும் மதிப்பைப் பெற்றுள்ளது.

பல்லாயிரம் வருடங்களாக இத்தமிழ் நிலம் எவற்றையெல்லாம் தனக்குள் பொதிந்து வைத்துப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தேடுவதற்கு இந்நூல் ஒரு அறிமுகக் கையேடாக உள்ளது. தொல்லியல் ஆய்வுகளில் கிடைக்கும் முதுமக்கள் தாழிகள், பானைகள், குகை ஓவியங்கள், கற்கருவிகள், உலோகக்கருவிகள், நாணயங்கள் போன்றவற்றைக் கொண்டு அந்தக் கால மக்களின் வாழ்வியல் எவ்வாறு இருந்திருக்கும் என்பதைக் குறித்த ஒரு சுருக்கமான சித்திரத்தை முன்வைக்க நூலாசிரியர் முயன்றுள்ளார்.

தமிழகத்தில் நடந்த தொல்லியல் ஆய்வுகளில் கிடைத்த சான்றுகளைக் கொண்டு அந்தக் காலகட்டங்களில் எம்மாதிரியான தொழிற்பிரிவைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்திருக்க கூடும் என்பதை அலசிச் செல்கிற இந்நூல், குயவர்கள், கொல்லர்கள், தச்சர்கள், சிற்பிகள், உழவர்கள், கைவினைஞர்கள், நெசவாளர்கள் என ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு சமூகத்தை அச்சமூகத்தில் புழங்கிய பொருட்களைக் கொண்டு முகநூல் சகாப்தத்தின் மாந்தர்களுக்கு சுருக்கமாக அறிமுகம் செய்கிறது.

சிறுகதை



# காசிக்குப் போன சம்சாரி

## கொற்றவன்

சங்கரனுக்கு மனம் சக்கரமாகச் சுழன்றது.

என்னென்னவோ நினைவுகள்! எத்தனையெத்தனையோ கற்பனைகள்! கதைகளாக நிறையப் படித்திருந்ததும், கண்டவர்கள் சொல்லக் கேட்டிருந்ததும் அவன் சிந்தையில் ஓடிக் கொண்டிருந்தது.

"காசிருந்தால் போதுமா? காசி அழைக்க வேண்டாமா?" காலம் முழுதும் சொல்லிக்கொண்டே இருந்த கோடிவீட்டுக் கோடீஸ்வரர், கடைசி வரையிலும் காசிக்குச் செல்லாமலேயே காசினியை விட்டுச் சென்றுவிட்டாரே என்ற எண்ணம் அவ்வப்போது சங்கரனுக்குள் எழும்போது, 'காசிதான் அழைக்க வேண்டும்!' என்ற கோடீஸ்வரரின் கருத்து உண்மைதான் போலிருக்கிறது என்று நினைத்துக் கொள்வான்.

அந்த நினைப்புக்கு இப்போது ஒரு அர்த்தம் கிடைத்துவிட்டதாக உணரத் தொடங்கி விட்டான். கோடீஸ்வரராலும் போகமுடியாத காசிக்கு, தெருக்கோடியில் நிற்கிற நிலையிலிருக்கும் தன்னால் போகமுடிகிறதென்றால், அதுவும் ஒரு ரூபாய்க் கூடச் செலவில்லாமல் காசிக்குப் போய்வர முடியும் என்ற உத்தரவாதத்துடன் காசி தன்னை அழைக்கிறதென்றால்... சங்கரனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை!

காசிக்குப் பயணப்பட்ட முதலாளி சிவநேசன் குடும்பத்தாரின் பெட்டிப் படுக்கைச் சுமைகளோடு அவனும் ஒரு பெட்டியாக ஒட்டிக்கொள்ள, ஒருவழியாகத் தொடங்கியது சங்கரனின் காசிப் பயணம்!

ஆதி அந்தம் காணமுடியாத, தலைமுறை தலைமுறையாக, காலங்காலமாகக் காசியைப் பற்றி நிலவுகிற கதைகளும் அற்புதங்களும் சங்கரனுக்குள் எதிர்பார்ப்பைக் கிளப்பி விட்டிருந்தது.

காசியில் தன்னைக் கடந்துபோவது கடவுளாகக் கூட இருக்கக் கூடும்! தூணிலும் துரும்பிலும் இருக்கும் கடவுள், காசி மண்ணில் எந்த வடிவிலும் காட்சித் தரக்கூடும்! கவனமாக இருக்கவேண்டும். கடவுள் தரிசனத்தைத் தவறவிடக் கூடாது.

தானாக வரவில்லை, ஆதி சிவனான அந்தச் சங்கரனாரே தன்னைக் காசிக்கு அழைத்திருக்கிறார் என்ற எண்ணத்தில் சுழன்றபடி கண்கள் சொருகிக் கிடந்தான் சங்கரன்.

"என்ன சங்கரா? சத்தமே காணோம், தூங்கிட்டியா" சிவநேசனின் குரல் சங்கரனைக் குலுக்கியது. "ஆங்... ஐயா.... தூக்கமா? சேச்சே! சும்மா கண்ணை மூடிக்கிட்டிருந்தேன்!" கண்களைக் கசக்கிக் கொண்டு மலங்க மலங்க விழித்தான்.

காசிமண்ணில் கால் வைத்ததும் சங்கரனுக்கு உடல் சிலிர்த்தது.




"ஐயா, பார்த்தீங்களா?" இரண்டு கைகளிலும் பெட்டிப் படுக்கைகளைத் தூக்கிக் கொண்டு நின்றபடி கேட்டான் சங்கரன்.

"எதை? ம்! எல்லாம் சரியா இருக்குப்பா..."

"நான் நம்ம உடமைகளைச் சொல்லலே! காசியிலே கால் வைச்சதும் என் உடம்பு சிலுத்துச்சே! அதைப் பார்த்தீங்களான்னு கேட்டேன்." முழங்கைகளை நீட்டி மயிர்க் கால்கள் குத்திட்டு நிற்பதைக் காட்டினான்.

"ஏன் சிலுக்காது? இவ்வளவு நேரம் ஏ.சி.யிலே இருந்துட்டு வந்து இறங்கினா சிலுக்கத்தான் செய்யும்"

தன் சிலிர்ப்புக்குக் காரணம் காசியா? ஏசியா? சங்கரனுக்குள் பட்டிமன்றக் கேள்வி.

"இங்கிருந்து நேரா கயா போறோம். 'கயா சிரார்த்தம்' முடிச்சுட்டு, திரிவேணி சங்கமம் போறோம்." பயணப் பட்டியலை விவரித்தார் சிவநேசன்.

"ஆமாம்! போறோம்! போறோம்!" இசைப்பாட்டு பாடினான் சங்கரன்.

நீத்தார் கடன் செய்யும் புண்ணிய பூமியான கயாவின் பல்குணி ஆற்றங்கரையோரம் முதலாளியுடன் அமர்ந்திருந்தான் சங்கரன். அவனுக்கு முன்பாக பெரிய தாம்பளத்தில் மூன்று பெரிய சோற்று உருண்டைகள்.

வரிசையாகத் தங்கள் தாய் தந்தையர்க்கு, மூதாதையர்க்குத்திதிகொடுக்கஅமர்ந்திருந்தவர்கள், தங்களுக்கு முன்பாக இருந்த பெரிய தாம்பளத் தட்டில் சோற்றை உருட்டிக் கொண்டிருந்தனர்.


தனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த எண்பது வயதைக் தாண்டிய பெரியவர், கண்களில் நீர்த் தாரையிட 'பிண்டம்' பிடித்துக் கொண்டிருந்தார். அவர் கண்களில் கண்ணீரை வரவழைத்த கைங்கர்யத்தைச் செய்தவர், சிரார்த்தம் நடத்தும் ராமகிருஷ்ண ஆச்சாரியார்.

"எல்லாரும் நல்லா கேளுங்கோ! இங்கே நீங்க செய்யற தர்ப்பணம் இருக்கே... இதுதான் உங்க தாய் தந்தையருக்கு நீங்க செய்யற ஒரே ஒரு கைமாறு. நம்மைப் பெத்தவங்க நமக்குச் செஞ் சிருக்கிற கடமைகளுக்கும் நாம அவங்களுக்குப் பட்டிருக்கிற கடன்களுக்கும் ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் போதாது. அப்படியிருக்க, பகவான் காலடிக்குப் போய்ச் சேர்ந்துட்ட உங்க அம்மா அப்பாவுக்கு, அவங்க ஆத்ம சாந்திக்கு நீங்க செய்யற ஒரே ஒரு நல்ல காரியம் இதுதான்." ஆச்சாரியார் சொல்லச் சொல்ல அங்கே இருந்த

ஒவ்வொருவரும் அப்போதுதான் தன் தாய் தந்தையரின் பெருமையைப் புதிதாக உணர்ந்தவர் போலிருந்தார்கள். அதிலும் தள்ளாத வயதில் சங்கரனுக்குப் பக்கத்தில் இருந்த பெரியவர், உடைந்து அழுதார்.

சிரார்த்தம் முடித்து மூன்று பிண்டங்களையும் முறையாக, ஆற்றிலும், அரச மரத்தடியிலும், விஷ்ணு பாதத்திலும் வைக்கச் சொல்லி கிளப்பிவிட்டார் ஆச்சாரியார்.

'ஓடு!ஓடு!' என்று ஓடியவர்களோடு சங்கரனும் ஓடினான். முன்பெல்லாம் சென்னையின் சாலையோரத்தில் சிலர்



அமர்ந்துக் கொண்டு ஒரு குவளையை மாற்றி மாற்றி வைத்துச் சூதாடுவார். 'ஆ! ராஜா வை!' 'அங்கே வை! இங்கே வை!' என்பார்கள். எங்கே காசை வைத்தாலும் கடைசியில் காசு அவர்கள் கைக்குப் போய்விடும். அந்த மந்திர விளையாட்டுக் காட்சிகளைப் பார்த்திருந்த நினைவுகள் சங்கரனுக்குள் ஓடியது.

பிண்டத்தைத் தூக்கிக்கொண்டு ஓடியவர்களை 'இங்கே வை! அங்கே வை!' என்று ஆளாளுக்கு கையைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தார்கள்.

'அடேய்! பிண்டங்களை ஒழுங்கா வைக்க விடுங்கடா... முண்டங்களா!" கத்த வேண்டும் போல் இருந்தது சங்கரனுக்கு.

பழைய பாத்திரக் கடையில் யானை புகுந்து உருட்டியதுபோல அலங்கோலமாய் அலைந்தன மனிதத் தலைகள். வருகிறவன் போகிறவனெல்லாம் சங்கரன் தலையில் கையை வைத்து இரண்டு வார்த்தைகளை மந்திரமாய் முணுமுணுத்துவிட்டு "ஐநூறு கொடு! ஆயிரம் கொடு!" என்றார்கள்.

"இதென்ன பகல் கொள்ளையா இருக்கே!" எனப் புலம்பினான் சங்கரன். ஏற்கெனவே சில ஆயிரங்களை ஆச்சாரியார் விழுங்கிவிட்டார். பிண்டம் கொடுக்க வந்த இடத்தில் தடுக்கி விழுந்தால்கூட தண்டம் தரவேண்டியிருந்தது.

'ஆசையே துன்பத்துக்குக் காரணம்' என்ற ஞானோதயம் புத்தருக்கு இந்த கயாவில் எப்படி கிட்டியது என்ற காரணம் சங்கரனுக்கு மெல்லப் புரிபடுவது போலிருந்தது. புகைமண்டலம் நடுவே புத்தர் தோன்றி, "எல்லாம் கயா பிராமணர்தான் காரணம் சங்கரா" என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என நினைத்துக் கொண்டான்.

பணம் தண்ணீராய் கரைந்தாலும், மனம் நிறைந்ததென்னவோ மறுக்கமுடியாத உண்மை என்பதை முதலாளியின் முகம் காட்டியது.

"பெத்தவங்களுக்குப் பட்ட கடனை பிள்ளைகளால் அடைக்கவே முடியாது! ஆனா இந்த 'கயா சிரார்த்தம்' எங்கோ ஒரு மூலையிலே மனசுக்கு பெரிய ஆறுதலா இருக்குப்பா!" அந்த வார்த்தைகள் அவர் மனதின் அடித்தளத்திலிருந்து வந்திருக்க வேண்டும் என்பதை அவரது துளிர்த்த விழிகள் காட்டியது.

"அடுத்தது காசிதானே முதலாளி?" ஆர்வம் பொங்க கேட்டான் சங்கரன். "ஆமா சங்கரா, காசியும் கங்கையும் உனக்காக காத்திருக்கு!" முதலாளி சொல்லி முடித்ததுதான் தாமதம். அப்போதே கங்கையில் மூழ்கி எழுந்தாற்போல் சிலிர்த்துப் போனான்.

கங்கைக் கரையில் அவர்கள் வந்தடைந்த நேரம், செக்கர் வானம் சொக்க வைத்தது.

கங்கைக் கரையோரத்தில் அமைந்திருந்த மடங்களும், அழகிய மாடங்களும், அற்புதமான மாளிகைகளும், பழமையையும் பாரம்பரியத்தையும் பறைசாற்றிய வண்ணம் நின்றிருந்தன.

நதியைத் தெய்வமாகக் கொண்டாடும் கங்கா ஆரத்தியைப் பார்க்க கண் கோடி தான் வேண்டும்!

கங்கையின் நடுவே படகில் அமர்ந்தபடி, கரையில் நடக்கும் ஆரத்தி வழிபாட்டினைப் பார்த்த சங்கரனுக்கு மேனி சிலிர்த்தது. நம்மூர் காவிரிக்கும்


இதுபோல் ஆரத்தி எடுத்து வழிபட்டால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்? இருக்கும்தான்! ஆனால் காவிரியில் தண்ணீர் இருக்கவேண்டுமே!..

கங்கையைச் சுற்றி ஆன்மிகம் சுழல்வது போல காவிரியைச் சுற்றி அரசியல் அல்லவா சுழல்கிறது! என்று தீருமோ? ஏக்கப் பெருமூச்சுடன் கங்கையைப் பார்த்தான். கங்கை சுழன்று சுழன்று ஓடுவது இருளிலும் நன்றாகத் தெரிந்தது.

அவர்களை நோக்கி வந்தார் ‘கைடு.’

‘சரிதான்! அடுத்த கொள்ளைக்கு தயார் ஆகிட்டார்!’ எனப் பட்டது சங்கரனுக்கு.

ஐந்தடி அகல சந்து பொந்துகள் வழியே அவர் வளைந்து வளைந்து புகுந்து செல்ல, சங்கரனுக்கு அவரைப் பின் தொடர்வது, ‘ஜேம்ஸ்பாண்ட் சேஸிங்’ போன்ற ‘திரில்லிங்’ அனுபவமாக இருந்தது.



கங்கையில் தங்கமீன்கள் நீந்துவதுபோல பிம்பத்தைக் காட்டின நீரில் மிதந்து வந்த நெய்விளக்குகள்.

கங்கையில் அரைமணி நேரம் படகில் இருந்ததற்காக, படகுக்காரர் சில ஆயிரங்களைக் கறந்து விட்டார் என்பது கரையேறியபோது தெரிந்ததும், ஆடிப்போனான் சங்கரன்.

“கங்கைக்கு வந்தா பாவம் போகுதோ இல்லையோ, பணம் போயிடும் போலிருக்கே முதலாளி!” சங்கரன் வாய்விட்டுச் சொன்னான்.

“இங்கே பணத்தைப் பத்திப் பேசலாமா? பணம் எதுக்கு? செலவழிக்கத்தானே! கங்கையைப் பார்த்த நினைவு என்னைக்கும் நிலைச்சிருக்கும். செலவழிஞ்ச காசு நினைவிருக்காது, புரியுதா?”

“சரிதான் முதலாளி!”

படகோட்டிக்கு பணத்தைக் கொடுத்துவிட்டு கரையேறியதும், “அடுத்தது காசி விஸ்வநாதரைப் பார்க்கப் போறோம்.” சொல்லிக்கொண்டே

சந்து பொந்துக்களின் இருபுறமும் இருந்த கடைகளில் ஆன்மிகப் பொருட்கள், அபார விற்பனையில் இருந்தன. மேலே தலையுயர்த்திப் பார்த்தான். மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட மாட மாளிகைகள் ஆங்காங்கே தெரிந்தன. முன்னவர் கட்டுவித்த கலைநயங்கள் பின்னவர்களால் கண்டு கொள்ளப்படாத அவலநிலை சங்கரனுக்கு கவலையைத் தந்தது.

நடக்க முடியாத அளவுக்கு ஜனத்திரள் நடுவே மோட்டார் பைக் ஓட்டிவந்த உள்ளூர்வாசிகளின் அவசரமும், அல்லலும் பார்க்கவே வித்தியாசமாய் இருந்தது.

ஒருவழியாக முண்டியடித்து விஸ்வநாதர் ஆலயத்தை வந்தடைந்தபோது ஆடிப் போன சங்கரன், “என்ன முதலாளி! கோயிலுக்கு வந்த மாதிரி இல்லையே! உள்ளூர் மார்க்கெட்டுக்கு வந்த மாதிரியில்லே இருக்கு” வளையல் கடை மாதிரி ஆன்மிகப் பொருட்களின் கண்காட்சி வைத்தாற்போல இருந்தது அந்த இடம்.

“இதுக்கு மேலே உங்களை இந்தப் பண்டிட் ஜி அழைச்சிக்கிட்டுப் போவாரு.” என்ற ‘கைடு’ அவர்களிடமிருந்து ‘சைடு’ வாங்கிக் கொண்டார்.

“ஆவோ ஜி!” வாத்துக் கூட்டத்தைத் திசை மாற்றி அழைத்துச் செல்வதுபோல தாங்கள் கைமாற்றப்பட்டுச் செல்வது சங்கரனுக்கு ஏமாற்றமாக இருந்தது.



உள்ளே கூட்டம் முண்டியடித்து “அங்கே போ, இங்கே போ!” என்று அந்தச் சிறிய கோயிலுக்குள் வளைத்து வளைத்து அழைத்துச் செல்லப்பட்டார்கள். ‘எங்கே விஸ்வநாதர்! எங்கே விஸ்வநாதர்?’ என்று கண்கள் அலைபாய கடவுளைத் தேடித் தேடி அங்குல அங்குலமாக நகர்ந்தான். “வரிசையிலே போனா ரொம்ப நேரம் ஆகும், ஆயிரம், ஐநூறு கொடுத்தா சீக்கிரம் போகலாம்!” என்றார் பண்டிதர்.

கூட்டத்தைப் பார்த்து மலைத்திருந்த முதலாளி, ‘காசா முக்கியம்? சீக்கிரம் கடவுளைக் கண்ணுல காட்டுங்க’ எனச் சொல்லாத குறையாக சம்மதம் தெரிவித்தார்.

அதோ! இதோ! என்று அவசர அவசரமாய் மக்கள் வெள்ளத்தில் குறுக்கு வெட்டாக நீந்தி அழைத்துச் செல்லப்பட்டவர்களிடம் “இதர்! இதர்!” எனப் பண்டிதர் கூட்டத்திடையே புகுந்து நின்று கத்தினார்.

“எங்கே? எங்கே?” என்று அண்ணாந்தபடி தேடிக் கொண்டு சென்ற சங்கரனை, பண்டிதர் கையைப் பிடித்து இழுத்து தரையை நோக்கிக் குனியச் செய்தபோதுதான் கவனித்தான்.

கீழே தரையில் அம்மிக் குழவியென அருள்பாலித்தார் விஸ்வநாதர்!

சங்கரனுக்குப் பகீர் என்றது.

“என்னய்யா, இப்படிப் பண்றீங்களேய்யா..” ஓவென கத்தவேண்டும் போலிருந்தது அவனுக்கு.

பண்டிதர் அவன் கைகளை எடுத்து விஸ்வநாதர் தலைமீது வைத்து “கும்பிட்டுக்கோ!” எனக் கத்தினார்.

‘அடப்பாவி! ஐநூறு, ஆயிரத்துக்கு ஆசைப்பட்டு, அருள் கொடுக்கும் ஆண்டவன் தலைமேலே கை வைக்கச் செய்து விட்டானே இந்தப் பாழாய்ப் போன பண்டிதன்!!’

‘அடேய் சங்கரா! காசில்லாமலே காசிக்கு வந்துவிட்டு, என் தலைமீதே கையை வைத்து விட்டாயா? இரு, உன்னை கவனித்துக் கொள்கிறேன்!”

‘திருவிளையாடல்’ சிவாஜி உருவில் சிவனே சொல்வது போல் அவனுக்குள் ஒரு குரல் ஒலித்தது.

ஆலயத்தைவிட்டு வெளியில் வந்தும் அதிர்ச்சி விலகாமலிருந்தான் சங்கரன்.

கடவுள் எங்கும் இருப்பவன்தான்! கல்லிலும் முள்ளிலும், மண்ணிலும் விண்ணிலும்பார்த்து மகிழ்பவன்தான் உண்மையான பக்தன்! எல்லாம் சரிதான்!

ஆனால்... ஆனால்... காசியில் இப்படிப் பண்ணிட்டீங்களேய்யா!

‘தென்னாட்டில் பெரும்பெரும் வடிவில் உயர்ந்து பார்த்தே பழக்கப்பட்டுவிட்ட பரம்பொருளை தரையில் போட்ட குழவியென காட்டிவிட்டார்களேய்யா!’ அதிர்ச்சியில் விக்கித்தவன் வார்த்தைகளே வராமல் வெளியேறினான்.


ஆலயத்தில் ஆலாய் பறக்கும் ஆசாமிகள் ஆயிரமாயிரம் பேர்களிடையே, சாதுக்களும், சாமியார்களும், சடைமுடிவாசிகளும் அங்கொருவரும் இங்கொருவருமாகத் தென்பட்டனர்.

அப்போதுதான் கவனித்தான், பழுத்த பழமாய் வெண்தாடி மனிதர் ஒருவர், சங்கரனைப் பார்த்து சிரித்தபடியே கடந்தார். அவரது ஓரப் பார்வையில் ஒரு குறும்புத்தனம் கொப்பளித்தது.

“ஓம் நமச்சிவாய! நாதன்தாள் சரணம்! நானும் கண்ட காசிநாதன் சரணம்!” அழகுத் தமிழில் சொல்லிக்கொண்டே நடந்தார். அவரைப் பார்த்தால் காசிவாசியாகவும் தெரியவில்லை! காசிருப்பவராகவும் தெரியவில்லை! நெருக்கியடிக்கும் மக்கள் கூட்டத்தில் அவர் காசிநாதரை நிச்சயம் பார்த்திருக்க முடியாது! பிறகெப்படி?

ஏதோ முணுமுணுத்தபடி புன்னகையுடன் பெரியவர் அவனைக் கடந்து சென்றார்.

‘நெருக்கும் கூட்டத்தில் எப்படியோ காசிநாதனைக் கண்டுவிட்டாரே இந்தப் பெரியவர்!’




யோசனையுடன் நடந்தவன் அவரைத் திரும்பிப் பார்த்தான்.

அவனுக்குள் மின்னல் வெட்டியது! பெரியவரைக் காணவில்லை! எங்கே போனார்?

குறுக்கும் நெடுக்குமாக அலையும் ஆட்கள் நடுவே அவர் தென்படவில்லை.

"என்ன சங்கரா நின்னுட்டே?" முதலாளியின் குரல் கேட்டு அவரிடம் ஓடினான்.

"ஒண்ணுமில்லே முதலாளி, காசிநாதனைப் பார்த்த அதிர்ச்சி வேறொண்ணுமில்லே!"

"என்ன சொல்றே சங்கரா?"

"பின்னே என்ன முதலாளி, பட்டிக்கு ஆட்டுமந்தையை அவசரவசரமா ஓட்டிகிட்டுப் போறமாதிரி உள்ளே தள்ளிக்கிட்டுப் போயி, தள்ளிவிடாத குறையா, கீழே குனிய வைச்சு, விஸ்வநாதரைப் பாருன்னு கடவுள் தலையிலேயே கைவைக்க வைச்சுட்டாங்களே! நம்மூர்லே விஸ்வரூபமாய் விஸ்வநாதரைப் பார்த்துட்டு இங்கே விசுக்குன்னு விளாம்பழம் மாதிரி பார்த்தது அதிர்ச்சியாக இருக்கு!" சங்கரன் அழாத குறையாகச் சொன்னான்.

"உண்மைதான்! கடவுளை எல்லா வடிவிலும் உணர்ந்திருக்கற நம்ம முன்னோர்கள், கடவுளை எல்லா வடிவிலும் பார்க்க நம்மைப் பழக்கியிருக்கிறாங்க. இந்தக் காசிப் பயணத்துல அதை நான் உணர்றேன்." பணத்தை தண்ணீராய் பல்லாயிரம் செலவழித்து காசிநாதனைக் கண்ட சிவநேசன் மனம் நிறைந்திருந்தார்.

பத்துருபாய் செலவு செய்யாமல் காசிநாதனை கண்ட சங்கரனோ மனக்குறையுடன் இருந்தான்.

கங்கைக் கரையில் அமர்ந்திருந்த பழுத்த சந்நியாசி ஒருவர் சத்தமாகப் பாடிக்கொண்டிருந்தார்

"ஆதியும் அந்தமும் ஆன ஒருவனே

சோதியாய் நின்றானடி! —குதம்பாய்

சோதியாய் நின்றானடி!

சீவனும் புத்தியும் சித்தமும் தந்தவன்

தேவன் அவனாமடி! — குதம்பாய்

தேவன் அவனாமடி!" —சந்நியாசி சங்கரனுக்காகவே பாடுவதுபோலவே இருந்தது.

சங்கரன் சந்நியாசியை பார்த்தான். தன் காவிப்பற்கள் தெரியச் சிரித்தார் அந்தக் காவியுடைச் சாமியார். அந்தச் சிரிப்பில் என்னவோ ஒளிந்திருந்ததுபோல உணர்ந்த சங்கரன் பதிலுக்குச் சிரித்து வைத்தான்.

எங்கிருந்தோ வந்த ஒரு நீர்ப்பறவை கங்கைக்குள் பொத்தென்று விழுந்து, மூழ்கி எழுந்து விர்ரென்று மேலெழுந்து பறந்தது.

"இருங்க முதலாளி!" விடுவிடுவென ஓடிய சங்கரன் கங்கைக்குள் முற்றாக மூழ்கி எழுந்து வந்தான்.

அவன் முகத்தில் அப்படியொரு பரவசத்தைக் கண்டார் சிவநேசன்.

# அறிவோம் தமிழர்

## தொல்காப்பியன்: ஆதி அறிவன்

**மொ**ழி ஓர் உயிரி. அது தன்னைப் பேசும் மனிதர்களை இயக்குகிறது; அவர்களால் இயக்கவும் பெறுகிறது; இறந்த காலத்தைச் சுமந்துகொண்டு நிகழ்காலத்தில் இயங்கிக்கொண்டு, எதிர்காலத்தின் பெரு வெளியில் பயணிக்கிறது. ஓர் உயிரி சந்திக்கும் நல்வினைகளையும் அல்வினைகளையும் ஒரு மொழி எல்லாக் காலங்களிலும் எதிர்கொள்கிறது. காலத்திருப்பங்களில் சில மொழிகள் கவிழ்ந்துவிடுகின்றன. சில தடம் புரள்கின்றன. சில விபத்துக்குள்ளாகி விழுகின்றன. சில அந்நியக் கிருமிகள் புகுந்து நோயுற்று அழிகின்றன. வளர்சிதை மாற்றத்திற்கு உள்ளாகாத சில மொழிகள் முதுமையுற்று மாய்கின்றன.

லத்தீன் — சம்ஸ்கிருதம் — ஹீப்ரு போன்ற மூத்த மொழி களெல்லாம் மேற்சொன்ன இவற்றுள் ஏதோ ஒன்றிலோ, கண்டறியப்படாத ஒரு காரணத்தினாலோ உலக வழக்கு ஒழிந்துபோயின. ஆனால், மேற்சொன்ன அத்தனை காரணங் களையும் வெவ்வேறு காலகட்டங்களில் எதிர்கொண்டு இன்னும் உயிரோடு விளங்கும், உயிர்ப்போடு துலங்கும் மிகச் சில பேருயிரிகளில் நமது தமிழ் தலையாயது. வாழ்வோடு படைப்பிலக்கியங்களையும், படைப்பிலக்கியங்களோடு வாழ்வையும் தமிழர்கள் இடையறாது பேணிவந்ததே அது உயிர்த்திருப்பதற்கு முதல் காரணம்; இலக்கணம் என்ற அறிவியல் மீது அது திட்டமிட்டுக் கட்டப்பட்டிருப்பது இரண்டாம் காரணம்.

ஆரிய வரவினால் தமிழுக்கு நேரவிருந்த பெரும் பின்னடைவிலிருந்து தமிழைக் கட்டிக்காத்த காப்பு நூல் என்றே தொல்காப்பியத்தைக் கருத வேண்டும். தொல் + காப்பு + இயம் — தொல்மரபுகளைக் காப்பதற்கே இயம்பப் பெற்ற இலக்கணம் என்று கொள்வது ஒருபோதும் உண்மைக்குப் புறம்பாகாது.

தொல்காப்பியத்தின் தொன்மை

தொல்காப்பியத்தின் தொன்மை குறித்து அறிவுலகத்தில் பல கருத்துகள் உண்டு. தொல்காப்பியத்தின் காலம் கி.மு. 5320 என்பார் வெள்ளைவாரணார்; கி.மு. 2000 என்பார் புலவர் குழந்தை; கி.மு. 1200 என்பார் கா.சுப்பிரமணிய பிள்ளை; கி.மு. 1000 என்பார் மு.வ.; கி.மு. 700 என்பார் இலக்குவனார்; கி.மு. 200 என்பர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் — மு.ராகவ அய்யங்கார் இருவரும்; கி.பி. 400 என்பார் வழக்கம்போல் வையாபுரிப் பிள்ளை. தொல்காப்பியத்தின் காலம் குறித்து வேறுபாடுகள் இருப்பினும், அது தமிழுக்கு நல்ல காலம் என்பதில் அறிஞர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு நிலவ வாய்ப்பில்லை.

மூன்று தமிழ்ச் சங்கங்களை மூன்று கடற்கோள்கள் அழித்திருக்கின்றன என்பது ஆய்வுலக நம்பிக்கை. கி.மு. 2387—ல் முதல் கடற்கோள், கி.மு 504—ல் இரண்டாம் கடற்கோள், கி.மு. 306—ல் மூன்றாம் கடற்கோள் நேர்ந்தன என்பது அனுமானத் தால் பெற்ற ஆய்வாகும் அல்லது ஆய்வில் பெற்ற அனுமானமாகும். "இடைச்சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலாயிற்று(த்) தொல்காப்பியம்" என்பது இறையனார் களவியல் ஆசிரியர் கூற்றாதலின் முதல் கடற்கோளுக்குப் பிறகு பிறந்தது தொல்காப்பியம் என்று கொள்ளலாம்.

முதற்கடற்கோளில் தமிழரின் பெரிய நிலப்பரப்பும் அரிய நூல்களும் ஆழிவாய்ப்பட்டழிய, தமிழினம் ஊனப்பட்டு நின்ற ஒரு காலவெளியில், ஆரிய மொழியும் பண்பாடும் தமிழர் மீது தாக்குறவு நிகழ்த்தத் தலைப்பட்டதாகக் கருதப்பட்ட பண்பாட்டுச் சூழலில், தமிழின் இலக்கணத்தையும் தமிழரின் வாழ்வியலையும் பெருமிதத்தோடு தூக்கி நிறுத்திய பேரறிவாளன் தொல்காப்பியன்.

வடமொழி வழிநூலா நம் தொல்காப்பியம்?

தொல்காப்பியம் முதனூலா, வடமொழிச் சார்புற்ற வழிநூலா என்பது ஒரு நீண்ட வினா. தொல்காப்பியரின் ஒருசாலை மாணாக்கர் என்று கருதப்பெறும் பனம்பாரனார் பாடிக்கொடுத்த பாயிரத்தில் காணப்பெறும் ஒரு சொல்லாட்சியே இந்த வினாவை விதைத்திருப்பதாய் ஒரு சாரார் கருதுகிறார்கள். "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத் / தன்பெயர் தோற்றி" என்ற தொடரில் துலங்கும் ஐந்திரம் என்ற சொல், ஐந்திர வியாகரணமாகிய வடநூலைக் குறிக்கிறதென்றும் தொல்காப்பியம் அதனடியாய் வந்த வழிநூல்

# பெருமை

என்றும் சிலர் கருதுவர். ஐந்திரம் என்பதை ஐந்திர வியாகரணம் என்று எழுதிச்சென்ற அடியார்க்கு நல்லாரை அவர்கள் சான்று காட்டுவதுமுண்டு.

**கவிஞர் வைரமுத்து**


இங்கிருந்துதான் நம் பொறுப்புமிக்க மறுப்புவாதம் உயிர்ப்புறுகிறது. முதலில் ஐந்திரம் என்பது ஓர் இலக்கண நூல் அன்று. அது ஐந்திரம் — ஆக்கினேயம் — கணாதிபத்தியம் — சைவம் — வைணவம் — சாக்கியம் என்ற அறுவகைச் சமயங்களுள் ஒன்று. ஒரு சமய நூல் எப்படி இலக்கணத்திற்கு முதனூலாகும்? இன்னொன்று: தொல்காப்பியம் நிலவிய காலத்தில் ஐந்திரம் உலவியதாகச் சான்றொன்றும் கிட்டிலது. அதே பனம்பாரனாரின் பாயிரம் “செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு / முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி” என்று பாடியிருப்பதால் தமிழக எல்லைகளுக்கு உட்பட்ட முந்துநூல்களே தொல்காப்பியத்தின் மூலநூல்கள் என்பது தெளிவாகிறது. ஆகவே, தொல்காப்பியம் முதனூல்தான்; மூத்த தமிழ்க்குடியின் மூளைச்சாறுதான்; தமிழினத்தின் ஐயந்திரிபற்ற ஆதி அறிவுதான்.

எழுத்து — சொல் — பொருள் என்ற மூன்று அதிகாரங்களையும் ஓர் அதிகாரத்திற்கு ஒன்பது வீதம் 27 இயல்களையும் இளம்பூரணர் கணக்குப்படி 1,595 நூற்பாக்களையும், நச்சினார்க்கினியர் பேராசிரியர் கணக்குப்படி 1,611 நூற்பாக்களையும் உறுப்புகளாக உடையது தொல்காப்பியம்.

தமிழை ஆளும் மூன்றதிகாரங்கள்

மூ ன் ற தி கா ர ங் க ளு ள்

எழுத்தையே தொல்காப்பியம் முன்வைக்கிறது. ஒலிப்பதிவு கண்டறியாத காலம் வரைக்கும் பேச்சுமொழி என்பது தன்மை முன்னிலைக்கு மட்டுமே உரியது. ஆனால், எழுத்து என்பதோ



தன்மை — முன்னிலை — படர்க்கை என முக்காலத்திற்குமானது. எழுத்து என்பது ஒலியை ஊற்றிவைக்கும் கொள்கலன். அது அறிவின் சேமிப்புக் கிடங்கு. தலைமுறைகளுக்கான ஞானத்தைக் கடத்தி ஏகும் கருவி. மொழியின் எழுத்துகளைப் பகுப்பதென்பதே ஒரு கணிதம் மற்றும் அஃதோர் ஒலி விஞ்ஞானம். தொல்காப்பியர் ஓர் ஒலி விஞ்ஞானி.

தமிழ் எழுத்திலக்கணத்தை "நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல்" என்று 9 இயல்களில் வகைப்படுத்துகிறார் தொல்காப்பியர். "எழுத்தெனப் படுவ / அகர முதல னகர இறுவாய் / முப்பஃது என்ப / சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே" என்று தமிழ் எழுத்துகள் மொத்தம் 33 என்று வரையறுக்கிறார். அகர முதல் 'ன'கர ஈறாகவுள்ள முப்பதோடு, குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்னும் மூன்றையும் கூட்டித் தமிழ் எழுத்து கள் 33 என்று முடிவுசெய்கிறார்.

தனித்தியங்கவல்ல 12 எழுத்துகளை உயிர் எழுத்துகள் என்றார், தனித்தியங்கவல்லாத 18 எழுத்துகளை மெய் யெழுத்துகள் என்றார். உயிரைச் சார்ந்து இயங்குவதே மெய் என்ற பேரறிவை மொழியின் மீது சாற்றிய முன்னோர்களின் மூதறிவைக் கருதும்போதெல்லாம் உள்ளம் களிகூர்கிறது. குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் இம்மூன்றும் ஒரு சொல்லைச் சார்ந்தன்றி தனித்தியங்கும் இயல்பற்றன வாதலின் சார்பெழுத்துகள் எனப்பட்டன.

எழுத்ததிகாரத்தின் பெருமை பேசப் பிறப்பியல் ஒன்றே போதும். எழுத்துகள் பிறப்பதெங்ஙனம், அவற்றின் பிறப்பிடம் யாது என்று சிந்தித்த தொல்காப்பியர் உடல் — உயிர் — காற்று என்ற மூன்று மூலங்களோடு முடிச்சுப் போடுகிறார். "உந்தி வழியா முந்துவளி தோன்றித் / தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப் / பல்லும் இதழும் நாவும் மூக்கும் / அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்ஞ் / ஞ்பிறப்பின் ஆக்கம் வேறு வேறியல" — என்பது நுட்பமான நூற்பா.

உந்தி வழியே முந்தி எழுகின்ற காற்று தலை — மிடறு — நெஞ்சு ஆகிய மூவிடங்களில் தவழ்ந்து, பல் — உதடு — நாக்கு — மூக்கு — அண்ணம் ஆகிய ஐவகை உறுப்புகளோடு உறழ்ந்து, வெவ்வேறு உருவாய்த் தோற்றுவதே எழுத்துகளின் பிறப்பு முறையாகும் என்று அறிவியல் தளத்தில் நின்று அறுதியிட்டு அறிவிக்கிறார்.

மொழிக்கு முதலெழுத்தாக வரக்கூடியவை எவை? வாராதவை எவை என்று தொல்காப்பியர் இட்டுக்கொடுத்த சட்டம் 3000 ஆண்டுகளாய் நின்று நிலவுகிறது. உயிர் எழுத்து பன்னிரண்டும் மொழி முதலாகும். மெய்யெழுத்துகள் மொழி முதலாகா. வடநாட்டுப் பண்பாட்டுத் தாக்கத்தால் கிரந்த எழுத்துகள் தமிழுக்குள் புகத் தலைப்பட்ட காலத்தில், தொலைநோக்குப் பார்வையோடு தொல்காப்பியர் செய்த ஒரு நூற்பாதான் இன்றுவரை தமிழின் தனித்தன்மையைக் காக்கிறது; அதுதான் அந்நிய மொழியை வெளியே நிறுத்தித் தூய்மையுறுத்தித் தமிழுக்குள் அனுப்புகிறது.

காலப்போக்கில் கிரந்த எழுத்துகளின் சொற்களைத் தவிர்க்க முடியாது; ஆனால், அந்த கிரந்த எழுத்துகளைத் தவிர்க்கலாம் என்று முடிவெடுத்தான் அந்த மொழியறிஞன். "வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ / எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" என்றான். அதாவது, வடசொற்களின் வடவெழுத்துகளைத் தமிழ் எழுத்துகளாக்கித் தமிழோடு புழங்கலாம் என்று இலக்கணச் சட்டம் இயற்றினான். லக்ஷ்மன் — இலக்குவன் ஆனதும், ஜானகி — சானகியானதும், மஹாராஷ்டிரம் — மராட்டியம் ஆனதும், ஹைகோர்ட் — ஐகோர்ட் என்று எழுதப்படுவதும் தொல்காப்பியன் வகுத்த மொழிமரபின் தொடர்ச்சியே ஆகும். இன்று வடசொற்களையும், திசைச் சொற்களையும் அந்தந்த ஒலிவடிவில் எழுதுவது ஊடகக் கலாச்சாரமாய் இருப்பினும், தொல்காப்பியரின் செல்வாக்கு தமிழ்ப்பரப்பில் முற்றிலும் அற்றுப்போகவில்லை என்பதே மொழியின் தனித்தன்மையாகும்.


காலப்பெருவெளியில் எத்தனையோ அரசர்களின் எத்துணையோ அதிகாரங்கள் மாண்டழிந்துபோயின. ஆனால், தொல்காப்பியன் இயற்றிய மூன்று அதிகாரங்களும் இன்றுவரை ஒரு மொழியில் ஆட்சி செலுத்துகின்றன.

இரு திணைகளில் அடங்கும் உலகு

வைப்பு முறையில் எழுத்ததிகாரத்தைத் தொடர்கிறது சொல்லதிகாரம். எழுத்துக்கு முன்பே பிறந்தது சொல். சொல்லை முன்னிலைப்படுத்திப் பொருள் உண்டாவதில்லை. பொருளை முன்னிலைப்படுத்தியே சொல் உண்டாகிறது. பின்னர் அந்தப் பொருளைச் சுட்டும் சொல் தானும் ஒரு பொருளாகிறது. பொருளே சொல்லுக்கு மூலம் என்பதனால் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்று அறைந்து சொல்கிறது தொல்காப்பியம். இன்னும் ஆழ்ந்து பார்த்தால் எந்த ஒலி எழுத்துக்குள் அடங்குகிறதோ அதுவே சொல்லாகிறது.

கடலோசை — காற்றோசை — இடியோசை — மழையோசை — பறவையோசை — விலங்கோசை — ஆற்றோசை — அருவியோசை — இசைக் கருவிகளின் இன்னோசை — முத்தம் — சிரிப்பு —

முனகல் — இருமல் இவையெல்லாம் எழுத்துகளில் அடங்குவதில்லை. அதனால், இவை யாவும் ஒலிக்குறிப்பு களாகுமே அன்றிச் சொற்களாகா. எழுத்துக்குள் அடங்கும் ஒலியே சொல்லாகிறது.




இந்தப் பேரண்டத்தை அளக்கும் அத்தனை சொற்களை யும் இரண்டே இரண்டு செப்புக்குள் அடைக்கிறார் தொல்காப்பியர். ஒன்று உயர்திணை; மற்றொன்று அஃறிணை.

மனிதர் உயர்திணை; மனிதக் கூட்டம் அல்லாதவை எல்லாம் அஃறிணை. அந்த உயர்திணையை ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற மூன்றுக்குள் அடக்கிய தொல்காப்பியர், அஃறிணையை ஒன்றன்பால், பலவின்பால் என்ற இரண்டுக்குள் அடக்குகிறார். இந்தச் சொற்பகுப்பைத் தமிழ் ஞானத்தின் உச்சம் என்றே கொண்டாடலாம். "இந்தோ ஐரோப்பிய மொழிகள் பல உயிருள்ளன, உயிரல்லன அனைத்தையும் உயர்திணையாகவே கொண்டு ஆண் — பெண் என்ற இரு பிரிவுக்குள் அடக்கிவிட்டன.

சித்திய மொழிக் குழுவினுள் பல எல்லாவற்றையும் அஃறிணை யாகவே கொண்டு ஒன்று — பல என்ற இரு பிரிவுக்குள் அடக்கிவிட்டன. தமிழ் ஒன்றுதான் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுத்து, அதனையுடைய மக்களை உயர்திணை எனக் கூறியுள்ளது" என்று தமது தொல்காப்பிய ஆராய்ச்சியுள் அறிஞர் சி.இலக்குவனார் சுட்டுவது அறிவுலகத்தின் ஆழ்ந்த பார்வைக்கு உள்ளாகிறது.

அந்தச் சொற்களைப் பெயர் — வினை — இடை — உரி என்று நான்காகப் பகுத்தபோது மொழியின் மொத்தக் கட்டமைப் பும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. "பொருளை உணர்த்துவது பெயர்ச்சொல். அப்பொருளின் தொழிலைச் சொல்வது வினைச்சொல். பெயருக்கும் வினைக்கும் இடையே மையமாய் இயங்குவது இடைச்சொல். பொருளின் பண்பு கூறுவது உரிச்சொல்" என்ற சிவஞான முனிவரின் தெள்ளுரையும் உள்வாங்கி உணரத்தக்கது.

சொல்லதிகாரத்தில் சொல்லப்பட்ட கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்ற ஒன்பது இயல்களிலும் சொல்லும், சொல் இயங்கும் அறிவியலும், மொழியின் இயக்கத்தால் பெறப்படும் விகாரங்களும், விகாரங்களால் பெறப்படும் புதுவடிவங்களும், தமிழ் மொழியின் ஒரு சொல் இப்படித்தான் இயங்கும் அல்லது இயங்க வேண்டும் என்ற ஒலிச் சட்டங்களும் வரையறுத்து வழங்கப்பட்டுள்ளன. தொல்காப்பியரின் சொல்லதிகாரத்தை இற்றைநாள் மொழியில் சொல்லறிவியல் என்றும் சொல்லலாம்.

பொருள் எனும் பேரதிகாரம்

மூன்றாம் அதிகாரத்திற்குப் பொருளதிகாரம் என்று தலைப்பிட்ட தொல்காப்பியரின் சொற்றேர்வு சுட்டுகிறது அவர் பெற்ற பேரறிவை. மனிதன் பொருள்களால் ஆக்கப்பட்டவன் மற்றும் பொருள்களை இயக்குகிறவன்; பொருள்களால் இயக்கப்படுகிறவன். பொருள்களைக் கண்டறிகிறவன்; பொருள்களை உண்டாக்குகிறவன். இறுதியில் தானும் ஒரு பொருளாகி, பின்னர் பொருளற்ற பொருளாகிக் காலப்பொருளுக்குள் மூலப்பொருளாய்க் கலக்கிறவன் அல்லது கரைகிறவன். இந்த உலகப் பொருள்கள் கட்படு பொருளென்றும் கருது பொருளென்றும் இருவகைப்படும். அவற்றை மூவகைப்படுத்தி முதற்பொருள் — கருப்பொருள் — உரிப்பொருள் என்று பகுத்தறிவால் பகுத்துப் பகுத்து வகைப்படுத்துகிறார் தொல்காப்பியர்.

முதற்பொருள் எதுவென்று முன்மொழிந்தது தொல்காப் பியரின் மூளைப்பழம் பிழிந்த சாறாகும். உயிர்த்தோற்றத் தின் மூலமாகிய இந்த நிலமென்ற உருவமும், இந்த நிலவியல் வாழ்வை இயக்குகின்ற காலம் என்ற அருவமும் முதற்பொருள் என்பது தொல்காப்பியரின் அசைக்க முடியாத அறிவின் ஆணையாகும். "முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின் / இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே" என்பது எங்கள் முன்னோன் எழுதிய முன்னறிவியல்.

ஐன்ஸ்டைன் முதலாக ஸ்டீபன் ஹாக்கிங்ஸ் ஈறாக விளங்கிய விஞ்ஞானிகளும் 'காலமும் வெளியும்' (ஜிவீனீமீ ணீஸீபீ ஷிஜீணீநீமீ) என்று தேடிக் கண்டறிந்த திரவியத்தை அன்றே சுட்டிய பேரறிவு பெருமைக்குரியது.

முதற்பொருள்களில் கருக்கொள்வனவெல்லாம் கருப்பொருள்கள். அந்தக் கருப்பொருள்களின் ஒழுகலாறுகள் உரிப்பொருள்கள் என்று வகைப்படுத்தியதில் மொத்த உலகத்தையும் இந்த மூன்று பகுப்புக்குள் அடக்கி முடிக்கிறார் அறிஞர் பெருமான்.

அகத்திணையியல் — புறத்திணையியல் — களவியல் — கற்பியல் — பொருளியல் — மெய்ப்பாட்டியல் — உவமவியல் — செய்யுளியல் — மரபியல் என்ற பொருளதிகாரத்தின் 9 இயல் களிலும் தமிழர்களின் காதலும் வீரமும், நிலமும் பொழுதும், வாழ்வும் தொழிலும், உணவும் உணர்வும், கலையும் கல்வியும், வழக்கமும் ஒழுக்கமும், உறவும் பிரிவும், அறமும் மறமும், மரபும் மாற்றமும், யாப்பும் அணியுமென எல்லாப் பொருளையும் இலக்கணப்படுத்தியிருக்கிறார் தொல்காப்பியப் பேராசான்.

## விஞ்ஞானத்தோடு முன்னின்றவன்

உலகத் தோற்றம் குறித்து இதுவரை இரண்டு கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒன்று மதக் கருத்து; இன்னொன்று அறிவியல் கருத்து. இந்த அண்டமே கடவுளின் கைவினை என்ற கருத்தையே எல்லா மதங்களும் எழுதிப்போகின்றன. ஆனால், கரிமக்கொள்கை என்ற விஞ்ஞானம் இந்த பூமியின் தோற்றம் குறித்து அதுவரையில் இருந்த எல்லா நம்பிக்கைகளையும் முடிவுக்குக் கொண்டுவந்தது. ஆனால், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அறிவியல் எல்லைக்குள் அண்டத்தை அளந்தது தொல்காப்பியம்.

"நிலம் தீ நீர் வளி விசும்பொடு / ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்" (பொருளதிகாரம் மரபியல் 86) என்று வரையறுக்கிறது தொல்காப்பியம். நிலம் — நீர் — தீ — வளி — வெளியென்ற ஐந்தின் கலவைதான் இந்த மண்கோள் என்று முரண்பாடில்லாத கருத்தை முன்மொழிகிறது. இந்த பூமி எப்படிப் படைக்கப்பட்டது என்ற மதம்சார் கருத்தியலில் தோயாமல், எதனால் படைக்கப்பட்டது என்ற மெய்ம்மையோடு மட்டும் நின்றுகொண்டதால் தொல்காப்பியத்தை எந்த நூற்றாண்டு அறிவியலும் இடறித்தள்ளவியலாது.

தொல்காப்பியர் எந்த மதத்துக்குள்ளும் தன்னை இணைத்துக்கொள்ளவில்லை. ஐவகை நிலம் காக்கத் தங்க ளைக் களப்பலியிட்டுக்கொண்ட முன்னோர்களுக்கு நட்ட நடுகல்லையே தமிழர்கள் தெய்வமென்று போற்றி வழி பட்டார்கள் என்பதையே தொல்காப்பிய நூற்பா நுதலிப் போகிறது. "காட்சி, கால்கோள் நீர்ப்படை நடுகல் / சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று இருமூன்று மரபில் கல்லொடு புணர" (பொருளதிகாரம் : புறத்திணையியல் 5) என்னும் தொல்காப்பியம் நடுகல் வழிபாடுதான் தமிழர்களின் ஆதிவழிபாடு என்று சான்றளிக்கிறது. அதுவே, குலதெய்வ வழிபாடாகி இன்றுவரை நாட்டார் சமயமாய் விளங்குகிறது.

## தொல்காப்பியத்தை எப்படி மதிப்பிடுவது?

மொழி, இலக்கணக் கோட்டுக்குள் இயங்கவும், அதன் ஒலி தடம் புரளாமல் பயணிக்கவும், தமிழன் ஆதிகுடி என்பதற்கு அடையாளம் காட்டவும், மொழிக்கு அறிவியலையும் வாழ்வுக்கு அறவியலையும் அடிப்படையாகக் கொண்டது தமிழ்ப் பழங்குடி என்பதற்குச் சான்று சொல்லவும், தமிழர்க்கு உச்சமாகவும் எச்சமாகவும் உள்ள தொல்லாவணமே தொல்காப்பியம் என்று மதிப்பிடலாம். தொல்காப்பியத்தைக் கட்டிக்காப்பது அரசாங்கத்தின் — அறிவுலகத்தின் கடமை மட்டுமன்று; தமிழ் மொழி பேசும் — எழுதும் ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

# அரச திருமணம்!

இங்கிலாந்து இளவரசர் ஹாரி — மேகன் மெர்கல் திருமணம், பிரிட்டனின் வின்ட்சர் நகரில் உள்ள புனித ஜார்ஜ் தேவாலயத்தில் கோலாகலமாக நடைபெற்றது. இங்கிலாந்து இளவரசர் சார்லஸ், டயானா தம்பதியரின் இளைய மகன் இளவரசர் ஹாரி. 33 வயதான இவர் தன்னைவிட 3 வயது அதிகமான அமெரிக்க நடிகை மேகன் மார்கிலை காதலித்து வந்தார். இவர்களது காதல் திருமணத்துக்கு இளவரசர் ஹாரியின் பாட்டியும், இளவரசர் சார்லசின் தாயாருமான ராணி இரண்டாம் எலிசபெத் ஒப்புதல் அளித்தார். இதையடுத்து அவர்களது திருமணம் நிச்சயமானது.

இந்த திருமணத்தை கேன்டர்பரி பேராயர் ஜஸ்டின் வெல்பி நடத்தி வைத்தார். இந்த மணவிழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்துவதற்காக 11.20 மணிக்கு ராணி குடும்பத்தினர் தேவாலயத்திற்குள் வந்தனர். அதைத்தொடர்ந்து திருமண ஆராதனை நடைபெற்றது விமானங்கள் பறக்க தடை விமானங்கள் பறக்க தடை இந்த தேவாலயத்தினுள் 800 பேர் அமரும் வசதி உள்ளது.



சுமார் 600 பேருக்கு அழைப்பிதழ் தரப்பட்டது. ஹாரி — மேகன் திருமணத்தை முன்னிட்டு வின்ட்சர் கோட்டையின் மீது இன்று விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டது. டென்ட் கொட்டாய்கள் டென்ட் கொட்டாய்கள் திருமணம் முடிந்ததும், மணமக்கள் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் சென்று பின்னர் வின்ட்சார் கோட்டைக்கு திரும்பினர். இதனால் அந்த வீதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. மணமக்களை காண்பதற்காக ஏராளமான மக்கள் வீதிகளில் டென்ட் கொட்டாய்கள் அமைத்து தங்கியிருந்தனர். லண்டன் வயலட் பேக்கரி லண்டன் வயலட் பேக்கரி அதைத்தொடர்ந்து அங்கு செயின்ட் ஜார்ஜ் அரங்கத்தில் வரவேற்பு நடக்கிறது. வரவேற்பு நிகழ்ச்சியில் மணமக்கள் வெட்டும் கேக்கை லண்டன் வயலட் பேக்கரி தயாரித்துள்ளது.

இளவரசர் ஹாரி, மேகன் மண விழாவில் மேகனின் தந்தை தாமஸ் மார்கில் கலந்துகொள்ளமாட்டார் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டு, ஹாரியின் தந்தையும், இளவரசருமான சார்லஸ், மணமகள் மேகனுக்கு தந்தை ஸ்தானத்தில் இருந்து திருமணத்தை நடத்தி வைத்தார். மாப்பிள்ளை தோழரான அண்ணன் தனது தம்பி ஹாரிக்கு மாப்பிள்ளை தோழராக அவரது அண்ணன் வில்லியம் கம்பீர உடையணிந்து வந்திருந்தார். அரச குடும்பத்தினர் அனைவரும் இந்த திருமணத்தில் பங்கேற்றனர். டென்னிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸ், இங்கிலாந்து நாட்டுத் திரைப்பட நடிகர் ஜேம்ஸ் கோர்டன் தன்னுடைய மனைவியுடன் திருமணத்திற்கு வந்துள்ளனர்.




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# குண்டோதரன் கதை 20

குண்டோதரன் குதிரையிலிருந்து குதித்து இறங்கி வந்து, சாலையில் நின்ற ஆயனரின் பாதங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். பின்னர், எழுந்து நின்று, "ஐயா! என்னை ஆசிர்வாதம் செய்யுங்கள். தங்களுடைய திருவருளினால்தான் நான் உங்களை தேடிக் கண்டுபிடித்தேன்" என்று சொன்னான்.




"ரொம்பவும் சந்தோஷம், குண்டோ தரா! நீ தேடிக் கொண்டு வந்து சேர்ந்ததில் எனக்கு வெகு சந்தோஷம். ஆனால் உன்னைக் கைவிட்டு விட்டு நாங்கள் வந்துவிட வில்லையே? நீ அல்லவா திடீரென்று எங்களைக் கைவிட்டு விட்டு மாயமாய் மறைந்து விட்டாய்?.. எங்கே அப்பா போயிருந்தாய்?" என்று ஆயனர் கேட்க, குண்டோ தரன், "குருவே! நான் என்ன செய்வேன்! காஞ் சியிலிருந்து அன்றைக்கு ரதம் ஓட்டிக்கொண்டு கண்ணபிரான் வந்தானல்லவா? அவன் ஒரு சமாசாரம் சொன்னான். என் பாட்டி எனக்குக் கல்யாணம் பண்ணி வைப்பதற்காகப் பெண் பார்த்து வைத்திருக்கிறாள் என்றும், உடனே வரச் சொன்னாள் என்றும் தெரிவித்தான். அப்புறம் காரியம் மிஞ்சிவிடப் போகிறது என்று உடனே போய் பாட்டியிடம் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டு வருவதற்காகக் காஞ்சிக்கு ஓடினேன். உங்களிடம் சொல்லிக் கொண்டு போகலாமென்று பார்த்தால், வீட்டில் உங்கள் இரண்டு பேரையும் காணவில்லை. ஒருவேளை தாமரைக் குளக்கரையில் இருப்பீர்களோ என்று ஓடிப்போய்ப் பார்த்தால், அங்கேயும் உங்களைக் காணவில்லை. இந்தப் புத்த பிக்ஷு தான் தாமரைக் குளக்கரையில் நின்று கொண்டிருந்தார்..' என்று சொல்லிக் குண்டோ தரன் நாகநந்தியடிகளை ஏறிட்டுப் பார்த்தான்.

"என்னைச் சொல்கிறாயா, தம்பி? இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தில் உள்ள புத்த பிக்ஷு நான் ஒருவன்தானா? வேறு யாரையாவது பார்த்திருப்பாய்!" என்றார் நாகநந்தி அடிகள்.

"இல்லை, சுவாமி, இல்லை! தங்களைத்தான் பார்த்தேன். கையிலே ஏழெட்டு ஓலைச் சுருள்களை வைத்துக்கொண்டு, ஒரு ஓலையைப் படித்துக் கொண்டிருந்தீர்கள். நாகப்பாம்பு சீறுவதைப்போல் சீறிக் கொண்டிருந்தீர்கள்.."

சிவகாமியின் மனத்தில் அப்போது சுறுக்கென்றது. மரப் பொந்திலே அவள் வைத்திருந்த மாமல்லரின் ஓலைகள் காணாமற்போனது அவளுக்கு நினைவு வந்தது.

அப்போது நாகநந்தி, "என்ன அப்பா உளறுகிறாய்? நானாவது தாமரைக் குளக்கரையில் நின்று ஓலை படிக்கவாவது?" என்றார்.

ஆயனரும், "வேறு யாராவது இருக்கும் குண்டோ தரா! அப்புறம் உன் கதையைச் சொல்!" என்றார்.

"இல்லை, குருவே! இவரையேதான் பார்த்தேன். இவருடைய முகத்தையும் இவர் சீறுவதையும் பார்த்ததும் எனக்கு என்ன தோன்றிற்று தெரியுமா? ஆ! அதைச் சொல்லக்கூடாது சொன்னால், பிக்ஷுவுக்குக் கோபம் வரும். கோபம் வந்து என்னைக் கடித்தாலும் கடித்து விடுவார்!" என்றான்.

நாகநந்தியின் கண்களில் தீப்பொறி பறந்தது. ஆயனரோ நிலைமை விரஸமாய்ப் போய்க் கொண்டிருப்பதை உணர்ந்து, "பாருங்கள் சுவாமி! இப்பேர்ப்பட்ட புத்திசாலி சிஷ்யனை வைத்துக் கொண்டு என்ன சிற்ப வேலையைச் செய்வது? அதனால்தான் எட்டு மாதமாக நான் ஒன்றும்




செய்யவில்லை.... போகட்டும் குண்டோ தரா! அப்புறம் உன் கதையைச் சொல்லு! உன் பாட்டி பேசிவைத்த பெண்ணின் கதி என்ன?" என்றார்.

"குருவே! பாட்டியிடம் கண்டிப்பாய்ச் சொல்லி விட்டேன். 'பாட்டி, பாட்டி! நம்முடைய மகேந்திர சக்கரவர்த்தியின் குமாரர் மாமல்லர் எத்தனை எத்தனையோ ராஜாக்கள் பெண் கொடுப்பதாக வந்தும் இன்னும் கலியாணம் பண்ணிக் கொள்ளாமல் பிரம்மச்சாரியாயிருக்கிறார். என் குருநாதருடைய செல்வப் புதல்வி சிவகாமிக்கு இன்னும் கலியாணமாகவில்லை. அவர்கள் எல்லாம் அப்படி இருக்கும்போது எனக்கு மட்டும் கலியாணம் என்னத்திற்கு, பாட்டி? நீ வேணுமானால் கலியாணம் பண்ணிக்கொள் நான் கிட்ட இருந்து நடத்துகிறேன்' என்று சொன்னேன்...."

குண்டோ தரன் இவ்வாறு கூறியதும், எல்லாரும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள். சிவகாமியின் அத்தையும் கூடச் சிரித்துவிட்டு, "என்னத்திற்காகச் சிரிக்கிறீர்கள்?" என்று சிவகாமியைக் கேட்டாள்.

"குண்டோ தரனுக்குக் கலியாணமாம்!" என்றாள் சிவகாமி.

ஆயனர், "சரி தம்பி! நாங்கள் இங்கே கிளம்பி வந்தது உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டார்.

குண்டோ தரன் சொல்கிறான்: "குருவே! பாட்டியிடம் அவசரமாகச் சொல்லிவிட்டு ஓட்டம் ஓட்டமாய் நமது வீட்டுக்கு வந்து பார்த்தால், வீடு பூட்டிக் கிடந்தது! நம்முடைய குருநாதரே நம்மைக் கைவிட்டு விட்டார். இனிமேல் கடவுள்தான் நமக்குத் துணை என்று தீர்மானித்து அப்படியே மரத்தடியில் படுத்துத் தூங்கிப் போய்விட்டேன்.

"அப்போது பாருங்கள்! கடவுளே பார்த்து அனுப்பியதுபோல் நமது குமார சக்கரவர்த்தியும் புதிய தளபதி பரஞ்சோதியாரும் அங்கே வந்து சேர்ந்தார்கள்!"

"யார் வந்தது!" என்று ஆயனர், சிவகாமி இரண்டு பேரும் ஏக காலத்தில் கேட்டார்கள்.

"மாமல்லரும் தளபதி பரஞ்சோதியாரும் வந்தார்கள். குதிரை மேல் வந்தார்கள்! ஆகா! குதிரை என்றால், அதுவல்லவா குதிரை..."

"அப்புறம்!" என்றார் ஆயனர்.

"அவர்களுக்குப் பின்னால் இன்னும் பல குதிரை வீரர்கள் வந்தார்கள். கண்ணபிரான் ரதம் ஓட்டிக் கொண்டு வந்தான்.

"சரி, அப்புறம் என்ன நடந்தது?" என்றார் ஆயனர்.

மாமல்லர் வந்தார் என்று கேட்டதும் சிவகாமிக்குத் தலை சுற்றியது, தேகமெல்லாம் நடுங்கியது.



என்னவெல்லாமோ கேட்க வேண்டுமென்று உள்ளம் துடித்தது, உதடுகளும் துடித்தன. எனினும், "யார் வந்தது?" என்று கேட்டதற்குப் பிறகு அவளுடைய வாயிலிருந்து வார்த்தை எதுவும் வரவில்லை. ஆனால், விஷயத்தைச் சொல்லாமல் குண்டோ தரன் என்னவெல்லாமோ சொல்லிக் கொண்டிருந்ததில் அவளுக்குக் கோபமாய் வந்தது.

குண்டோ தரன் சொல்கிறான்: "குருவே! வீடு பூட்டிக் கிடந்ததைக் கண்டதும் எனக்கு எவ்வளவு தடபுடல்?.. நான் கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்து மரத்தின் பின்னாலிருந்து வெளியே வருவதற்குள்ளே அவ்வளவு குதிரைகளும் காற்றாய்ப் பறந்து மறைந்து போய் விட்டன..."

சிவகாமியின் உள்ளத்தில் அப்போது மகிழ்ச்சி, பயம், கோபம், கவலை முதலிய உணர்ச்சிகள் ததும்பி, புயற்காற்று அடிக்கும்போது சமுத்திரம் கலங்குவது போல் கலங்கச் செய்து கொண்டிருந்தன. மாமல்லர் தன்னைத் தேடி வந்தார் என்பதில் மகிழ்ச்சி; அவருக்கு வந்த கோபத்தைக் கேட்டதில் பயம்; அவர் வருவதற்கு முன்னால் கிளம்பும்படி செய்த நாகநந்தியின் மேல் கோபம்; செய்த தவறை எப்படித் திருத்துவது என்பது பற்றிக் கவலை இப்படிப்பட்ட பலவகை உணர்ச்சிகளுக்கிடையே ஒரே ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள அவளுக்கு ஆவல் துடிதுடித்தது. ஒருவாறு நெஞ்சை உறுதிப்படுத்திக்கொண்டு, "அப்பா! குண்டோ தரன் சொல்வது எனக்கு நிஜமாகத் தோன்றவில்லை. குமார சக்கரவர்த்தியாவது, நம் வீட்டுக்கு வரவாவது? அவர்தான் யுத்தத்துக்குப் பயந்துகொண்டு கோட்டையில் ஒளிந்து கொண்டிருந்தாரே!" என்றாள்.



ஆயனர் அதற்கு மறுமொழி சொல்லத் தெரியாதவராய் குண்டோ தரனைப் பார்க்க, அவன்,"குருவே! இப்படிப்பட்ட நாராசமான வார்த்தைகள் சிவகாமி அம்மையின் வாயிலிருந்துதானா உண்மையில் வெளிவந்தன? வீராதி வீரரான மகாமல்லவராவது, யுத்தத்துக்குப் பயந்து கோட்டையில் ஒளிந்து கொண்டிருக்கவாவது? இப்பேர்ப்பட்ட கொடிய அவதூறை எந்தப் பாவி சிவகாமி அம்மையின் காதில் போட்டது? சக்கரவர்த்தியின் கட்டளைக்காக அல்லவா மாமல்லர் இத்தனை நாளும் கோட்டைக்குள்ளே இருந்தார். சக்கரவர்த்தியின் ஆக்ஞை வந்தவுடனே மாமல்லர் நேரே போர்க்களத்துக்கல்லவா புறப்பட்டுப் போகிறார்!"

கோபம் வந்ததோ அதைவிட மூன்று மடங்கு கோபம் நமது குமார சக்கரவர்த்திக்கு வந்துவிட்டது. மாமல்லர் குதிரையைத் திருப்பிவிட்டுக் கொண்டு போன வேகத்தைப் பார்க்க வேண்டுமே? அடே அப்பா! நமது குமார சக்கரவர்த்திக்கு இவ்வளவு மூக்குக்கு மேல் கோபம் வரும் என்பது எனக்குத் தெரியவே தெரியாது. குமார சக்கரவர்த்தியின் குதிரை திரும்பியதும், மற்றக் குதிரைகள் சட சடவென்று திரும்புவதற்குப் பட்டபாட்டைப் பார்க்க வேண்டுமே... என்ன அவசரம்? என்ன

"போர்க்களத்துக்கா? எந்தப் போர்க்களத்துக்கு?" என்று ஆயனர் கேட்க, "தெரியாதா, குருவே?

நாடு நகரமெல்லாம் அறிந்த விஷயமாயிற்றே? மகேந்திர சக்கரவர்த்தி வடபெண்ணைக் கரையில் முடக்கப்பட்டிருக்கும் தைரியத்தினால், கங்க நாட்டுத் துர்விநீதன் காஞ்சியின் மேல் படையெடுத்து வரும் செய்தி தங்களுக்குத் தெரியாதா? அவனையும் அவனுடைய படையையும் எதிர்த்துத் துவம்ஸம் செய்வதற்குத்தான்




மாமல்லர் திருக்கழுக்குன்றத்திலிருந்து நமது தற்காப்புப் படையுடன் போயிருக்கிறார். சற்று முன்னால், இந்தச் சாலையில் ஒரு படை போயிற்றே, நீங்கள் பார்க்கவில்லையா? அந்தப் படை தென் பெண்ணைக் கரையிலேயே காவலுக்கு இருந்த படை. போர்க்களத்திற்குப் போகும் மாமல்லருடனே சேர்ந்து கொள்ளத்தான் போகிறது. இதையெல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ளவில்லையா?" என்றான் குண்டோ தரன்.

வெகு சாதுவாகவும், பேசவே தெரியாத மந்தனாகவும் இத்தனை நாளும் தோன்றிய குண்டோ தரன் இப்போது இவ்வளவு வாசாலகனாய் மாறியிருந்தது ஆயனருக்கு ஒரே ஆச்சரியத்தை அளித்தது. அவனிடம் இன்னும் ஏதோ அவர் கேட்கப் போனார்.

அந்தச் சமயம், நாகநந்தி கலக்கமடைந்த குரலில், "ஆயனரே! நன்றாய் இருட்டி விட்டதே? மிச்ச வழியையும் கடந்து இரவு தங்குவதற்கு அசோகபுரிக்குப் போய்விட வேண்டாமா! குண்டோ தரன் நம்முடன் வருகிறானே, எல்லா விவரங்களும் சாவகாசமாய் அவனிடம் கேட்டுக் கொண்டால் போகிறது!" என்றார்.

உண்மையிலேயே அப்போது நன்றாய் இருட்டிவிட்டிருந்தபடியால், நாகநந்தியின் முகத்தை யாரும் நன்றாய்ப் பார்க்க முடியவில்லை. பார்க்க முடிந்திருந்தால், அந்தக் கோரமான முகம் அப்போது இன்னும் எவ்வளவு சர்வ கோரமாயிருக்கிறதென்று அறிந்து பயந்து போயிருப்பார்கள்.

ஆயனர் சிவகாமியைப் பார்த்து "குழந்தாய்! அடிகள் கூறுவது உண்மைதான். வண்டியில் ஏறிக்கொள்! குண்டோ தரனிடம் எல்லாம் பிறகு விவரமாய்க் கேட்கலாம்" என்றார்.

சிவகாமியின் உள்ளத்தில் குண்டோ தரனைக் கேட்பதற்கு எத்தனையோ கேள்விகள் தோன்றிக் கொண்டிருந்தன. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக அவள் ஒரு கேள்வி கேட்க விரும்பினாள். அதாவது, குண்டோ தரனுக்குக் குதிரை எப்படிக் கிடைத்தது? ஒருவேளை குமார சக்கரவர்த்தியின் கோபம் தணிந்து தங்களைப் போய்த் திருப்பி அழைத்து வருவதற்காக அவர்தான் குண்டோ தரனுக்குக் குதிரை கொடுத்து அனுப்பியிருக்கிறாரோ என்று அவள் மனத்திற்குள்ளே ஒரு சபல நினைவு தோன்றியது.

எனவே "அப்பா! அத்தை வண்டியில் ஏறிக் கொள்ளட்டும் நான் சற்று நேரம் உங்களுடன் நடந்து வருகிறேன்" என்றாள்.

(சபதம் தொடரும்)




# கல்லாமை

## கல்லாதார் இல்லாதார் நாடு

**வா**ழ்க்கையில் தொடர்ச்சியான வெற்றியடைய ஒரே வழி வாழ்நாள் முழுவதும் கற்றல். கற்றல் என்றென்றும் இனிமை.

கடந்த நூண்டின் முக்கியமான ஐந்து கண்டுபிடிப்புகளான டெலிவிஷன், கம்ப்யூட்டர், ஏடிஎம் என்ற 24 மணி நேர வங்கி சேவை, கைபேசி, இணையதளம் உள்ளடக்கிய டிஜிட்டல் தொழில்நுட்பம் சமுதாயத்தின் வாழ்க்கைத்தரத்தை மாற்றிவிட்டது. உலகம் கையளவில் வந்துவிட்டது.




ஆனால் இவற்றுக்கெல்லாம் முன்பு வண்டிகள் மூலம் பொருட்களையும் மனிதர்களையும் சுலபமாக எடுத்துச் செல்ல உதவிய சக்கரம் கண்டுபிடிப்பு, ஜெர்மானியர் குடன்பர்கின் அச்சு இயந்திரம் மனிதனின் சிந்தனையை வளர்த்தது, அறிவுப் பரிமாற்றத்திற்கு வித்திட்டது.

செயற்கை அறிவு, தானியிங்கி (ரோபோடிக்ஸ்) சாதனங்கள், ஸ்டெம் செல் —உயிரணு வழி சிகிச்சை, சூரிய சக்தி, காற்றாலை மூலம் இயற்கையாக பெறப்படும் புதுப்பிக்கத்தக்க சக்தி போன்ற விஞ்ஞான முன்னேற்றங்கள் வருங்காலத்தில் பிரமிக்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும் என்கிறார்கள்.

உலகிலேயே அதிகமான இளைஞர்களை கொண்ட நம் நாடு, வரவிருக்கும் மாற்றங்களில் பங்கு கொள்ள, உருவாக்க, பயனடைய, இளைய சமுதாயத்தை தயார் செய்ய வேண்டும். இவையெல்லாம் தரமான கல்வி மூலம்தான் சாத்தியமாகும். பாடத்திட்டத்தை அதற்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டும். உயர்தர புத்தகங்கள் அவசியம். புத்தகங்களே ஞானத்தின் வேர்கள். நவில்தொறும் நூல்கள் என்ற வள்ளுவர் வாக்குப்படி நூல்களின் இனிய நயனங்கள் உறுதுணையாக வேண்டும்.


சரித்திர ஏடுகளை புரட்டினால் கிரேக்க நாட்டில் சாக்ரடீஸ், ப்ளேட்டோ போன்றவர்கள் சம்பிரதாய மூட நம்பிக்கையைத் துறந்து, எந்த ஒரு கருத்தையும் சுயமாக சிந்தித்து அலசி ஆராய்ந்து உணர்ந்து ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ கற்றுக் கொள்ள வேண்டும் என தர்க்கத்தின் அடிப்படையில் சமுதாயத்தில் அறிவு வளர புதிய பாதையை வகுத்தனர். கல்வி கற்பதின்

# இல்லாமை

**ஆர்.நடராஜ்**

குறிக்கோள், ஒரு மாணவனுக்கு சுதந்திரம் என்ற சிறகுகளையும் பொறுப்பு என்ற வேர்களையும் அளிக்க வேண்டும்.

உலகமயமாக்கல், தாராளமயம் என்ற கொள்கைகள் சர்வதேச பொருளாதார முறைகளை மாற்றியமைத்தது. அதற்கு ஏற்றவாறு கல்வியின் தரத்திலும் காலத்திற்கு உகந்த நவீன யுக்திகளை கையாள வேண்டிய கட்டாயம் உள்ளது. பல நாடுகள் இதற்கான நடைமுறைகளை கண்டறிந்து தொடர் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். ஆனால்




நமது நாட்டில் விவாதம் நடந்து கொண்டே இருக்கிறது. காலம்தான் கழிகிறது, தெளிவு இன்னும் பிறக்கவில்லை.

அவசரம் அவசரமாக சமச்சீர் கல்வி என்ற பாடத் திட்டத்தை உருவாக்கினர். நடைமுறைப்படுத்த வேண்டிய நிலையில் புதிய அரசு 2011—இல் முழுமையாக ஆராய்ந்து செயல்படுத்த ஒரு குழுவை அமைத்தது. அதில் மிகச் சிறந்த கல்வியாளர்கள், தரமான கல்வி புகட்டுவதில் வெற்றி கண்டவர்கள் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் அளித்த பரிந்துரைகள் சிபிஎஸ்இ, ஐசிஎஸ்இ போன்ற நாட்டில் நடைமுறையில் உள்ள சிறப்புகளை ஆராய்ந்து, அவற்றின் அடிப்படையில் நம் மாணவர்களுக்குப் பயனளிக்கும் என்ற நோக்கில் தயாரிக்கப்பட்டடது. மேலும் நிபுணர்களிடமும் சமூக மேம்பாட்டு நல்லெண்ணம் படைத்தவர்களிடம் கருத்தறிந்து, விவாதத்திற்குப் பிறகு நடைமுறைப்படுத்த இருந்தது.


ஆனால் அதற்குள் பல எதிர்ப்புகள். நமது மாணவர்கள் பாட நூல்கள் கடினமாக்கினால் கஷ்டப்படுவார்கள், ஏழை மாணவர்கள் கிராமப்புற மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் போன்ற பல கருத்துக்கள். புதிய பாடத்திட்டம் சமூகநீதிக்கு எதிரானது என்று திரித்து, நல்லது நடப்பதை உச்சநீதிமன்றம் வரை சென்று

தடுத்தார்கள். விளைவு என்னாயிற்று? இளைய சமுதாயம்தான் பாதிக்கப்பட்டது. உயர்கல்வி போட்டித் தேர்விகளில் நமது மாணவர்கள் சோபிக்க முடியவில்லை.

‘உண்மை தன்னை தயார் செய்து கொண்டு கிளம்புவதற்குள் பொய்யுரை எல்லா இடங்களிலும் பரவி உறையும்‘ என்ற வின்ஸ்டன் சர்ச்சில் முதுரை ஒவ்வொரு நிலையிலும் நிருபணமாகிறது. பொய்களை சமூக வலைதளங்களில் மேயவிடுகிறார்கள். படம் பிடித்து அதனை சிறிது மாற்றி உண்மைபோல் சித்திரிக்கிறார்கள். சென்னையில் போக்குவரத்து காவல் அதிகாரியை தள்ளுமுள்ளு செய்தவன், ஏதோ அவன் தாக்கப்பட்டதுபோல் நடித்தது வாட்ஸ்அப்பில் பரிமாறப்படுகிறது. உடனே அதை ஆராயக் கூட பொறுமையில்லாது, அரசியல்வாதிகள் போட்டி போட்டுக்கொண்டு கண்டன அறிக்கை விடுகிறார்கள். உண்மை நிலை தெரிந்தாலும் மாற்றறிக்கை மூலம் விளக்கம் அளிக்கும் பண்பு இல்லை. இவையெல்லாம் கல்வி கற்ற பயனா அல்லது அரைவேக்காடு கல்வியால் வந்த வினையா!

‘ஒரு நாட்டினை அழிக்க அணு ஆயுதம் தேவையில்லை அந்த நாட்டின் கல்வியின் தரம் குறைந்தால் கல்வித் துறையில் முறைகேடுகள் நடந்தால் அந்த நாடு அழிவது நிச்சயம்‘ — இந்த வாசகம் தென் ஆப்பிரிக்கா பல்கலைக்கழக நுழைவு வாயிலில் வைக்கப்பட்டுள்ளது.

தரம் குறைந்த கல்வியால் உருவான மருத்துவர்கள் கையில் நோயாளிகள் உயிரிழப்பார்கள், அத்தகைய பொறியாளர்கள் கட்டிய கட்டடங்கள் இடிந்து விழும், கணக்காயர்கள் பொருளாதார வல்லுநர்கள் கையில் பணம் விரயமாகும், மானுடம் அழியும் போலி சாமியார்கள் ஆதிக்கத்தில், நீதியரசர்கள் கையில் நீதி தொலைந்துவிடும், முடிவில், கல்வி அழிந்தால் நாடே அழியும். இது முற்றிலும் உண்மை.




பள்ளிப் படிப்பு ஒரு மாணவனை உலகளாவிய குடிமகனாக உருவாக்க வேண்டும் என்று ஹார்வர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் பெர்னாண்டோ ரீமர்ஸ் வலியுறுத்துகிறார். அதுதான் இன்றைய காலகட்டத்தின் கட்டாயம். அதற்கேற்றவாறு பாடத் திட்டம் தொடர்ந்து செதுக்கப்பட வேண்டும்.


ஆசிரியர்கள் எல்லை தாண்டிய சிந்தனை படைத்தவர்களாக மாணவர்களை மேல் நோக்கிப் பயணிக்க உதவ வேண்டும். மாணவர்களுக்கு இரண்டு தலைமைப் பண்புகள் அவசியம். ஒன்று, ஆழமான நல்லியல்புகள். இரண்டாவது, சமூகம் சார்ந்த பொருளாதார வகுத்துணர்வு.

சமுதாய சிந்தனை வளர, வேறு உள்நோக்கம் இன்றி, கருத்துப் பரிமாற்றம் வெளிப்படையாக அமைய வேண்டும். இன்னும் நாம் இராம ராஜ்ய சுபிக்ஷம், புஷ்பக விமானம், ஆர்யபட்டரின் விண்வெளி ஆராய்ச்சி போன்ற பண்டைக்கால சிறப்பைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். நிகழ்கால மேன்மைதான் நம்முடைய சிறப்பை பறை சாற்றும். ஐயாயிரம் ஆண்டுகள் முன் இந்திய சமுதாயத்தின் உயர்வையும், பண்டைத்தமிழரின்

சாதனையையும் எவ்வளவு காலம்தான் பேசி மார் தட்டுவது! மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளும் விவேகமும் அடக்கமும் வேண்டும்.

இப்போதுள்ள கல்வி முறை சுயதொழில் செய்யவும் சொந்தக் காலில் நிற்கவும் வலிமை தராது. சுயமாக தொழில் துவங்குவதற்கான நம்பிக்கையை இளைஞர்களிடம் ஊட்டுவதாக இல்லை. முக்கால்வாசி இளைஞர்கள் எந்த ஒரு பணிக்கும் சரியாக பயிற்சி பெறுவதில்லை என்று வேதனைப்படுகிறார் இன்போசிஸ் நிறுவனர் நாராயணமூர்த்தி.

பாடங்களை மனப்பாடம் செய்து ஒப்பிப்பதாலும் புரியாமல் தேர்வில் அப்படியே எழுதுவதாலும் சுயசிந்தனை வளராது. சுயதொழில் செய்யவும் சொந்தக் காலில் நிற்கவும் வலிமை தராது.




எந்த ஒரு சீர்திருத்த முயற்சி எடுத்தாலும் குறுக்குசால் ஓட்ட பலர் கிளம்பிவிடுவார்கள். குறை சொல்பவர்க்கு பஞ்சமில்லை. இதையும் மீறி நல்லதோர்பள்ளிக் கல்வித் திட்டம் உருவாவது அற்புதம். வெளிப்படைத் தன்மை, விரைவான தீர்வு இவை இரண்டும் அரசுப் பணிகளில் நடை முறைக்கு வந்தால் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். பள்ளித் தேர்வு முடிவுகள் கைபேசி மூலம் தேர்வர்களுக்கு அளிக்கப்பட்டது மகிழ்ச்சிகரமான மாறுதல். தரமான கல்விக்கு அடிப்படை நல்லாசிரியர்கள். ஆசிரியர் தேர்வு துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

பள்ளி மாணவ மாணவியருக்கு மடிகணினி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு ரூ.30.54 கோடி செலவில் 24,630 மடிகணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர பாடப் புத்தகம் , கணினி உபகரணங்கள், காலணிகள், மிதிவண்டிகள் என்று பதினான்கு வகையான உதவி பொருட்கள் வழங்குவதோடு, மேல்நிலைக் கல்வி இடைநிற்றலை தவிர்த்திட சுமார் 22,000 மாணவர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது. போட்டித் தேர்வுகளில் பங்குகொள்ள மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் 412 மையங்கள் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

கட்டாயக் கல்வி திட்டத்தின் கீழ் 25% தனியார் பள்ளிகளில் சேர்க்கை உறுதி செய்ய இணையம் வழியாக கணகாணிக்கப்பட்டு சுமார் ஒரு லட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர் .

கல்வி செயலர் உதயசந்திரன் மேற்பார்வையில் பாடத்திட்டம் சீரமைக்கும் பணி மிக சிறப்பாக, அமைதியாக நடைபெற்று வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. இது நடைமுறைக்கு வருகையில் நாட்டில் உள்ள எல்லா பாடத்திட்டங்களைவிட உயர்ந்ததாக அமையும் என்பது உறுதி.

உயர்கல்வி சேர்க்கையில் 44% எய்தி இந்தியாவில் முதன்மை மாநிலமாக தமிழகம் விளங்குவதில் நாம் பெருமை கொள்ளலாம். இந்தியாவில் சராசரி விகிதம் 24.5%. மாவட்டந்தோறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விளைவுதான் இது என்பதில் சந்தேகமில்லை. 583 பொறியியல் மற்றும் 1464 கலை அறிவியல் கல்லூரிகள் தமிழகத்தில் உள்ளன.

உயர்கல்வி உலகத் தர வரிசையில் இடம் பெற இந்திய அரசு இருபது அரசு கல்விக்கூடங்களை, தெரிவுசெய்து அடுத்த பத்தாண்டுகளில் பத்தாயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யும் திட்டம் அறிவித்துள்ளது. கல்விக் கூடங்களைத் தெரிவுசெய்ய மேனாள் தலைமைத் தேர்தல் ஆணையர் என்.கோபாலசாமி தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளது. ஒவ்வொரு மாநிலமும் விண்ணப்பித்து நிதி ஆதாரம் பெற தமது தகுதியை நிரூபிக்க வேண்டும். கல்லாதார் இல்லாதார் நாடு என்ற இலக்குடன் மக்கள்தொகையில் 83% படிப்பறிவு எட்டிய தமிழகம், உயர் கல்வியில் உலகத் தர வரிசையில் இடம் பெற முயற்சிக்க வேண்டும்.




## சிரமம் தரும் சிறுநீர்ச் சுரப்பி !

ஆண்களின் அடிவயிற்றில் சிறுநீர்ப் பைக்குக் கீழே, சிறுநீர்ப் புறவழி தொடங்குகிற இடத்தில், சிறுநீர்ப் பையின் கழுத்தைச் சுற்றி, தசையாலான சுரப்பி ஒன்று உள்ளது. அதற்கு 'புராஸ்டேட் சுரப்பி' என்று பெயர்.

பொதுவாக, இளமைப் பருவத்தில் இது ஆரோக்கியமாகவே இருக்கும். வயது ஆக ஆக இது வீக்கமடையும். 'பினைன் புராஸ்டேட்டிக் ஹைப்பர்பிளேசியா' (Benign prostatic hyperplasia — ிறிபி) என்று இதற்குப் பெயர். 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த வீக்கம் ஏற்படுவது மிகச் சாதாரணமானதுதான். முதுமையில் தலைமுடி நரைப்பதைப்போல இதுவும் முதுமையின் ஓர் அடையாளம் எனக் கருதப்படுகிறது. இருந்தாலும் ஒரு நோயாக மாறும்போது, பலருக்கும் இது பிரச்சினை தரும் உறுப்பாகக் கருதப்படுவதுண்டு. முக்கியமாக, இந்தச் சுரப்பி வீக்கமடைந்து சிறுநீர்ப் பையை அழுத்திச் சிறுநீரை வெளியேற்றுவதில் பிரச்சினையை உருவாக்கும்.



சிறுநீர்ப் பாதையில் அடிக்கடி தொற்று ஏற்படும்போது, சிறுநீர்த் தாரை அடைத்துக்கொள்ளும்போது, சிறுநீர்ப்பையில் கற்கள் உருவாகும்போது, புராஸ்டேட் சுரப்பியில் அழற்சி ஏற்படும்போது என மற்ற காரணங்களாலும் சிலருக்கு புராஸ்டேட் சுரப்பி வீங்கிக்கொள்ளலாம்.

### அறிகுறிகள்

சிறுகச் சிறுகச் சிறுநீர் கழிப்பது, சிறுநீர் கழிக்கும்போது தடை உண்டாவது, சிறுநீர் கழிக்க ஆரம்பிக்கும்போது தயக்கம் ஏற்படுவது, இரவில் அடிக்கடி சிறுநீர் கழிப்பது, சிறுநீர் கழித்து முடித்த பின்னரும் இன்னும் சிறுநீர் உள்ளதுபோன்று உணர்வது, மீண்டும் சிறுநீர் கழிக்க வேண்டும் என்ற உணர்வு தோன்றுவது, கடைசியில் சொட்டுச் சொட்டாகச் சிறுநீர் சொட்டுதல் போன்றவை இதன் அறிகுறிகள். இந்த அறிகுறிகளோடு சிறுநீரில் ரத்தம் வந்தால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அது புராஸ்டேட் புற்றுநோயாக இருக்க வாய்ப்புண்டு.


### சிகிச்சை என்ன ?

சாதாரண புராஸ்டேட் வீக்கத்துக்குப் பயப்படத் தேவையில்லை. பெரும்பாலும், ஆரம்ப




டாக்டர் கு. கணேசன்

நிலையில் உள்ள வீக்கத்தை மருந்துகள் மூலமே குறைத்துவிடலாம். அப்போது அறிகுறிகளும் விடைபெற்றுக்கொள்ளும். ஒருவேளை அது மருந்துகளுக்குக் கட்டுப்படவில்லை எனும்போது, ‘டிரான்ஸ் யுரேத்திரல் ரிசக்சன் ஆஃப் புராஸ்டேட்’ (ஜிஹிஸிறி) எனும் எளிமையான அறுவைசிகிச்சை மூலம் அல்லது இப்போது வந்துள்ள நவீன முறையான லேசர் சிகிச்சையின் மூலம் இந்த வீக்கத்தைக் குறைத்துவிடலாம்.




*என்ன பரிசோதனை?*

உங்களுக்குள்ள புராஸ்டேட் பிரச்சினையை உறுதிசெய்ய, வயிற்றை அல்ட்ரா சவுண்ட் பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். அப்போதுதான் புராஸ்டேட் எந்த அளவில் வீங்கியுள்ளது, அதன் நிலைமை என்ன, எந்த அளவுக்குச் சிறுநீர் போவதை அது தடுக்கிறது என்பது போன்றவற்றைத் தெரிந்துகொண்டு, மாத்திரைகள் மட்டும் போதுமா அல்லது அறுவைசிகிச்சை தேவைப்படுமா என்பதை உறுதிசெய்ய முடியும்.

உங்களுக்கு அறுவைசிகிச்சை தேவைப்பட்டால் நீரிழிவு, உயர் ரத்தஅழுத்தம் போன்றவற்றை நல்ல கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, அறுவைசிகிச்சை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பான மேல் ஆலோசனைக்கு ஒரு சிறுநீரக அறுவைசிகிச்சை நிபுணரை நீங்கள் சந்திப்பது நல்லது.

*சிறுநீரக நோய்களுக்குப் பூசணிக்காய்!*

பாவபிரகாசர் என்ற ஆயுர்வேத வித்தகர்,



பூசணிக்காய் பற்றிய வர்ணனையில் — “உடலுக்குப் புஷ்டியைத் தருகிறது, ஆண்களுக்கு விந்தணு வளர்ச்சியைத் தூண்டுகிறது, செரிப்பதில் கடினமானது, பித்த ஊறலை குடலில் கட்டுப் படுத்துகிறது, ரத்தவாதம் எனும் வாயு, ரத்தத்தில் சேர்ந்து ஏற்படுத்தும் உடல் வலியைக் கட்டுப்படுத்துகிறது என்று கூறுகிறார்.

முற்றாத சிறிய பூசணிக்காய் — பித்தத்தை நன்கு கட்டுப்படுத்தும், நல்ல குளிர்ச்சியான வீர்யமுடையது. நடுத்தர வளர்ச்சியை உடைய பூசணிக்காய்— கபத்தை அதிகரித்து தலைபாரம், தலைவலி, மூக்கிலிருந்து நீர் ஒழுகுதல் போன்ற உபாதைகளுக்குக் காரணமாகலாம். நல்ல முற்றிய அல்லது நன்கு வளர்ந்த பூசணிக்காய், அத்தனை குளிர்ச்சியானது அல்ல, இனிப்புச் சுவையுடையது, பசியைத் தூண்டிவிடும், எளிதாக செரிமானமாகிவிடும். எல்லா வகையான பூசணிக்காய்களுமே, சிறு நீர்ப்பையைச் சார்ந்த உட்புற அழுக்குகளை அகற்றி சுத்தப்படுத்துபவை; மனதிற்கு இத மூட்டுபவை, மன உபாதைகளுக்கு நல்ல உணவாகவும், மருந்தாகவும் பயன்படும், மூவகை தோஷங்களாகிய வாத பித்த கபங்களை— பெரியவகை பூசணிக்காய் (நன்கு வளர்ந்த) சமநிலையில் நீடிக்கச் செய்பவை’ என்று மேலும் கூறுகிறார்.

நிகண்டு ரத்னாகரத்தில் — “மனிதர்களுடைய உடலிலுள்ள சப்த தாதுக்களாகிய ரஸம் — ரக்தம் — மாம்ஸம் — மேதஸ் — எலும்பு — மஜ்ஜை — விந்து ஆகியவற்றை வளர்க்கச் செய்கிறது. சிறுநீரை உற்பத்தி செய்யும் சிறுநீரகங்களில் ஏற்படும் உள்காயங்களை ஆற்றிவிடும். சர்க்கரை உபாதையுள்ளவர்களுக்கு நல்ல உணவு. சிறுநீரகக் கற்களை உடைக்கும், சிறுநீர் கழிப்பதில் ஏற்படும் தாமதத்தைக் குணப்படுத்தும். தண்ணீர் தாகத்தை நீக்கும். நாக்கில் ஏற்படும் ருசியின்மையை மாற்றும். குடல் வாயுவுடன் சேர்ந்து பித்தம் ஏற்படுத்தும் வேக்காளத்தை அடக்கும். பித்த ரக்தம் எனும் பித்த சூட்டை ரத்தத்தில் அதிகப்படுத்தி உடலெங்கும் ஏற்படும் எரிச்சலைக் குணப்படுத்தும். விந்தணுக்களில் வாயுவின் வரவால் ஏற்படும் வறட்சி, அவற்றில் ஏற்படும் குறைபாடுகளை சரி செய்துவிடும்‘ என்று கூறுகிறது.

தன்வந்தரி நிகண்டுவில் — “கொடியினத்தைச் சார்ந்த காய்களில், பூசணிக்காய் மிகவும் உயர்ந்தது. குடல் சார்ந்த வாத பித்த தோஷ சீற்றத்தை அடக்கக் கூடியது’ என்று வர்ணிக்கிறது.

ராஜ நிகண்டுவில் — “பழது பட்டுப்போன உடல் உறுப்புகளை புஷ்டிப்படுத்தும் திறனுடையது’ என்று கூறப்பட்டுள்ளது.

ஆயுர்வேத மருந்துகளில் பழுத்த கல்யாணப் பூசணிக்காயைக் கொண்டு — கூச்மாண்ட ரசாயனம் என்ற மருந்து மிகவும் பிரசித்தமானது. இந்த மருந்து வறட்டு இருமல், விக்கல், காய்ச்சல், மூச்சிரைப்பு, ரத்தபித்தம், நெஞ்சுப்புண், காசநோய் ஆகியவற்றைப் போக்கும். நெஞ்சுக் கூட்டிற்கு நல்ல வலுவூட்டும். ஞாபக சக்தி, எத்தனை பழைய விஷயமாக இருந்தாலும் நினைவுபடுத்தி எடுத்துக் கூறும் திறமை, உடல் மற்றும் மன வலுவைக் கூட்டும் சக்தி உடையது. அச்வினி தேவர்கள் எனும் மிகச் சிறந்த ஆயுர்வேத மருத்துவர்களால் கூறப்பட்டதாகும். இதயத்திற்கு ஏற்றதாகும்.

வட இந்தியாவில் பூசணிக்காய் அல்வா மிகவும் விரும்பி சாப்பிடப்படுகிறது. நல்ல இனிப்புச் சுவையுடைய இந்த அல்வா, உடலை வளப்படுத்துகிறது. தோலை நல்ல நிறமாக மாற்றுகிறது. மன மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறுது. அதனால் நீங்கள் பூசணிக்காய் சாப்பிடுவதால் நல்ல பலன்களை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பெறுகிறீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

க்ஷயம் எனும் கடுமையான இருமல் உபாதையால் ஏற்படும் உடல் பலவீனம், இளைப்பு, பெண்களுக்கு ஏற்படும் கடும் உதிரப்போக்கு, ருசியின்மை, மூலம் போன்ற உபாதைகளுக்கு — வெண் பூசணிச்சாறு 3.2 லிட்டர், வெல்லம் 3 கிலோ சேர்த்து பாகு வைத்து, வெண் பூசணி துருவல் நெய்விட்டு வறுத்து — 750 கிராம் சேர்த்துக் கிளறி, லேகிய பதம் வரும் போது, ஏல அரிசி, கிராம்பு, மிளகு, ஓமம், சுக்கு, பச்சிலை, திப்பலி ஆகியவை வகைக்கு 50 கிராம், கற்கண்டு 400 கிராம், நெய் 200 மி.லி. சேர்த்துக் கிளறி, பசித்தன்மைக்கு ஏற்ப 5 முதல் 10 கிராம் வரை சாப்பிட குணமாகும்.

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப்
பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும்
சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான
பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!




வியந்து
போவீர்கள் !!!

# SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648

# அனுபவம்

## முதுமையைப் போற்றுவோம் !

மனிதர்கள் தவிர்க்க நினைப்பதும், தள்ளிப்போட முடியாத விஷயமாகவும் உள்ளது முதுமை. குழந்தையாக பிறந்து முதுமையில் இறப்பது இயற்கையின் நியதியாக உள்ளபோதிலும், முதுமைப் பருவம் என்பது எளிதில் கடந்து செல்லக் கூடியதல்ல. மற்றவர்களின் உதவியை நாட வேண்டிய பருவத்தில் இருக்கும் முதியவர்கள் அனுபவிக்கும் இன்னல்களை காது



கொடுத்துக் கூட கேட்காத சூழலில் நாம் இயங்கிக் கொண்டிருக்கிறோம்.

முதியவர்களின் அனுபவம் நமக்குப் பல்வேறு விஷயங்களில் கைகொடுத்தபோதிலும் அவர்களுக்கு கை கொடுத்து உதவி செய்யவும் நம்மில் பலர் தயாராக இல்லை. அவ்வாறான முதிய பருவத்தில் அவர்கள் என்னவிதமான வேதனைகள், மனத் துன்பங்களை இன்றைய சமூகத்தில் பெறுகின்றனர் என்பதை ஓர் ஆய்வின் முடிவு நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

சென்னை, புதுதில்லி, கொல்கத்தா, மும்பை, ஆமதாபாத், பெங்களூரு, புவனேசுவரம், குவாஹாட்டி, ஹைதராபாத், லக்னௌ, ஷில்லாங் உள்ளிட்ட 19 நகரங்களில் 4,615 முதியோர்களை சந்தித்துப் பேட்டி கண்டுள்ளது. இதில் கிடைத்த தகவல்கள் நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது.

ஆய்வில் பங்கேற்றவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் தாங்கள் கொடுமைக்கு உள்ளாக்கப்படுவதாகவும், சமூகத்தில் புறக்கணிக்கப்படுவதாகவும் கருத்து தெரிவித்துள்ளனர். 53% பேர் தங்களுக்கு எதிராகப் பாரபட்சம் காட்டப்படுவதாகவும், 61 சதவீதத்தினர் தங்களின் பொறுமையான செயல்பாட்டால் சமூகம் தங்களை புறக்கணிப்பதாகவும், 52 சதவீதத்தினர் தங்களிடம் மக்கள் அதிக கடுமையாக நடந்துகொள்வதாகவும் தெரிவித்துள்ளனர். வாகனங்களை பொதுமக்கள் அலட்சியமாக பயன்படுத்துவதால் தங்களுக்கு சாலை விபத்துகள் தங்களுக்கு நேர்வதாக 38சதவீதத்தினரும், இதன் காரணமாகவே 42 சதவீதத்தினர் தங்களது வீட்டைவிட்டே வெளியே வர தயங்குவதாகவும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த கருத்துக் கணிப்பின் முடிவுகளைக் கொண்டு ஆராய்ந்தால், நவீன சமூகத்தை முதியோர் மிரட்சியுடனே அணுகுகிறார்களா அல்லது முதியவர்களை அலட்சியத்துடன் இளைய தலைமுறை அணுகுகிறதா என்ற கேள்விகள் எழுகின்றன.

சமூகத்தில் ஒவ்வொரு துறையிலும் தடம் பதித்தவர்கள் தற்போது தங்களது கால் தடத்தை சாலையில் பதிக்கவே அச்சப்படும் சூழல் உள்ளது. இன்றைய பரபரப்பான வாழ்வில் அனைத்துக்கும் வேகமாக ஓடிக் கொண்டே இருக்கும் நிலையில், தங்களின் உடல் இயலாமையால் மெதுவாக நடந்து செல்லும் ஒருவரைக் காணும் போது ஒருவிதமான கோபம் ஏற்படுவது இயற்கையானதுதான்.

ஆனால், ஓடிக்கொண்டே இருக்கும் நாமும் எப்போதும் ஓடிக்கொண்டே இருக்க முடியுமா?


# முதுமை

சு. முத்துக்குமார்

இந்தக் கேள்வியை மனதில் கொண்டு, முதியவர்களை நோக்கினால் அங்கே நமது முதிய உருவத்தை காணலாம். அவர்கள் மீது கருணை மழையைப் பொழிய வேண்டியதில்லை. ஆனால், நாமும் இதே தள்ளாமையை கண்டிப்பாக அடைவோம் என்பதை மனதில் கொண்டு செயல்பட்டால் மட்டுமே அவர்களின் வலியும், வேதனையும் புரியும்.

முதியோர் என்போர் ஒன்றுக்கும் முடியாதவர்கள் அல்ல. இந்த சமுதாயத்துக்கு தங்களது உடல் உழைப்பை வழங்கிவிட்டு, இப்போது தங்களது அனுபவத்தையும், அறிவையும் வழங்கத் தயாராக நமக்காக காத்திருப்பவர்களே முதியவர்கள். தங்களது அனுபவத்தை வளரும் தலைமுறையினர் பகிர்ந்து கொண்டு, அதன் மூலமாக அவர்கள் முன்னேற்றமடைய வேண்டுமென்ற எண்ணத்துடனே தங்களது அனுபவங்களை பிறருக்கு பகிர்கிறார்கள்.

முதுநெல்லியும், முதியவர்களின் பேச்சும் கசக்கும் என்ற முதுமொழிக்கு ஏற்ப, அவர்களது பேச்சை இன்று காது கொடுத்து கேட்காததால், நெல்லிக்காயை சுவைத்த பின்னர் கிடைக்கும் இனிப்பை புறக்கணிக்கிறோம் என்றே கொள்ள வேண்டும்.



வாழ்வின் கடைசிப் பருவத்தில் இருக்கும் முதியவர்களுக்கு எந்தவிதமான சிறப்புச் சலுகைகளையும் யாரும் காட்டுவதில்லை. அரசு, தனியார் அலுவலகங்கள், வணிக நிறுவனங்கள், பொழுதுபோக்கு மையங்களில் முதியவர்கள் எளிதில் சென்று வரும் வகையில் எந்தவிதமான சிறப்பு ஏற்பாடுகளும் கிடையாது. பேருந்தில் முதியவர்களுக்கான இருக்கை ஒதுக்கீட்டைக் கூட அவர்களால் பெற முடியாத நிலையே உள்ளது.

முதியவர்கள் கொண்ட கூட்டுக் குடும்பத்தினர் எவ்வளவு பெரிய பிரச்னையையும் சர்வ சாதாரணமாக கையாண்டு, அதிலிருந்து வெற்றிகரமாக மீண்டு, அதனையே சாதனையாக மாற்றுவதை நமது வாழ்வில் பல்வேறு கட்டங்களில் பார்த்து உணர்ந்திருப்போம். அவர்கள் அந்தக் குடும்பத்தின் அறிவு பொக்கிஷமாக இருந்து தங்களது அனுபவங்கள் மூலமாக பிரச்னைகளுக்குத் தீர்வு காண்கின்றனர்.

தற்போது இளைய வயதினரை அதிகமாகக் கொண்ட நாடாக விளங்கிவரும் இந்தியா, முதியவர்களின் அறிவுரைகளைக் கேட்டு, அதை தங்களது செயல் திட்டத்தில் இணைத்து பணியாற்றினால் வியத்தகு வெற்றிகளைப் பெறலாம்.

பொது வெளியில் அவர்களது இயலாமையை விமர்சிக்கும் வகையிலான நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைப்போம். உதவியை நாட விரும்பாத அவர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பும், கடமையும் இளைய தலைமுறையினருக்கு உள்ளது.

சமுதாயத்தில் மிகப்பெரிய எண்ணிக்கையிலான முதியவர்களை ஒதுக்கிவிட்டு எந்த சாதனையையும் யாராலும் நிகழ்த்த முடியாது.



# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு


# 2018 CALENDAR

2018


### JANUARY





### FEBRUARY




### MARCH




### APRIL




### MAY




### JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### AUGUST

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

### OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




editor@ithamil.com


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा